www.tamilarangam.net

# எரிமலை

ஓகஸ்ட் 2000

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்

ஓயாத அலைகள்-3இல்
நடந்தேறிய
யாழ் நோக்கிய சமர்கள்...

கடலிலே காவியம் படைப்போம்

## SEA TIGERS
### OF LIBERATION TIGERS



ஜூனில் நடந்த பாரிய கடற்சமரின் விளக்கம்...

## ஆட்டங்காணும் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு ஆழ்கடற் சமர் ஓர் அபசகுனம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கறைப் பூக்கள்

அக்கறைப் பூக்கள்

எரிமலை ஆசிரியருக்கு வணக்கம்,

உங்கள் இதழை 5 மாதமாக வாசித்து வருகின்றேன். ஆனையிறவு மீட்கப்பட்ட இதழ் வாசித்து மிகவும் சந்தோசம் அடைந்தேன். மீள்பார்வையாக ஒவ்வொரு மாதமும் நடந்த வெற்றி விடயங்கள் தொடர்ந்து வரும் பொழுது, நான் நினைப்பது எமக்கு தமிழீழம் கிடைத்த பின்னர் இளம் சந்ததியினருக்கு இதுகள் ஒரு வரலாற்று நிகழ்ச்சிகளாகவும், ஒவ்வொரு திகதியிலும் என்னென்ன நடந்தது என்று அவர்களும் படிக்கும்போது எவ்வளவு பெருமையளிக்கும். மாவீரர்களின் வரலாறு அறியும்போது நெஞ்சைத் தொடும். தொடர்ந்தும் புதுப்பொலிவோடு வரப் போகும் தாயகக் கனவுகள் சுமந்த எரிமலை இதழ்களுக்காகக் காத்திருக்கின்றோம்.

இசைஞானவதனி ஜெயராசா
எவ்ஸ்டோவ்
ஜேர்மனி

✉ ✉ ✉

அன்பின் எரிமலை ஆசிரியருக்கு,

எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். எரிமலை இதழ்கள் வீரம் பொங்கும் விவேகம் ததும்பும் இதழாக மட்டுமல்லாமல் அநீதிகளை அஞ்சாமல், அயராமல் சுட்டிக் காட்டி தமிழீழ எழுச்சிக்காக பாடுபடும் தங்களின் இதழ்+இதயசேவை என்றும் பாராட்டிற்குரியது. சொல்லப்போனால் தங்கள் இதழ் மேன்மேலும் வளர்ச்சியடைந்து சமூகப் பணிகளை என்றும், எல்லோரிடத்திலும் விதைக்கும் இதழாக அனைவர் கையிலும் தவழ வேண்டும் என்பதே எனது அவா.

த.மஞ்சு
திருப்பூர்
தமிழ்நாடு

✉ ✉ ✉

எரிமலை ஆசிரியருக்கு,

தமிழீழம் என்பதையே இலட்சியமாகக் கொண்டு இரவு பகல் பாராது பணியாற்றி, தமது உயிரையே அர்ப்பணித்துப் போராடும் வீரவேங்கைகளின் செய்திகளை தாங்கி வரும் எரிமலை இதழ் என்றும் உலகத் தமிழினத்தின் வரலாற்றின் ஆவணமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. மேலும் எரிமலையில் தொடர்ச்சியாக தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் சம்மந்தமான ஆக்கங்கள் தொடர்ச்சியாக வெளிவர வேண்டும்

பி.வீரமுத்து
வடலூர்
தமிழ்நாடு

@ @ @



சுரேஸ், ஒபகவுஸன், ஜேர்மனி

✉ ✉ ✉

தாய்மண் வெளியீட்டாளர்களுக்கு,

தாங்கள் அனுப்பும் அனைத்து எரிமலை இதழ்களையும் தவறாது படித்து வருகின்றேன். ஒவ்வொரு இதழிலும் புதுப்புது விடயங்கள் சேர்க்கப்பட்டும் வடிவமைப்பிலும் மெருகேறி வரும் எரிமலை இதழுக்கு, எனது பாராட்டுக்கள். தமிழீழத்தில் நடைபெறும் போர்க்களத்தினை எங்கள் வீடுகளில் இருந்தே பார்க்கும் சூழ்வு காட்டியாக எரிமலை இதழில் வெளிவரும் களமுனைக் கட்டுரைகள் விளங்குகின்றன. இவை எமக்கு விரைவில் உலகப் பரப்பில் தமிழனுக்கு ஒரு தாயகம் அமையும் என்பதை உணர்த்துகின்றன.

குமார்
சேலம்
தமிழ்நாடு

ஆசிரியருக்கு,

எரிமலை ஜூலை இதழ் கிடைக்கப் பெற்றேன். தலைவரின் உருவப் படத்தை செந்நிற அட்டையில் தாங்கி வந்த இதழைப் பார்த்தவுடன் படித்து முடித்து விட வேண்டும் போல் இருந்தது. கரும்புலிகளுக்கான சிறப்பிதழாக பலவிடயங்களை தாங்கிவந்த எரிமலையில் கறுப்பு ஜூலை குறித்த ஆழமான தரவுகள் தாங்கிய ஆக்கங்கள் இம்முறை வெளிவரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஓயாத அலைகள் ஓய்ந்துவிடாது என்ற விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு பாலசிங்கம் அவர்களின் பேட்டி கொடுக்கின்ற கைகள் அள்ளிக் கொடுக்க வைக்க வேண்டும் என்பது சொல்லாமல் சொல்வது போல்அமைந்திருந்தது.

வியாசனின் அமுதவாழ்வு முடிந்ததென எழுதவருகிறது காற்று என்ற தலைப்பிட்ட கவிக்களம் தாயகக் களமுனைக்கு எம்மை ஓர்கணம் அழைத்துச் சென்றது போன்ற உணர்வு ஏற்பட்டது.

திருக்குமார்
வெம்பிளி
இலண்டன்

✉ ✉ ✉

மதிப்பிற்குரிய ஆசிரியர் குழுவினருக்கு,

தாங்கள் ஒரு இதழ் அனுப்புகின்றீர்கள். ஆனால் இங்கு நூறு உணர்வாளர்கள் படித்து அறிகின்றார்கள். மே மாத இதழின் நடுப்பக்கத்தில் ஓயாத அலைகள்-03 நடவடிக்கையின் வெற்றிக்குறிப்புக்கள் இடம் பெற்றிருந்தன. ஆனால் அடுத்த கட்ட நகர்வு யாழ் நோக்கியது என உலகமே அறிந்திருந்தாலும், புலிகள் எப்போது தாக்குதலைத் தொடங்குவர் என்பதும், எப்படித் தொடங்குவர் என்பதும் காற்றும் அறியாத செய்திதான்.

அவர்களின் திட்டமிடலும், வழிநடாத்தும் தந்திரோபாயங்களும் யாழ் குடா வெற்றிக்கு பின்னால் உலகமே அதிசயிக்கத் தக்க நிகழ்வுகளாகப் போகின்றன.

ச.வேல்முருகன்
புதுச்சேரி
இந்தியா




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...

எரிமலை
ஓகஸ்ட் 2000

## கட்டுரை


| | |
|---|---|
| பயனற்ற முயற்சி | பக்கம் - 08 |
| போரில் இயலாமை, அரசியல் தீர்வில் நாட்டமின்மை அதள பாதாள நிலையை நோக்கி | பக்கம் - 16 |
| குடியேற்றங்களால் இழந்து போன தமிழ்ப் பிரதேசங்கள் | பக்கம் - 18 |
| உலகவங்கி கொடுத்த கவலை | பக்கம் - 20 |
| பொருளாதார நோயாளி | பக்கம் - 21 |
| எல்லை காக்கும் இல்லங்கள் | பக்கம் - 22 |
| பார்த்துச் சலித்த சிங்களத்தின் சமாதானக் கூத்து | பக்கம் - 30 |
| முல்லையும் பாலையும் வல்லையும் | பக்கம் - 32 |
| பட்டினியால் மடிந்த பபாவ்ரா | பக்கம் - 34 |
| பலிகொண்டு பழிதீர்க்கும் அணுகுமுறைக்கு பதில் என்ன? | பக்கம் - 39 |
| மரபணுவியலின் புதிய பரிமாணம் | பக்கம் - 40 |
| ஐநாவின் சட்டவல்லுனர்... | பக்கம் - 44 |


## அணையாத தீபங்கள்


| | |
|---|---|
| லெப்.கேணல் ராஜன் | பக்கம் - 45 |


## களமுனை


| | |
|---|---|
| குளிரில் விறைத்து குருதியில் குளித்து—அலையிசை | பக்கம் - 36 |


## கவிதை



| | |
|---|---|
| கானம்பாடி- புதியநிலா | பக்கம் - 09 |
| முரண்படும் தீர்வுகள்-அம்புலி | பக்கம் - 17 |
| நிமிர், காலத்தைப் பிரதிபலி- தணிகைமாறன் | பக்கம் - 43 |
| நாளொன்று தேய்ந்து நகரும்- திருநகர் பிரியா ஜெயக்குமார் | பக்கம் - 46 |


## தொகுப்பு


| | |
|---|---|
| வரலாற்றில் ஆழப்பதிந்த ஆவணியில் | பக்கம் - 15 |
| மீள்பார்வை ஜுலை | பக்கம் - 47 |
| கண்கள் கூறும் வார்த்தைகள் | பக்கம் - 48 |



10 மனிதக் கொடூரத்தின் உச்சம்


12 ஆழப்பரவிய வேர்களும் மீண்டும் பூத்தமலர்களும்





24 மீளாதபொறிக்குள் மூழ்கிப் போகும் இராணுவம்






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மிகவும் நவீனமான தொழில்நுட்ப யுகத்தை நோக்கி இன்றைய உலகம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. அறிவியலும் தொழில்நுட்பமும் அபார வளர்ச்சி கண்டு உலகத்தின் வளர்ச்சிப் போக்கில் புரட்சிகரமான மாற்றத்தை நிகழ்த்தி வருகின்றன. இந்த வளர்ச்சிப் போக்கின் தாக்கத்தால் முன்னேறிய நாடுகளின் சமூக, பொருண்மிய வாழ்வும் பிரமிக்கத்தக்க வகையில் மாற்றங்கண்டு வருகின்றது. இந்தப் புதிய யுகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்குவது அறிவியல் தொழில்நுட்பக் கல்வியாகும்.

அறிவுசார் கல்வியின் வளர்ச்சியால் மாறிவரும் உலக சமூகத்துடன் ஒப்பு நோக்குகையில் எமது தேசத்தின் கல்வி நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றது. இதற்குப் பிரதான காரணி சிங்கள இனவாத அரச ஒடுக்குமுறையாகும். இந்த ஒடுக்குமுறை எமது தேசத்தின் ஆற்றலையும் சக்தியையும் முடக்கி வைத்திருக்கின்றது.

எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாக விளங்கும் கல்வித்துறையைச் சிதைத்துவிடச் சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாகவே முனைந்து வருகின்றது. சிங்கள மொழித்திணிப்பில் தொடங்கி, தரப்படுத்தல் என்றும், வெட்டுப்புள்ளி என்றும், காலத்திற்கு காலம் தமிழரின் கல்வியைச் சீர்குலைப்பதற்குத் திட்டமிட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது, இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில் இந்தக் கல்வியழிப்புக் கொள்கை மிகவும் நுட்பமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இப்படியான அரச ஒடுக்குமுறையின் நெருக்குதல்கள் காரணமாக எமது கல்வித்துறை என்றுமில்லாதவாறு பெரும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கின்றது.

எதிரியின் பாரிய அழிப்பு வேலைகளுக்கு மத்தியில் எமது விடுதலை இயக்கமானது, தனது சக்திக்குட்பட்டதாக, சில ஆக்க வேலைகளைச் செய்து வருகிறது. பெரியதொரு போருக்கு முகங்கொடுத்தவாறு, சமூக மேம்பாட்டிற்காக உழைப்பதில் பல இடர்பாடுகள் இருக்கவே செய்யும். விடுதலை வேண்டிப் போராடும் இனங்கள் இந்தப் பிரச்சனையை எதிர்கொள்வது இயல்பு.

எமது தேசம் விடுதலை பெற்று, நிலையான அமைதியும், உறுதியான அரசும் தோன்றும் பொழுதுதான் நாம் எமது சமூகப் பொருண்மிய வாழ்வை உயர்ந்த படிநிலைக்கு கட்டி எழுப்புவது சாத்தியமாகும். அப்பொழுதுதான் கல்வித்துறையையும் சீரானமுறையில் சீரமைத்து, எமது நாட்டின் நலன் பேணும் வகையில் மேம்பாடு செய்ய முடியும். தேசியக் கல்வித் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த முடியும். அறிவியல், தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து எமது நாட்டை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்ல முடியும்.

எமது சமூகத்தின் ஒட்டுமொத்தமான விடிவிற்கும் விமோசனத்திற்கும் தேசிய விடுதலை அத்தியாவசியமானது என்பதை நான் வலியுறுத்தத் தேவையில்லை. கல்வி உட்பட சகல சமூக அமைப்புக்களையும் ஒரு உன்னதமான வளர்ச்சிப் போக்கில் உயர்நிலைக்கு நகர்த்திச் செல்வதாயின் நாம் சுதந்திர மனிதர்களாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். இதனால்தான் தேசிய விடுதலையை எமது பிரதான இலட்சிமாக வரித்துக் கொண்டு நாம் போராடுகிறோம்.

இன்று நாம் ஒரு போர்ச்சூழலில் வாழ்கிறோம். இந்தப் போர்ச் சூழலில், எமது தேசிய வாழ்விற்கும் வளத்திற்கும் அடித்தளமாக சமூக நிறுவனங்கள் சிதைந்து போகாமல் பாதுகாப்பது எமது முதன்மையான பணியாக இருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு எமது விடுதலை இயக்கம் ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. குறிப்பாக கல்வித்துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமாக நாம் உருப்படியான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

## “எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருக்க வேண்டும்.”




**-தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன்**

(08.04.94 அன்று தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி விடுத்த அறிக்கையில் இருந்து)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பத்தொன்பதாம் ஆண்டு
ஓகஸ்ட்
*2000*

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail: erimalai@freesurf.fr

# தலைவாசல்

## கொழும்பு நாடகங்கள்

சந்திரிகாவின் நீண்டகால வெளிவிவகார உத்தியான தீர்வுப்பொதி (அரசமைப்புச் சீர்திருத்தம்) தோற்கடிக்கப்பட்டது. தமிழர்களின் நியாயபூர்வமான அரசியல் நிலைப்பாட்டை நிராகரித்து, அவர்களை சிறுபான்மையினர் என்ற பொறிக்குள் வீழ்த்தி வெறும் அதிகாரப் பரவலாக்கல் மூலம் சிங்கள-தமிழ்த் தேசிய இனச்சிக் கலைத் தீர்த்துவிடலாம் என்ற போலியான வாக்குறுதிகளை வழங்கிய பொதியை சிங்களப் பேரினவாதமே தமது உள் முரண்பாடுகளால் வீழ்த்திவிட்டது.

தமது அப்பட்டமான போர்வெறியை சமாதானத்திற்கான போர் என்ற நியாயப் படுத்தலுடன் முன்னெடுத்த சந்திரிகா அந்த நியாயத்திற்கான முகமூடியாக இந்தத் தீர்வுத்திட்டத்தை நீண்டகாலமாகப் பிரயோகித்தார். தமது தீர்வுத்திட்டம் தமிழ் மக்களுக்குப் பிராந்திய சுயாட்சி தருவதாக உலகிற்குக் கூறிக்கொண்ட சந்திரிகா, பௌத்தத்தைப் பாதுகாத்தவாறு சிங்கள அமைப்பிற்குள் தமிழ்ச் சிறுபான்மை யினரின் பிரச்சனைகளைத் தீர்க்கவே இத்திட்டமென தன் சிங்கள வாக்காளர் களுக்கு அறிவித்தார். உலக நாடுகள் சில இந்த சுயாட்சிப் பொய்களை நம்பின, அல்லது இந்தப் பொய்யான திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு எமக்கு உப தேசித்தன. தமிழர்களின் தேசிய விடுதலை இயக்கமான விடுதலைப் புலிகள் இத் திட்டமானது சிங்கள நலன் பேணும் திட்டமென்பதை அழுத்தம் திருத்தமாக அறிவித்தது. ஈற்றில் பௌத்த சிங்கள இனவாதம் தமது உள்முரண்பாடுகளில் சிதறுண்டு தீர்வுத்திட்டத்தைக்(?) குப்பைக்குள் வீசிவிட்டனர்.

ஆயினும் சந்திரிகா அரசின் உண்மையான தீர்வுத்திட்டம் என்ன என்பதை புதிதாக சந்திரிகாவால் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்ட ரட்ணசிறீ விக்கிரம நாயக்கா தெளிவாக வெளிக்காட்டியுள்ளார். பௌத்த பீடங்களுக்கு நெருக்கமான சிங்கள இனவாதியான விக்கிரமநாயக்கா போரையே தீர்வாகக்கூறியதுடன் சிறுபான்மையினருக்கு(?) பிரச்சனைகள் உள்ளனவா? என்ற சந்தேகத்தைக்கூட எழுப்பியுள்ளார். அப்படி பிரச்சனைகள் இருந்தால் அதனைத் தீர்க்கலாம் ஆனால் 'சிங்கள ஜனநாயகம் தமிழ்ப் பயங்கரவாதத்தை ஏற்காது' என விளக்கம் அவரால் தரப்பட்டது. தமது அரசின் தீர்வுத்திட்டங்கள் அனைத்தும் பிக்குகளின் கருத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கப்படும் எனக் கூறி சந்திரிகாவிற்கு சில கொழும்பு, இந்திய பத்திரிகைகள் ஏற்படுத்த முயலும் இனவாதமற்றவர் என்ற முகமூடியை விக்கிரமநாயக்கா கிழித்தெறிந்துள்ளார்.

தமிழ் மக்களுக்கான நீதியான தீர்வு தமிழீழம் ஒன்றேயென்பதை கொழும்பு நாடகங்கள் மீளக் கோடிட்டுக் காட்டியுள்ளன தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வரும் இராணுவ நிதி ஒதுக்கீடுகள் விடயங்களை அழுத்தமாக இடித்துரைக்கின்றன. தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சிங்களப் படைகள் ஆளும்கட்சிக்கு வாக்குச் சேகரிப்பதற்காக வன்னி மீதும் யாழ். குடாமீதும் எண்ணுக் கணக்கற்ற குண்டு வீச்சுக்களை மேற்கொள்ளுகின்றன. தமது வெற்றியை அறிவித்து சிங்கள வாக்காளர்களை திருப்திப்படுத்த பாடசாலை மாணவர்களையும், தொழிலாளர் களையும் சுட்டுக் கொல்கின்றார் சந்திரிகா.

இந்தச் சூழ்நிலைகளின் பின்புலத்தே தமிழர்களின் ஓயாத அலைகள் 3 படையணிகள் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான நகர்வுகளில் வீச்சுக் கொண்டு வருகின்றனர். மக்கள் பங்கேற்கும் யுத்தமாக மலர்ந்துள்ள தமிழர்களின் விடுதலைப் போர் வெற்றிக்கான அரசியல் இராணுவ இராஜதந்திர நியாயங்களை பெற்று வருகின்றது என்பதை உணர்ந்து அனைத்து புகலிடத் தமிழர்களும் புலிகளின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆட்டங்கா... ஆழ்கடற் ச...



வலுப்பெற்றுவரும் கடற்புலிகளின் செயற்திறனால் சிறீலங்காவினுடைய போர்வலுவின் உயிர்நாடி உலுப்பி எடுக்கப்பட்டு வருகின்றது. முல்லைக் கடற்பரப்பிலும், பருத்தித்துறைக் கடற்பரப்பிலும் யூன் 05, 25 ஆகிய தினங்களில் நடந்த பாரிய கடற்சமர்கள் தமிழீழக் கடற்பரப்பில் கடற்புலிகள் பெற்றுவரும் உறுதியான மேலாண்மையின் சான்றாகின. தமிழீழப் போரின் அடுத்த கட்டத்தைத் தீர்மானிக்கும் சக்தியை கடல்சார் போர் வலுவே பெற்றுவிட்ட நிலையில் கடற்புலிகள் தமது போர்த்திறனை உறுதிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக ஓயாத அலைகள் - 03 படையணிகளால் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டு பலவீனப்படுத்தப்பட்டுள்ள குடாநாட்டு ஆக்கிரமிப்பின் உயிர்வழி விநியோக மார்க்கம் பற்றிய உறுதியின்மையை இக்கடற்சமர்கள் ஏற்படுத்தியுள்ளன.

ஐந்து வருடங்களின் முன் யாழ் குடாநாடு சிங்களப்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, தனது தேசத்துடனான உறுதியான தொடர்புகளற்ற நீண்ட தொலைவில் வைக்கப்பட்டிருந்த அதன் படைகளின் இருப்புப் பற்றிய ஐயம் சாதாரண சிங்கள மக்களிடையேயும்கூட எழுந்திருந்தது. முல்லைத்தீவு இராணுவத் தளத்தை வெற்றி கொண்டதன் மூலம் வலுவான கடற்பரப்பொன்றை புலிகள் தமக்குச் சொந்தமாக்கியபோது பன்மடங்கு வலுவானது அவர்களின் இந்த ஐயம். தரைவழிப்பாதைக்கான உடனடி நெருக்கடியை சிங்களத் தலைமைக்கு ஏற்படுத்தியதும் இதுவே. அதுவும் புலிகளால் உறுதியாக முறியடிக்கப்பட்டபோது கடலை தம் பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதொன்றே அவர்களின் இறுதியான நிர்ப்பந்தமாகியது. இப்படி குடாநாட்டு ஆக்கிரமிப்பின் இருப்பு சிங்களத்தின் கடற்போர் வலுவில் தங்கிக்கொள்ள, அதன் மீட்பும் புலிகளின் கடற்போர் வலுவிலேயே தங்கிக்கொண்டது.

இந்நிலையில், குடாநாட்டு மீட்பின் ஓயாத அலைகள் - 03 நடவடிக்கையில் காத்திரமான பணிகளை கடற்புலிகள் கரம்சேர்த்தார் தலைவர் பிரபாகரன். தரையிறக்கல் நடவடிக்கைகளில் தமது உயர்நகர்திறனையும், செயற்திறனையும் நிரூபித்தனர் கடற்புலிகள். ஈற்றில் ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சி அச்சுறுத்தலற்ற நீண்ட கடற்கரையோரத்தை கடற்புலிகளுக்கு சொந்தமாக்கியபோது மேலும் பலம் கொண்டது கடற்புலிகளின் போராற்றல். இவை குடாநாட்டில் சிங்களப் படைகளின் இருப்பை வலுவான கேள்விக்குள்ளாக்கின.

தற்போதைய நிலையில் மாற்றுவழி ஏதுமின்றி, கடற்தொடர்பே யாழ் ஆக்கிரமிப்பின் உயிர்நாடி. தமிழன் கடலே சிங்களத்தின் உயிர்வழி. ஆனால், அதுவே தலைவர் பிரபாகரனின் போர்த்திட்டமிடலின் அடிப்படையும் ஆக்கப்பட்டாயிற்று. கடலில் புலிகள் ஆதிக்கம் மேலோங்கும் நிலையில் யாழில் சிங்களத்தின் இருப்பும் ஈற்றில் அத்துருப்புக்களின் மீட்புமே சாத்தியமற்றுப் போகும். இத்தகையதொரு நிலையில்தான் முல்லை, பருத்தித்துறை கடற்பரப்புக்களில் பாரிய கடற்சமர்களை நடாத்திமுடித்துள்ளனர் கடற்புலிகள்.

யூன் 05 அதிகாலை, காங்கேசன்துறை கடற்படைத்தளத்திலிருந்து சிறீலங்காக் கடற்படையின் வேக விநியோக தொடரணி ஒன்று திருமலை நோக்கிய தன் பயணத்தை தொடங்கியிருந்தது. 150 முதல் 200 வரையான துருப்புக்களை ஏற்றக்கூடிய இரு துருப்புக்காவிகளும் அவற்றிக்குப் பாதுகாப்பாக இரு அதிவேக சுப்படோறா பீரங்கிப் படகுகளும் கடல்ரோந்துப் படகுகளின் பாதுகாப்பில் பயணித்தன. கடற்புலிகளின் கெரில்லாப்பாணியிலான தாக்குதலுக்குரிய சாத்தியப்பாடுகள் அற்றதொரு சூழலையே தன் அதியுயர் பாதுகாப்பாகக் கொண்டிருந்தது அத்தொடரணி. தெளிவான பகற்பொழுதிலேயே தன் பயணத்தை முடித்து விடக்கூடியதாயும், கடற்புலிகளின் கட்டுப்பாட்டு நிலப்பரப்பிலிருந்து தூரவிலகி ஆழ்கடலில் பயணிக்கக்கூடியதாயும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது அதன் பயணம். வழமைபோலவே அது தாக்கப்படும் பட்சத்தில்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# னும் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு மர் ஓர் அபசகுனம்

- அ. பார்த்தீபன் -

கடல், வான்படையின் மேலதிக உதவிகளை அனுப்பக்கூடிய நிலையில் கடற்படை உயர் கட்டளைப்பீடம் இருந்தது.

யூன் 05 காலை 6.45 மணி சுண்டிக் குளம் கரையிலிருந்து சரியாக 24 கடல் மைல் உயரம். லெப். கேணல் மணியரசனின் தலைமையிலான முதலாவது படகுத் தொகு திக்கு எதிரியின் விநியோகத் தொடரணியை மறித்து வியூகமிடுவதற்தான கட்டளையை வழங்கினார் கடற்தளபதி கேணல் சூசை. படகுகள் உயரக் கடலேறின. பேரபாயம் சூழ்வதை உணர்ந்துகொண்ட டோறாக் களுடன் கடுமையாக மோதியவாறு தமது வியூகத்துள் அவற்றை சிக்கவைத்தன கடற் புலிகளின் படகுகள். அதிநவீன பீரங்கிகள் பொருத்தப்பட்ட இரு படையின் படகுகளுக் குமிடையே கடும் கடற்சமர் வெடித்தது.

எதிரியின் டோறாக்களை துணிச்சலாக நெருங்கினர் கடற்புலிகள். கடற்புலிகளின் துணிச்சலான முன்னகர்விற்கும், துருப்புக் காவிகளுக்கான தனது பாதுகாப்புப் பணிக் குமிடையே எதிரி டோறாக்கள் திணறின. ஒரு கட்டத்தில் லெப்.கேணல் ஆண்டா னின் கட்டளையிலான சண்டைப்படகு சடு தியான பீரங்கிக்குண்டுப் பரிமாற்றத்தின் பின் தான் எதிர்த்துநின்ற டோறாவை நெருங்கி அதை முற்றாகச் செயலிழக்கச் செய்தது. களத்தில் எதிரி தனது முதலாவது கடற் கலத்தை இழந்தான். சேதமடைந்திருந்த ஆண்டானின் சண்டைப்படகும் சற்றுநேரத் தில் ஆழ்கடலிலேயே இயங்கமறுத்து நின்றது.

தனது தொடரணி கடுமையாகத் தாக்கப் பட்டுக்கொண்டிருப்பதை அறிந்த கடற்படைத் தலைமை நாகர்கோவில் கடற்பரப்பில் ரோந் தில் நின்ற மேலும் இரு டோறாக்களை உட னடியாக சண்டைக் களத்திற்கு அனுப் பிவைத்தது. மேலதிக பலத்தை எதிரி பெற்று விட்ட நிலையில் அவன் மீது ஒரு திசை திருப்பும் தாக்குதலைச் செய்தவாறு மேலு மொரு படகுத் தொகுதியை புதியமுனை யில் சண்டைக்கு இறக்க முடிவுசெய்தார் தளபதி கேணல் சூசை.

மணியரசனின் படகுத்தொகுதி எதிரி டோறாக்களை கவர்ந்தபடி தாக்குதலில் ஈடுபட்டவாறு கரையை நோக்கி பின்நகர்ந் தது. சமநேரத்தில் உயரக்கடலேறிய லெப். கேணல் செழியனின் படகுத்தொகுதி ஏற் கனவே செயலிழந்து நின்ற டோறாவை மீட்கமுனைந்த டோறாமீது தாக்குதலை நடாத்தியவாறு புதியமுனையால் களத்தில் பிரவேசித்தது. எதிரியின் போர்வியூகம் ஆட் டம்கண்டது. புதிய வியூகம் அமைப்பதற் காய் டோறாக்கள் சண்டையிட்டன. நவீன பீரங்கிகள் பொருத்தப்பட்ட நிலையில் களத்தில் செயலிழந்து நின்ற தனது



டோறாவை பாதுகாப்பதில் எதிரி அதிக அக்கறை காட்டினான்.

கடுஞ்சமர் தொடர்ந்துகொண்டிருக்க சேதமுற்ற டோறாக்கள் களத்திலிருந்து வெளியேறின. செயலிழந்த டோறாவும் ஆண்டானின் சண்டைப்படகும் அப்படி அப் படியே களத்தில் நின்றன. எதிரிக்குத் துணை யாய் மேலும் சில டோறாக்கள் திருமலை, காங்கேசன்துறை கடற்தளங்களிலிருந்து களத்திற்கு வந்துசேர்ந்தன. அவசரமாக வரவழைக்கப்பட்ட விமானப்படையின் MI-24 உலங்குவானூர்திகளும் களத்தில் தாக் குதலை ஆரம்பித்தன. அதிகரித்துவிட்ட எதிரியின் பலத்துடன் கடுமையாகச் சண்டை யிட்ட கடற்புலிகளின் படகுத்தொகுதிக்கு மேலதிக பலம்சேர்க்க மேலுமொரு பட குத்தொகுதி லெப். கேணல் செழியனிடம் அனுப்பிவைக்கப்பட்டது.

புதிய பலம்பெற்ற இருபகுதியின் தாக்குதிறனும் மூர்க்கம் பெற்றது. சண்டை யின் ஒரு கட்டத்தில் செயலிழந்துநின்ற டோறாவிற்கும், அதை மீட்க முயற்சித்த டோறாவிற்கும் இடையில் துணிகரமாகப் புகுந்து அவற்றின் தொடர்பை அறுத்தவாறு தாக்கத்தொடங்கியது கடற்புலிகளின் சண் டைப்படகொன்று. ஏனைய படகுகளும் நெருங்கிவர மீண்டும் உடைந்தது எதிரி யின் போர்வியூகம். செயலிழந்த டோறாவை கைவிட்டு எதிரி டோறாக்கள் ஓட்டம்பிடித் தன. களத்தில் மேலாண்மை பெற்றனர் கடற்புலிகள். கடற்படைக்கலங்களை கடற் புலிகள் கலைத்துத் தாக்கத்தொடங்கினர்.

எதிரி டோறாக்களை எதிர்கொண்டு அவற்றுடன் சண்டையிட்டவாறு பின் தொடர்ந்த கடற்புலிகள் படகுகளை பக் கவாட்டாக இருமுனைகளாலும் MI-24 உலங்குவானூர்திகள் மூர்க்கமாகத் தாக் கின. அசாத்திய துணிவு மட்டுமே கடற் புலிகளின் கவசமாகியது. எதிரி டோறாக் களை நெருங்கித் தாக்கியபடியே இருந்தனர் கடற்புலிகள். எதிரியின் மற்றைய டோறா ஒன்றும் களத்தில் செயலிழந்தது. இன் னொன்று சேதத்துடன் களத்திலிருந்து பின்வாங்கிக்கொண்டிருந்தது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரம் 10.00 மணி. எதிரியின் கிபீர் யுத்த விமானங்கள் களத்தின் வான்பரப்பில் பிரவேசித்தன. எதிரிப் படகுகளுடன் நெருங்கிய தாக்குதலில் ஈடுபட்ட கடற்புலிகளின் படகுகளைத் தாக்கமுடியாதவாறு திணறிய அவை நீண்டநேரமாக சிரமப்பட்டன. தாக்குதல் நடாத்த தாழ்ந்தபோது கடற்புலிகளின் பீரங்கித் தாக்குதலால் மேலும் அது திணறியது. முதல்முறை தாக்கிய கிபீர் விமானங்கள் இரண்டாம் முறையும் தாக்குதல் நடாத்தியபோது தாக்குதலுக்குள்ளானது எமது படகல்ல, எதிரி டோறா ஒன்றே. செயலிழந்த டோறா புகைக்கத் தொடங்கியது.

ஆழ்கடலில் சண்டை தொடர்ந்தது. நிலைமையை எதிரியால் கட்டுப்படுத்த முடியவில்லை. பாதகமான களநிலையிலிருந்து தப்பியோடுதலே எதிரிக்கிருந்த ஒரே தெரிவானது. பேரழிவுகளைத் தவிர்க்கவே எதிரி விரும்பினான். நான்கு மணிநேரத்தையும் கடந்த நீண்ட கடற்சமரின் முடிவு எதிரியை பின்வாங்க நிர்ப்பந்தித்தது. மூழ்கும் நிலையிலிருந்த டோறா ஒன்றைக் கைப்பற்றிய கடற்புலிகள் அதிலிருந்த நவீன ஆயுதங்களை கைப்பற்றியபின் அதை மூழ்கடித்தனர். மூழ்கியபடியிருந்த மற்றைய டோறாவை எதிரிமீட்க முயன்றபோது அதுவும் மூழ்கிக் கொண்டது. ஈற்றில் மீளப்பயன்படுத்த முடியாதபடி சேதமுற்ற இரு டோறாக்கள் கட்டி இழுக்கப்பட்ட நிலையிலும், சாதாரண சேதங்களைத் தாங்கிய மற்றைய டோறாவுமாக எதிரிப்படகுகள் தம் தளம்திரும்பின. சிறிலங்காக் கடற்படை பேரிழப்பைச் சந்தித்தது. இவ்வெற்றிச் சமரில் கடற்புலிகள் படகொன்றின் கட்டளை அதிகாரி லெப். கேணல் ஆண்டான் உட்பட பதின்மூன்று கடற்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

தமிழீழக் கடலன்னையின் மடியில் நடந்த அன்றைய பெரும்சமர் ஓய்ந்தது. கரை திரும்பிய கடற்புலிகள் ஆழ்கடலில் தமது வீரத்தின் முத்திரை பதித்திருந்தனர். தோல்வியுடன் தன் தளம்திரும்பிய சிங்களத்தின் கடற்படையோ தன்செயற்திறனில் ஆழ வடுக்களை சுமந்தபடியே போயிருந்தது. எனினும், ஆழ்கடலே அதற்கிருக்கும் இறுதி வழி. அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மீண்டும் ஆழ்கடலூாடு கடற்படைத் தொடரணிகள் போய்வரத் தொடங்கின. அதிலும் இலக்குவைத்து களம்தேடினர் கடற்புலிகள்.

யூன் 25, குடாநாட்டு இராணுவத்தினருக்குத் தேவையான நவீன ஆயுதங்களையும், பெருமளவு வெடிப்பொருட்களையும் சுமந்தபடி மிதக்கும் பாரிய இராணுவக் களஞ்சியம்போல் 'உகண' என்ற பாரிய கப்பல் தன் பயணத்தைத் தொடங்கியிருந்தது. வெறுமனே ஆயுதங்கள் என்பதற்கும் அப்பால் நவீன ஆயுதங்களையும் வைத்து தன் படைகளுக்கான உளவுறுதியைக் கட்டிவளர்க்கும் சிங்களத் தலைமையின் இறுதி நப்பாசையின் ஒரு பகுதியையும் அன்று 'உகண' தன்னுள் சுமந்திருந்தது. அதன் முக்கியத்துவத்திற்கேற்பவே அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் இருந்தன. இரு பீரங்கிக் கப்பல்களுடன், ஆறு அதிவேக டோறா பீரங்கிப்படகுகளும் 'உகண'வின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியபடி ஆழ்கடலில் அதை அழைத்துச் சென்றன.

தமிழீழக் கடல் முழுமையுமே கடற்புலிகளின் வீரத்தின் கையிருப்புகளல்லவா. அதில் ஆழ்கடல் என்றும், சிங்களத்தின் ஆதிக்கப்பரப்பு என்றும் வேற்றுமைகள்தான் உண்டோ? இதில் எதைத்தானும் தன் பாதுகாப்பின் உத்தரவாதங்கள் என சிங்களம் ஆறுதல் கொள்ளமுடியுமா? இதுபற்றி சிங்களத்திற்கு பாடம் புகட்டுதலே கடற்புலிகளின் இன்றைய இலக்கு. அதுவே இந்த அதிபாதுகாப்பு தொடரணியை எவ்விடத்தில் எதிர்கொள்வது என்ற தீர்மானத்தை



கடற்புலிகளுக்கு எடுக்கத்தூண்டியது.

பருத்தித்துறைக் கடற்பரப்பு, கரையிலிருந்து சரியாக ஐம்பத்தைந்து கடல்மைல் உயரம். நேரம் நள்ளிரவு 11.30 மணி. கடற்புலிகள் தளமிருந்து புறப்பட்ட படகுத்தொகுதிகள் கடற்படையின் கடல்ரோந்துப் படகுகளின் கண்காணிப்பையும் தாண்டி விநியோகத் தொடரணியை வழிமறித்தன. ஆக்கிரமிப்புக் கோட்டையின் கடற்பரப்பில் அன்றைய சமர் மூண்டது. கோட்டையின் வாசலில் வைத்தே இம்முறை தம் பலத்தை கடற்புலிகள் நிரூபிப்பர்.

கடலில் எதிரிக்கு சிம்மசொப்பனமான கடற்கரும்புலிகளின் உயிராயுதங்களே அன்றைய சமரின் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்திகள். கடற்கரும்புலிகளின் இரு வெடிமருந்துப் படகுகளை அழைத்தபடி லெப்.கேணல் பழனியின் தலைமையிலான பிரதான படகுத்தொகுதி களத்தில் பிரசன்னமாகியிருந்தது. பிரதான விநியோகக் கப்பலின் பாதுகாப்புக் கலங்களை எதிர்கொண்டு வியூகமிட்டு அவற்றைக் கப்பலிலிருந்து அப்புறப்படுத்தி கரும்புலித் தாக்குதலுக்கு வாய்ப்பான சூழலை உருவாக்குவதே லெப்.கேணல் பழனியின் பிரதான படகுத்தொகுதியின் இலக்கு. இதேவேளை பருத்தித்துறையிலிருந்தும், திருமலையிலிருந்தும் எதிரிக்குக் கிடைக்கக்கூடிய மேலதிக உதவிகளை தடுத்து நிறுத்துவதற்கும் சண்டையில் ஈடுபடும் எமது படகுத்தொகுதிக்கு பாதுகாப்பளிப்பதற்குமாக லெப். கேணல் அமுதசுரபி, லெப். கேணல் செழியன் ஆகியோரின் தலைமையில் இரு படகுத் தொகுதிகளும் களமிறங்கின.

இரண்டு மணித்தியாலங்களையும் கடந்தும் கடற்சமர் நீண்டது. களத்தின் இயற்கை நிலைகூட எதிரிக்கு சாதகமாயிருந்தது. காற்று மோசமாக வீசியது. கடலலைகள் மேலெழுந்து ஆவேசமாய் ஆர்ப்பரித்தன. எதிரியின் நவீனமான பாரிய கலங்களுக்கு இச்சூழலை எதிர்கொள்வது அவ்வளவு கடினமானதல்ல. எம்மைப் பொறுத்தவரை உடல், மனபலத்தாலேயே கடினமான ஆழ்கடற் சூழலில் நின்றுபிடிக்க வேண்டியதாயிற்று. ஒருபுறம் எதிரிக்கும், மறுபுறம் ஆர்ப்பரிக்கும் கடலுக்குமாக அந்த ஆழ்கடலில் கடற்புலிகள் சமர்புரிந்தனர்.

நேரம் 1.30ஐ தாண்டியிருந்தது. வியூகமிட்டிருந்த கடற்புலிகளின் படகுகள் சண்டையின் ஒரு முனையில் தமக்குச் சாதகமான நிலையை எட்டியிருந்தன. வாய்ப்பானதொரு தருணம். களத்தில் தேடிய இலக்கு கரும்புலிகளுக்கு வாய்ப்பாக பொருந்திவிட்டது. லெப். கேணல் ஞானக்குமாரின் கரும்புலிப்படகுக்கான கட்டளை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழங்கப்பட்டாயிற்று. பொங்கும் அலைகளை கிழித்து 'உகண' விநியோகக் கப்பலை நெருங்கியவாறு மின்னலென பறந்தது கரும்புலிப்படகு. அதில் ஞானக்குமாருடன் கூடவே மேஜர் சூரன், மேஜர் சந்தனா, கப்டன் பாமினி ஆகிய கரும்புலிகளும் விநியோகக் கப்பலிலிருந்து எதிரி பேரச்சத்துடன் நடாத்திய தாக்குதல்களையும் வென்றபடி கரும்புலிகளின் படகு அதில் மோதி பேரொ(ளி)லியென வெடித்தது. எதிரிக்கப்பல் ஆட்டங்கண்டது. அதன் வேகம் சரிஅரைவாசியெனக் குறைந்தது. எப்படியாவது பேரபாயத்திலிருந்து மீண்டுவிடத் துடித்த அது தள்ளாடித் தள்ளாடி தன்னால் இயன்றவரை நகர முனைந்துகொண்டிருந்தது.

இப்போது விநியோகக் கப்பலை முற்றாக மூழ்கடிக்க வேண்டுமாயின் மேஜர் நல்லப்பனும், கப்டன் இளமதியும் ஓட்டிச் செல்லும் கரும்புலிப்படகு கப்பலை நெருங்குவதற்கான வாய்ப்பான சூழலை உருவாக்க வேண்டும். கப்பலிலிருந்து எதிரி கனரக ஆயுதங்களால் தாக்கியபடியிருந்தான். மீண்டும் வியூகமிட்டன கடற்புலிகளின் படகுகள். சுமார் அரைமணிநேரம் நீடித்த சமரின் முடிவில் நல்லப்பனும், இளமதியும் காத்திருந்த தருணம் கைகூடியது. கடற்புலிப் படகுகள் பாதுகாப்பளிக்க எதிரிக் கலங்களின் பீரங்கிக் குண்டுகளில் தீக்குளித்தபடி கரும்புலிப் படகு கப்பலில் மோதி வெடித்தது. 'உகண' வில் மீண்டும் பொறுத்த இடி! இனியும் அதனால் தாக்குப்பிடிக்கவே முடியாது. மிதந்து கொண்டிருந்த அந்த ஆயுதக்களஞ்சியம் தன் முடிவிடத்தினைச் சென்றடையக் கூடிய தெலைவிலேயே உள்ளிருந்த தன் வெடிபொருட்களால் வெடித்துச் சிதறத்தொடங்கியது. அவர்கள் முல்லைத்தீவு கடற்பரப்பை கடந்ததும் பெருமூச்சுவிட்டு நிம்மதியடைந்திருப்பர்.



சிறீலங்காக் கடற்படையின் டோறாப் படகு

தாம் குறிவைத்த இலக்கை நீண்டநேரச் சமரின்பின் வெற்றிகொண்ட கடற்புலிகளின் அன்றைய இறுதி நடவடிக்கை, பாதுகாப்பாக தம் தளம்திரும்புவதாக இருந்தது.

அதற்காக கடற்புலிகள் நீண்டதூரம் பயணிக்க வேண்டும். அதிலும் குறித்தளவு தூரம் ஆழ்கடலில் அபாயம் நிறைந்ததாக ஏற்கனவே கருத்திலெடுக்கப்பட்டிருந்த அந்த நடவடிக்கை மீது எதிரி சவால்விடுத்தான். தன் குகைவந்து மீளும் புலிகளைப் பாதுகாப்பாகத் திரும்ப அனுமதிப்பதென்பது சிங்களக் கடற்படையின் தன்மானத்திற்கு பேரிழுக்கல்லவா! நேரம் சரியாக அதிகாலை 4.00 மணி. சரியாக 30 கடல் மைல் உயரம். எதிரியின் உதவிப்படகு அணிகளை தடுத்துநிறுத்தும் பணியில் ஈடுபட்டு லெப். கேணல் பழனியின் படகுத் தொகுதியுடன் தளம் திரும்பிக்கொண்டிருந்த லெப். கேணல் அமுதசுரபி, லெப். கேணல் செழியன் ஆகியோரின் படகுத்தொகுதிகளை எதிரியின் டோறாக்கள் வழிமறித்தன.

மீண்டும் மூண்டது கடற்சமர். தம் பணி முடித்த கடற்புலிகளுக்கு பாதுகாப்பாக கரைதிரும்புவதே தற்போதைய இலக்கு. தம் ஆயுதக்களஞ்சியமாய் வந்த விநியோகக் கப்பலை தம் குகையில் வைத்தே பறிகொடுத்த கடற்படைக்கு கடற்புலிகளின் படகுத்தொகுதிகளை முற்றாக அழித்து பழிதீர்ப்பதைத் தவிர வேறு நோக்கம் இருக்கவே முடியாது. எனினும் எதிரியை சுலபமாக எதிர்கொண்டபடி தந்திரோபாய நகர்வுகள் மூலம் பாதுகாப்பாக கரைதிரும்பினர் கடற்புலிகள். ஈற்றில் தன் பழிவாங்கும் முயற்சியிலும் மூக்குடைபட்ட எதிரி பின்வாங்க வேண்டியதாயிற்று. அதிலும் சேதமடைந்த டோறா ஒன்று கடற்புலிகள் கொடுத்த அடியின் வடுக்களைச் சுமந்தபடி புகைந்தவாறு போய்க்கொண்டிருந்தது.

கடலில் ஓர் அச்சுறுத்தும் போரை மட்டுமல்ல மரபுசார் போரையே நடாத்தக்கூடிய ஆற்றலை தாம் பெற்றுவருவதை இச்சமர்களில் கடற்புலிகள் நிரூபித்தனர்.



புலிகள் கொண்டுள்ள இக்கடற் போர்ப் பலத்தால் குடாநாட்டில் குவிக்கப்பட்டிருக்கும் சிங்களத்தின் போர்வலு அஸ்மா நோயாளியின் நிலையாகிவிட்டது. குடாநாட்டு ஆக்கிரமிப்பின் இருப்புக்கான முயற்சித்தலுக்கும் அங்கு குவிக்கப்பட்டுள்ள படை வலுவின் பாதுகாப்பிற்குமிடையே முடிவுகாண முடியாது போராடிவரும் சிங்களத்தின் தலைமையின் எண்ணத்தில் இது புலிகள் வீழ்த்திய பேரிடியாகும். குடாநாட்டில் நிலைகொள்ளும் பேரினவாத அவாவிற்கு இதையொரு கெட்ட சகுனமாகவே படைத்தரப்பு கருதிக்கொள்ளும். அதன் முயற்சி சந்திக்கவிருக்கும் விளைவு புலிகளின் இப்பலத்தில் இருந்தே அர்த்தங்கொள்ளும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Liberation Tigers Of TAMIL EELAM

## புலிகளின் குரல்

# பயனற்ற முயற்சி

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கும் இலக்குடன், சிங்கள அரசு நீண்டகாலமாகக் கடைப்பிடித்துவரும் இராணுவத்தீர்வு என்ற அடக்குமுறைச் சித்தாந்தம் விடுதலைப் புலிகள் இயக்கத்தால் முறியடிக்கப்பட்டுவிட்ட ஒரு இராணுவ விடயமாக மேலோங்கி வருகின்றது.

ஓயாத அலைகள் -3 படைநடவடிக்கை மூலம் வன்னி மற்றும் குடாநாட்டு சமர் முனைகளில் புலிகள் பெற்றுவரும் மரபு வழிப்பட்ட சமர்களின் வெற்றிகள் இவற்றை நிரூபித்து வருகின்றன.

மட்டுப்படுத்தப்பட்டளவில் மரபுவழிப் போர்க்கலங்களை வைத்துக்கொண்டும், குறைந்தளவிலான விநியோக வழிவாய்ப்புக்களைக் கொண்டிருந்தபோதும். புலிகள் இயக்கமானது தான் மீட்ட நிலப் பகுதிகள் எங்கும் முன்னரங்க நிலைகளை அமைத்து மரபுவழிப்போரைத் தொடர்ந்து நடாத்தும் போர்வல்லமையை உலகத்திற்குப் பறைசாற்றி வருகின்றது.

புலிகளின் போர்வலுவைச் சிதைக்கும் எண்ணத்துடன் சிங்கள அரசானது பெரும் பொருட்செலவில் காலத்திற்குக்காலம் ஆயுதப்பெருக்கத்தை அமுல்நடாத்தியபோதும் அது இராணுவத் தோல்விகளையே அனுபவித்து வருகின்றது.

சைப்படுத்தி நிறுத்தி புலிவீரர்கள் மீது சரமாரியாகச் சுட்டும் புலிகளின் தாக்குதல்களைத் தடுக்க முடியாத சிங்களப் படைகள், இப்போது பல்குழல் மோட்டார்கள் சிலவற்றைப் பயன்படுத்தி போரில் திருப்பு முனைகளை உண்டுபண்ணி விடலாம் என சிறுபிள்ளைத் தனமாக நம்புகின்றது.

இந்தப் புதிய ஆயுதங்களைப் பயன் படுத்தி மணலாற்றிலும்- குடாநாட்டிலும் பலமுனைகளில், சிங்களப் படைகள், வலிந்து தாக்குதல்களை நடத்தியிருந்தும் ஒரு முனையிலாவது அதனால் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இருந்தபோதும் இனப் பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு என்ற உளுத்துப்போன திட்டத்தைக் கைவிட சிங்கள அரசு மறுக்கின்றது.

புதிய புதிய ஆயுதங்களை வாங்கிக் குவித்து போரை விரிவாக் குவதிலேயே அது காலத்தைக் கழிக்கின்றது.

தோல்வி மேல் தோல்வி வந்தாலும், எப்போதாவது ஒரு முறை வெற்றி பெறலாம் என்ற நப்பாசையில் உள்ளதையெல்லாம் இழந்து ஒட்டாண்டியாகும் ஒரு சூதாடியின் மனநிலையிலேயே இன்று சிங்கள அரசு உள்ளது.

எனினும், மோசமான இந்த இராணுவத் தோல்விகளிலிருந்து பாடம்படிக்க சிறீலங்கா அரசு பிடிவாதமாக மறுத்து வருகின்றது.

அண்மைக்காலமாக புலிகள் இயக்கம் ஈட்டிவரும் இராணுவ வெற்றிகளுக்கு சிங்களப் படையிடமுள்ள ஆயுதப்பற்றாக் குறையே காரணம் என தன்னிலை விளக்கம் கூறி, ஆயுதப் பெருக்கத்திற்கு ஆணை பிறப்பித்துள்ளது.

பல்குழல் மோட்டார்களை கொள்வனவு செய்து போரில் அற்புதங்களைப் படைத்திட முடியும் என சிங்கள அரசு நம்புகின்றது.

1983ஆம் ஆண்டில் பதினையாயிரம் படையாட்களுடன் இருந்த சிங்கள இராணுவம், 17 வருடகால போரின் விளைவாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆளணியைக் கொண்ட இராணுவமாக படைப் பெருக்கம் செய்யப்பட்டும் அதனால் போரில் வெற்றிகளைக் குவிக்க முடியவில்லை.

சாதாரண குண்டுவீச்சு விமானங்களான 'சியாமாசெற்றி'களிலிருந்து அதிநவீன மிகையொலித் தாரகைகளான 'கிபீர்' சண்டை விமானங்களைக் கொண்ட வான்படையாக உயர்ச்சி பெற்றும் போரில் இராணுவத்தால் மேலாதிக்கம் செலுத்த முடியவில்லை.

சாதாரண விசைப்படகுகளிலிருந்து பீரங்கிக் கப்பல் வரை சிங்களக்கடற்படை விரிவாக்கப்பட்டபோதும் கடற்போரில் அதனால் சாதனைகளைப் படைக்க முடியவில்லை.

வருடத்திற்கு சில நூறுகோடி ரூபாய்கள் என்ற நிலையிலிருந்த சிங்கள அரசின் பாதுகாப்புச் செலவீனம் இப்போது வருடத்திற்கு ஆறாயிரம் கோடி ரூபாய்களை எட்டிவிட்ட நிலையிலும் புலிகளின் இராணுவ வளர்ச்சியை அதனால் தடுத்துவிடமுடியவில்லை.

ஒற்றைக் குழல்களைக் கொண்ட மோட்டார்களையும்- ஆட்டிலறிகளையும்- டாங்கிகளையும் டசின் கணக்கில் வரி

போரைவிட்டால் சிங்கள அரசாங்கத்திற்கு வேறுவழியில்லை. போரில் தோல்விகளைக் கண்டு வருகின்றது என்ற உண்மையை ஒப்புக்கொள்ளும் நேர்மையும் துணிவும் அதற்கு இல்லை.

இதனால் பாரிய இராணுவத் தோல்விகளை சிங்களப்படைகள் சந்திக்கும் வேளைகளில் ஆயுதப்பெருக்கத்தைச்செய்து சிங்கள மக்களை ஏமாற்றி வருகின்றது.

புலிகள் இயக்கத்தினது படைக்கலங்களில் பெரும்பகுதி சிங்களப்படையிடமிருந்து கைப்பற்றப்பட்டவை என்பது எல்லோரும் அறிந்த தகவல்.


சிங்களப் பேரினவாத அரசு ஆயுதப் பெருக்கத்தின் மூலம் தனக்குத்தானே சவக்குழியைத் தோண்டுகின்றது என்றால் மிகையாக இருக்காது.

*"விடுதலைப் புலிகள்" பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம்.[ஆடி 2000]*



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கானம்பாடி

சிட்டு எனும் மொட்டு
ஜெயசிக்குறுாய்ப் படை
அழிக்கச் செந்தணலில்
வேகியதாம்- சிட்டு
பொங்கி வந்த கண்ணீருள் - நீ
தந்த கையெழுத்துகள்
மீண்டும் மீண்டும்
வந்து வந்து இமைகளுள்
முட்டியது இமைகள்
முட்டி ஈரலித்த விழிகள்
ஒளிநாடாக்களைப்
புரட்டிப் புரட்டி உன்
பூமுகத்தைத் தேடியது
உண்மையென உனது மரணம்
உறுதி செய்த வானொலிகள்
பொய்யான செய்தியென்று
பின்னாளில் சொல்லாதா..?
காத்திருந்து செய்திகள்

நிஜம் நிஜம் என்று தினம்
நிமிர்ந்து சொன்னபோது
நெருப்பில் வீழ்ந்த
உணர்வு நெஞ்சில் இடித்தது.
செருக்களத்தில்
சிங்களத்துச் சேனைகளின்
ஜெயசிக்குறுய்ப் படைநகர்வை
நேரெதிர்த்துச் சிட்டு-நீ
நெருப்பாய் எழுந்தாயோ..?
நண்பனே நீண்ட துயில்
கொண்டாயோ...?
என்ன மாயம் உன் குரலில்
ஒளிந்திருக்கோ ... தெரியவில்லை
மறுபடி மறுபடி
மனசை அள்ளும் குரல் உனது
எப்படி மௌனித்துப் போனது- சிட்டு
எப்படி மௌனித்துப் போனது...?
உன்பாடல் ஒவ்வொன்றும்
உயிரை உருக்குமய்யா
ஏனின்று ஒன்றுமே பேசாமல்

ஒளிப்படமாய்ச் சிரிக்கின்றாய்....?
ஓ.. தாயக விடுதலையின்
தார்ப்பரியம் விளக்கவோ
தொங்குகிறாய் நிழற்படமாய்- நீ
துாங்குகிறாய் கல்லறையில்..?
நான் கவி எழுத
நம்பிக்கை தந்த கானம்பாடி
உனக்கு அஞ்சலிக் கவிதை எழுதவா
ஆத்மார்த்தமாய்
வாழ்த்துத் தந்தாய்...!
இல்லை... இல்லை....
அடுப்படிக் கரும்புகை வாசமறுத்து
அகிலத்தைப் பார்க்க வைத்த
ஆசானல்லவா நீ...!
எப்படி மறந்து போகும் -சிட்டு
உன்னை எப்படி
மறக்க முடியும்
மூன்றாண்டு ஓடியதாம்
சிட்டு நீ

மீளாத்துயில் கொண்டு
நூறாண்டு ஓடட்டும்-நீ
தினம் என் நினைவுகளில்
நிறைந்திருப்பாய்
நீங்காமல் நெஞ்சிருப்பாய்
நீ சுமந்த கனவுகளை
நெஞ்சிருத்திப் புலிகளணி
நிரைநிரையாய்ப் போகிறது.
நீளாது துாரமினி
விடியல் நாளையென்று
நின்று களமாடுகிறார்- சிட்டு
நிம்மதியாய் துாங்கு நீ
தமிழீழம் மலருமன்று
வான்வெளியில் வந்துரைப்பேன்
தரணிக்குன் குரலால்
தமிழீழம் மலர்ந்ததென்று
பரணி நீபாட
பாவோடு காத்திருப்பேன்-சிட்டு
உன் பாராட்டுக் கையெழுத்து-என்
படைப்பைப் புனிதப்படுத்தும்

(மேஜர் சிட்டுவின் மூன்றாம் ஆண்டு நீங்காத நினைவாக...
-புதியநிலா (ஜேர்மனி))




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதக் கொடூரத்தின் உச்சம்

## சிங்கள இனவெறி இராணுவத்தால் கொய்யப்படும் தமிழர்களின் தலைகள்



அருணாசலம், சந்திரமோகன் (வயது 21)

நாங்கள் இன்னும் திருந்தவில்லை, இன்றும் கூட அப்படியேதான் இருக்கின்றோம், சரியாக 10 வருடங்கள் கழிந்த நிலையில், அதே ஓகஸ்டில் மீண்டும் தனது சுயரூபத்தை மட்டக்களப்பு மக்களுக்கு மட்டுமல்ல, முழு உலகுக்குமே அப்பட்டமாகக் காட்டியிருக்கின்றது சிங்கள அரசின் பாதுகாப்புப் படை.

சிறீலங்காவில் இது ஒன்றும் புதிதான காரியமில்லைத் தான். இருப்பினும் அண்மையில் நடந்தேறிய இரு கொடூரப் படுகொலைகள் அனைவரது நெஞ்சங்களையும் உசுப்பிவிடக்கூடியதே.

திருமணமாகி நான்கு மாதங்களே நிரம்பிய 21 வயதுடைய அருணாசலம் சந்திரமோகன் வளமைபோல வயற்காவலுக்குச் சென்றார். அன்றைய தினம் மட்டக்களப்புச் சித்தாண்டிப் படைமுகாமில் இருந்து காலை 10-45 மணியளவில் 8 பேர் அடங்கிய இராணுவக் குழுவொன்று வீதி ரோந்து சென்று கொண்டிருந்தது. கூட்டுறவு கோழித்தீன் தொழிற்சாலையின் அருகில் இவ் அணி விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியதில் இரு இராணுவத்தினர் காயமடைந்தனர். கண் இமைக்கும் நேரத்தில் அவ் இடத்தைவிட்டுப் புலிகள் அகன்றுவிட, கோபங்கொண்ட சிங்களப் படையினர் அவ்வீதியால் வந்த சீவல் தொழிலாளியான தியாகராசா ஞானதாஸ் என்பவரைச் சுட்டுக் கொன்றது. அத்துடன் நின்றுவிடாது.... வயற்பக்கமாகச் சென்று, சந்திரமோகன் என்பவரைப் பிடித்து, அடித்து அம்மணமாக்கி, பின் சுட்டுக் காயப்படுத்தியது. குற்றுயிரும், குறையுயிருமாக அவர் துடித்துக் கொண்டிருக்க அவரது தலையை வெட்டி 'சொப்பிங்பாக்'கினுள் போட்டு தம்முடன் எடுத்துச் சென்றது வெறிபிடித்த சிங்களப் படை.



"எனது கணவரைச் சுட்டு, தலையை வெட்டி இராணுவத்தினர் எடுத்துச் செல்வதாகக் கேள்விப்பட்டு எனது கணவர் வேலை செய்து கொண்டிருந்த வயல்ப் பக்கமாக ஓடிச் சென்றேன். அப்போது வெள்ளை நிற 'சொப்பிங் பாக்' ஒன்றில் ஒரு மனிதத் தலையை இராணுவத்தினர் எடுத்துச் செல்வதைக் கண்டேன்"

–திருமதி சந்திரமோகன் அம்பிகாவதி

கொல்லப்பட்ட சந்திரமோகனின் மனைவி அம்பிகாவதி(வயது 20) "எமக்குத் திருமணமாகி 4 மாதங்கள்தான் ஆகின்றது. எனது கணவர் வயற்காவலுக்குச் சென்றார். 11 மணியளவில் துப்பாக்கிச் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் ஓடி வந்து எனது கணவர் கொல்லப்பட்டதைத் தெரிவித்தான். நான் கதறிய படி ஓடிச்செல்கையில், வழியில் படையினர் ஒரு மனிதத் தலையை 'சொப்பிங் பாக்'கினுள் கொண்டு செல்வதைக் கண்டேன். வயலுக்குச் சென்று பார்த்தபோது எனது கணவரின் முண்டம் மட்டுமே இரத்த வெள்ளத்தில் கிடந்தது. பின் அதையும் இராணுவத்தினர் வந்து எடுத்துச் சென்று விட்டனர்" எனக் கண்ணீர் மல்கக் கூறினார்.

இதேபோன்று வீதியில் சுட்டுக்கொல்லப்பட்ட 4 பிள்ளைகளின் தந்தையான ஞானதாஸ் என்பவரின் மனைவி செல்வராணி கூறுகையில் "எனது கணவர் தொழில் முடிந்து வீடு திரும்பும் வழியில், அவரிடம் 'கள்ளு' வாங்கிக் குடித்த படையினர் அவரைப் போகுமாறு கூறிவிட்டு பின்னால் இருந்து சுட்டுக் கொன்றுவிட்டனர். இதைப் பலர் நேரில் கண்டுள்ளார்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

விடயம் தெரிந்தும் 5 நாட்களாக வாயே திறக்காத தமிழ்க் குழுக்களும், கட்சிப் பிரமுகர்களும் பின் வழமைபோல ஜனாதிபதிக்கு கடிதம் எழுத, அங்கும் பதிலுக்கு விசாரணைக்குழு அமைக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. 10 வருடங்களுக்கு முன்பு இதே ஓகஸ்டில், இதே சித்தாண்டி முருகன் கோவிலடியில் 45



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கிளிநொச்சி இராணுவ முகாமில் அப்பாவித் தமிழ்மகனின் தலையுடன் மிடுக்காக நிற்கும் சிங்களப் படைவீரன். "எறும்பைக்கூடக் கொல்லுதல் பாவம்" என்கிற பௌத்தமத வம்சத்தில் பிறந்தவன்.

அப்பாவித் தமிழர்களைப் பிடித்துச் சென்ற சிங்களப் படை அவர்களை இரகசியமாகக் கொன்று புதைத்தது. இது தொடர்பாக விசாரணை செய்யவென ஜனாதிபதி அவர்களால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு இது வரை எந்தப் பதிலுமே தராத நிலையில், இன்னொரு விசாரணைக் குழு அமைத்திருப்பது கேலிக்குரியதே. அவ்வளவு ஏன்....? 600 தமிழர்களுக்கு மேல் கொன்று புதைக்கப்பட்ட செம்மணி விவகாரத்திற்கு விசாரணைக்குழு அமைத்த அரசு பெரிதாக எதனைச் சாதித்தது. சிங்கள அரசின் அகராதிப்படி விசாரணைக் குழு என்பது வெறும் கண்துடைப்பு நாடகமே.

இச்சம்பவம் வெளி உலகிற்குத் தெரிந்த ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே. ஆனால் இது போன்ற பல கொடூரங்கள் தமிழ் மண்ணில் அன்றாடம் அரங்கேறி வருவது வெளி உலகிற்கு தெரியாமலேயே போய்விடுகின்றது.

கடந்த வருடம் ஓயாத அலைகள் இரண்டு மூலம் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட கிளிநொச்சி இராணுவ முகாமில் வெறிபிடித்த படைவீரன் ஒருவனது 'அல்பத்தில்' இருந்து, ஒருகணம் இதயத் துடிப்பையே நிறுத்தி விடக்கூடிய ஒரு புகைப்படம் (போட்டோ) கண்டெடுக்கப்பட்டது. கிளிநொச்சியில் தான் கஸ்ரப்பட்டுக் கட்டிய வீட்டைப் பார்க்க வந்த சமயம் படையினரால் பிடிக்கப்பட்ட அப்பாவித் தமிழர் ஒருவரது தலையைத் துண்டித்து அதைக் கைகளில் தூக்கியபடி 'போஸ்' கொடுத்து போட்டோ எடுத்து அதனை அல்பத்தில் வைத்து அழகு பார்க்கிறது சிங்களப் படை. இது ஒன்று போதாதா சிறீலங்காப் படைகளினதும், அதன் ஆட்சியாளர்களினதும் முகத்திரையைக் கிழித்தெறிவதற்கு....... இன்றும்கூட கிளிநொச்சிப் பகுதியில் ஒன்று, இரண்டு என தமிழர்களது எலும்புக்கூடுகள் மீட்கப் படுவது தொடர்கதையாகவே இருந்து வருகின்றது. இது வரை இப்பகுதியில் 57ற்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் மலசலக் குழிகளிலிருந்தும், கிணறுகளிலிருந்தும் ஏனைய இடங்களில் இருந்தும் மீட்கப்பட்டுள்ளன. இவைகளில் பெரும்பாலானவை கைகள் கட்டப்பட்டுள்ள நிலையிலேயே மீட்கப்படுகின்றன. கிளிநொச்சிப் பகுதியில் வீடுபார்க்கவெனச் சென்று காணாமல் போனோர் தொகை 184 என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சியில் மட்டுமல்ல, மட்டக்களப்பில் மட்டுமல்ல, சிறீலங்காவில் எங்கெல்லாம் இராணுவ ஆதிக்கத்திற்கு உட்பட்ட பகுதியில் தமிழர்கள் வாழுகிறார்களோ அங்கெல்லாம் இத்தகைய அட்டூழியங்கள் நடைபெறுவது சாதாரண விடயமாகவே இருக்கின்றது.

சிறீலங்காவின் பாதுகாப்புத் தலைமைப் பதவியில் இருந்து கொண்டு ஒருபுறம் தமிழர்களை அழிப்பதில் குறியாக இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அவர்கள், இன்னொருபுறம் தன்னை சமாதானத்தின் தேவதையாக வெளியுலகிற்கு காட்டி வருவது, இன்னும் எத்தனை காலம்தான் நீடிக்கப்போகின்றது.

விடுதலைப் புலிகளிடம் அனைத்தையும் படிப்படியாக இழந்து வரும் அரசு, தனது சக்திக்கும் மீறி பாரிய ஆயுத தளபாடக் கொள்வனவுடன் மீண்டும் தமிழர்களை அழிக்கவெனப் பூதாகாரமெடுக்கின்றது. சந்திரிகா அரசின் மெத்தப் பெருத்த பூதமெல்லாம் தமிழ் மண்ணில் அடிவாங்கி அழியுண்ட வரலாற்றை மறந்து, மீண்டும் மீண்டும் தப்புக் கணக்குப் போடுகின்றது அரசு. இதன் பலாபலனையும், பரிசையும் புலிகளிடம் மிகவிரைவிலேயே சிங்கள அரசு பெறவேண்டியிருக்கின்றது என்பதும் தலைவிதி எனின், அதை யாரால் மாற்ற முடியும்?

-மொறிஸ் தர்மபாலன்-



## கிளறல்


மூச்சுத் திணறுது
புழுங்குது - உவர்ப்பிசுபிசுப்பு
உடம்பெல்லாம் கசியுது
குரல்வளை நசிஞ்சு
மூச்சுத் திணறுது - பக்கத்தில இருக்கிறவன்
விந்துாற்று சிதைந்து உயிரழிந்ததாம்.
அங்கிகள் அழிஞ்சு புழு நெழியுது
மண் பாரம் இறுக்குது - சதையழிஞ்சு
எலும்பு நொண்டுது, உவர் கசியுது
ஊதல் காற்று ஊளையிடுகுது
விழிகள் கடைசியாய்ப் பார்த்த 'பச்சை' மட்டும்
நினைவுகளில் கிடந்து 'ஜீன்'களில் சேந்திட்டுது.
மேலே கிடக்கிற மண்ணை எடுங்கோ
கனக்கக் கதையள் சொல்ல வேணும்.

- அருண்மொழிவர்மன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**இத்திமடு** - பண்டாரவன்னியன் காலத்தில் ஒரு சிற்றரசாக இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இன்னும் இங்குள்ள காடுகளில் புதைபொருள் ஆய்வு செய்யப்படவில்லை. இப்போது இது ஒரு கிராமமாக நெடுங்கேணியுள் அடங்கியுள்ளது.

**நெடுங்கேணி** - தனிக்கல், கோடாலிக்கல், வீமன்கமம் அல்லது வீமன்கல் பிரதேசங்கள் ஊஞ்சல்கட்டி, பட்டிக்குடியிருப்பு, சேனைப்பிலவு, பழம்பாசி, தண்டுவான் போன்ற கிராமங்களை மேல் கையிலும், கீழே இவ்வூரின் வடக்கு - தெற்காக அமைந்த பெருவீதி முள்ளியவளை தண்ணீரூற்றுச் சந்தியில் ஆரம்பித்து 14வது கல்லில் - நெடுங்கேணியைக் கடந்து புளியங்குளத்தில் யாழ். கண்டிச்சாலையைத் தொடும் நெடுங்கேணியிலிருந்து புளியங்குளம் நோக்கி 7வது மைலில் நைனாமடு - கரப்புக்குத்திக்கும் விஞ்ஞானகுளமூடாக கனகராயன்குளமும் வரலாம்.

**நைனாமடு** - சன்னாசி - பரந்தன் கிராமத்தையொட்டியது. போராட்டம் தொடங்கு முன்பாக மலையகப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்தவர்களை இங்கு குடியேற்றினர். தனியாருக்குச் சொந்தமான பெரிய பண்ணைகளும் இருந்தன. காலப்போக்கில் இராணுவ நடவடிக்கைகளால் சூழவுள்ள பல கிராமங்கள் அழிந்து போயின.

ஓயாத அலைகள் - 03 நடவடிக்கையின்போது மீட்கப்பட்ட வன்னியின் பல கிராமங்கள் தமிழர் வாழ்வின் ஆதாரமையங்களாகும். இந்தக் கிராமங்கள் எமது பண்பாட்டுப் புலங்களாகவும், கிராமிய வாழ்வின் முகங்களாகவும் இருந்து வந்தன. அமைதியும், வளமும் இயற்கையும் இணைந்த இவை அழகும் வனப்பும் மிக்கவை. ஆனால் எதிரிப்படைகள் இன்று இந்தக் கிராமங்களின் ஆத்மாவையும் அழகையும் அமைதியையும் சிதைத்துவிட்டன. எனினும் மீட்கப்பட்ட கிராமங்களில் மீண்டும் இவை துளிர்க்கும். மீளவும் எங்கள் கைகளில் வந்துள்ள கிராமங்களில் சிலவற்றின் அமைவுக் குறிப்புகள் இங்கே இடம் பெறுகின்றன.

**ஒட்டுசுட்டான்** - மாங்குளத்திலிருந்து 15 மைல் தொலைவிலுள்ளது. வன்னிப்பகுதியில் முதன் முதல் கட்டப்பட்ட தான்தோன்றியீஸ்வரர் கோவில் இதற்கு பெருமை சேர்ப்பது. இங்கிருந்து தென்கிழக்கே செல்லும் வீதி 6வது மைலில் நெடுங்கேணிக்கும் வடக்கே செல்லும் வீதி 10வது மைலில் புதுக்குடியிருப்பையும் இதே வீதி தொடங்கிய 150 யார் தொலைவில் வடகிழக்காகச் செல்வது பண்டாரவன்னியன் ஓட்டுத்தொழிற்சாலையூடாக முல்லைத்தீவை 15வது மைலில் தொடும். இலங்கையில் இங்குள்ள ஓட்டுத் தொழிற்சாலையின் உற்பத்தியே தரமானதுமாகும்.







தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆழப்பரவிய வேர்களும் மீண்டும் பூத்தமலர்களும்

தமிழ்க்கவி

இக்கிராமத்திலிருந்து மணவாளன்பட்ட முறிப்பு, கற்கிடங்கு போன்ற இடங்களுக்கும் வழி உண்டு. தெற்கே போகும் வண்டிப்பாதை அநந்தர் புளியங்குளம் ஊடாக சேமமடு செல்லும். விவசாயம், கால்நடை வளம் உண்டு.

**கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம்** - விவசாயக்கிராமம். கனகராயன் ஆறு கடந்தால் கனகராயன் குளம் ஒன்றரை மைலில் வரும் சாளம்பன் கிராமம் ஒட்டுசுட்டானிலிருந்து மாங்குளம் வீதியில் - முதலாவது மிகவறியமக்களைக் கொண்ட விவசாயக் குடும்பங்கள். 9ம் கட்டை மணவாளன்பட்ட முறிப்பு தெருவிலிருந்து உள்புறமான கிராமம். பேராற்றின் மேற்கரை நிறைந்த வான்பயிர்கள் செய்கை பண்ணப்பட்டுள்ள இடம்.

**கரிப்பட்டமுறிப்பு** - பண்டாரவன்னியின் காலத்தில் மிக முக்கியமான தெருமுடங்கலாக இருந்தது. யானைகளுக்குப் பொறி வைக்கப்படும் காடுகள். கரிப்பட்டமுறிப்பு - 'சந்தி' வீதிகள் இரண்டு மூன்றாக பிரியும் இடங்கள் 'சந்தி' என்ற சமஸ்கிருதச் சொல் வருமுன் 'மடக்கல்' 'முறிப்பு' என்றே அழைக்கப்பட்டு வந்தன. (உ+ம் மூன்று முறிப்பு, மணவாளன்பட்டமுறிப்பு, கட்டு முறிப்பு) இக்கிராமத்தில் உள்ள குறுக்கு வீதி இடப்பக்கம் கனகராயன் குளத்துக்கு கற்கிடங்கு ஊடாக 7வது மைலிலும், வலப்பக்கம் அம்பகாமம் ஊடாக வட்டக் கச்சிக்கும் வரும்.



**ஒலுமடு** - மாங்குளத்திலிருந்து 3 மைல் தொலைவில் உள்ள சிறு கிராமம். இங்குள்ள மக்கள் விவசாயிகள்.

**மாங்குளம்** - மாங்குளம் முக்கிய சந்திகளைக் கொண்டது. வடக்கு யாழ்ப்பாணம், கிழக்கு ஒட்டுசுட்டானூடாக முல்லைத்தீவு, தெற்கு கண்டி, மேற்கு துணுக்காய் ஆகியனவுக்குச் செல்லும் வீதிகள் இங்குள்ளன. எனவே இங்கிருந்த புகையிரத நிலையம் கடுகதி ரயில்கள் தரிக்கும் இடமாகும்.

**அப்பாக்குட்டி கிணற்றடி** - இப்போது இக்கிணறு இங்கே இல்லை. எனினும் அப்பாக்குட்டி என்பவரால் வெட்டி தர்மசாசனம் செய்யப்பட்ட கிணறு இருந்த இடம் இப்போது தேசித் தோட்டமாக அழைக்கப்பட்டு அதுவும் இப்போது அழிக்கப்பட்டு விட்டது. இவ்விடம் குஞ்சுக்குளத்தில் அடங்கும். இதன் எல்லையே 'போர்க்' குடியிருப்பாக அமைக்கப்பட்டது.

**கொல்ல புளியங்குளம்** - யானைகள் கட்டும் இடமாக உள்ள இடங்கள், கேரளத்து வணிகப் பணிக்கர்களால் கொல்லம் என அழைக்கப்பட்டு அது மருவி கொல்ல புளியங்குளம் என வந்ததாகப் பெரியோர்கள் கூறுவர்.

**பெரியார்குளம்** - ஈ.வே.ரா. பெரியாரின் ஆதரவாளர்கலால் சூட்டப்பட்டபெயர். தற்போது போரூட் உள்ள இடம்.

**கனகராயன்குளம்** - கனகராயர் என்னும் தளபதிக்கு மானியமாக வழங்கப்பட்டது என்பது வாய்வழி வந்த கதை.

**மன்னாகுளம்** - மாங்குளத்திலிருந்து கனகராயன்குளம் நோக்கி 4வது மைலில் உள்ள வலப்பக்கச் சாலை மன்னாகுளத்தை சந்திக்கும். அங்கிருந்து இரண்டாவது மைலில் உள்ளது வன்னிவிளாங்குளம். அங்கிருந்து இரண்டு மைல் தொடர்ந்து செல்ல, புதுார் நாகதம்பிரான் கோவில். அங்கிருந்து 4மைல் தொடர இச்சாலை கண்டி வீதியை மீண்டும் தொடும். இது தவிர, இரு பிரசித்தி பெற்ற கோவில்கள் இச்சாலையில் உண்டு. வன்னிவிளாங்குளம் அம்மன், புதுார் நாகதம்பிரான் ஆகியனவாகும்.

**புளியங்குளம்** - பழைய அரசினர் மரக்காலை இங்கிருந்தது. இலங்கையின் பல பகுதிகளுக்கும் 'சிலீப்பர்க்கட்டை'கள் இங்கிருந்தே அனுப்பப்பட்டு வந்தன. புளியங்குளத்திலிருந்து நைனாமடு ஊடாக நெடுங்கேணிக்குச் செல்லும் சாலை, இது பிரதான சாலையுமாகும். இங்கு 126ஆம் கட்டை 1977இல் வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, வீரகேசரி நிறுவனம் பொது மக்களின் அன்பளிப்பைப் பெற்று ஒரு குடியேற்றத்தை உருவாக்கியது. அவர்களுக்கான குடிநிலம் தலா கால்ஏக்கர் புகையிரத வீதிக்கும் கற்பாதைக்கும் இடையே வழங்கப்பட்டது. பயிர்ச்செய்கை கூட்டுப்பண்ணை முறையில் 50 ஏக்கர் புகையிரதப்பாதைக்கு மேற்கே வழங்கப்பட்டது. மாத்தளைப் பகுதி மக்கள் குடியேறினர். மாத்தளை அம்மன் தேவஸ்தான சபையின் கிளையொன்றும் இங்கிருந்தது. நெசவுச்சாலை ஒன்றும் இருந்தது. இன்று இந்த இடம் புல் முளைத்த பெரு வெளியாகியுள்ளது. 130ஆம் கட்டை வரை பழமரச் செய்கைக்கென தனியாருக்கு வழங்கப்பட்ட காணிகள், பிரவுண் கொம்பணி, ஊமையன் கமம், குழஸ்பாம், ஏ.பி.சி. பாம், அகத்தியர் பாம் போன்றவற்றுடன் யப்பானிய கம்பனி ஒன்றும் நிலத்தை பெற்றிருந்தது. இவையாவும் 1984இல் அழிக்கப்பட்டன.

**பனிக்கநீராவி** - நீர்வாவி என்ற சொல்லே பெருமளவில் மருவி நீராவி என வந்துள்ளது. யானைகட்டும் தொழில் செய்வோர் பணிக்கர் என அழைக்கப்பட்டனர். அவர்கள் தங்கிய இடமாக இது கணிக்கப்படுகின்றது.

**பெரியமடு** - இங்கிருந்து மேற்கே செல்லும் வீதியில் 4வது கல்லில் நாம் பெரிய மடுவைக் காணலாம். மிகக்குறைந்த குடித்தொகையிருந்தபோது பெரியமடு (குளம்) ஒன்று அழகிய தாமரைகள் படர்ந்ததாய் இருக்கின்றது. எக்காலமும் வற்றாத இக்குளத்தில் பாரிய முதலைகள் பகலிலும் உலாவும். வன்னிக்காட்டுக் குளங்கள் எல்லாவற்றிலும் முதலைகள் இருப்பினும்,





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்குள்ள முதலைகள் வித்தியாசமானவை. பணிக்கர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த சிற்றரசாக விளங்கியது இந்தப் பெரியமடுதான். இன்னுமொரு பெரியமடு நெடுங்கேணி வீதியிலுண்டு. அது இங்குள்ள குடித்தொகையினரின் குடியிருப்பேயாம். (ஒரு குறித்த இடத்திலிருந்து பெயர்ந்து குழுவாக வேறிடத்தில் வாழ்பவர்கள் தமது ஊர்ப்பெயராலேயே விழிக்கப்பட்டதால் இடமும் அதே பெயரைப் பெறுவதாகின்றது. உ+ம்: திருநெல்வேலி, இளமருதங்குளம், கோயில்குளம், போன்றவை) இதனை அடுத்த காட்டுவீதி, மாதர்பனிக்க மகிழங்குளம் சென்று மிதப்பதும். உள்வீதி வன்னிவிளாங்குளம், கொல்லவிளாங்குளம், கொல்லபுளியங்குளம் ஆகியவற்றை இணைப்பதும் சான்றாகும். இன்னும் இக்காடுகளுள் கைவிடப்பட்ட சிறுகுளங்கள், கோவில்கள், பண்டைய கட்டுகளுடனான கிணறுகள் காணப்படுகின்றன. பெரியமடு அம்மன் கோவில் பல்லாண்டு கால பெருமைமிக்கது. வன்னியர் வழிபட்ட காலப் பாடல்களும் உள. (இராணுவம் இக்கிராமத்தை முதல் இலக்குவைத்தமையும் இதனாலேயாம்).

**பன்றிக்கெய்தகுளம்** - யாழ். கண்டி சாலையில் பனிக்கநீராவி கடந்து ஓமந்தை நோக்கி முன்னே 2மைல் நகர வரும் பாடசாலையடி பன்றிக்கெய்தகுளம், ஊர்களுக்கு பெயர் சந்தர்ப்பங்கள் சுட்டிப் பேசப்படுவதாலும் உண்டாவதுண்டு. அப்படி வந்த பெயர் இது. இங்கிருந்து ஒரு சாலை இவ்விடத்தில் கிழக்காகப் பிரிந்து மேல் செல்லும். அதில் இரண்டுகல் போக மரையடித்தகுளம் வரும். இதுவும் ஒரு காரணப் பெயரே இங்கிருந்து தபாற்கந்தோர் அருகே வடக்கே செல்லும் சாலை அநந்தர் புளியங்குளத்தைத் தொடும்.

**அநந்தர்புளியங்குளம்** - அநந்தர் என்ற உடையாரின் பரம்பரைக்குச் சொந்தமான கிராமம் இப்போது திருமணத்தொடர்புகளால் பரந்துள்ளது. நகரவாடையே வீசாத அநேக கிராமங்கள் இங்குண்டு. இதுவும் அது போன்றதே. இங்கிருந்து 4கல் தொலைவு வடக்கே போக நெடுங்கேணியிலிருந்து புளியங்குளம் வரும் சாலையை நைனா மடுவருகே தொடும்.

**மரையடித்தகுளம்** - இதுவும் ஒரு காரணப்பெயர். இங்கிருந்து கிழக்கே செல்லும் சாலையில் 2கல் தொலைவு.

**ஆறுமுகத்தான் புதுக்குளம்** - கரும்புலி போர்க் அண்ணருடைய வீடு இங்குள்ளது. பிரசித்தமானதொரு அபிவிருத்தியுள்ள கிராமம். இதைக் கடக்க வருவது மாளிகை நொச்சிக்குளம் ஆகும்.

**சேமமடு** - சேமமடு தொடங்கவுள்ளது. இக்கிராமமும் சேமமடு படிவங்களை அடக்கியதேயாம். இன்னும் ஒருமைல் இந்தக் கவட்டை (கெவர்) வீதியில் எதில்போனாலும் சேமமடு வரும். இதுவொரு பாரிய குடியேற்றப் பிரதேசம். 1984 சேமமடு 1ம் படிவத்தில் அனைத்து ஆண்களையும் கைது செய்த சிங்கள இராணுவம் அனைவரையும் சுட்டுக்கொன்றது. 70 பேர் கொல்லப்பட்டனர். பெளனம்பெரியகுளம், சேமமடு, தாமரைக்குளம், தபாற்கந்தோர், சுகாதார நிலையம், வாசிகசாலை, பாடசாலை, விவசாயக்கந்தோர், என அனைத்தும் உள்ள மாதிரிக் கிராமம். இது ஓமந்தை நகரிலிருந்து ஏழாவது மைலில் உள்ளது.

**விளக்குவைத்தகுளம்** - மிக அண்மைக் காலத்திலேயே குடியேறிய குக்கிராமம். புகையிரதக்கடவையை இனங்காட்ட இரவில் இங்கு விளக்கேற்றி வைக்கப்பட்டதால் அந்தப்பெயர்வந்ததாகக் கூறுவர். மகிழங்குளம் உட்புறமாகவும், புதியவேலர்சின்னக்குளம் என்ற குடியேற்றக்கிராமமும் இங்குள்ளது. இது வன்செயலில் இடம்பெயர்ந்த மலையக மக்களுக்கான குடியேற்றமும், தனிக்கிராம சேவையாளர் பிரிவுமாகும்.



ஓமந்தை-ரம்பைக்குளம் - இன்னும் ஓமந்தை நகருக்கு ஒருமைல் இருக்க வருவது இந்த இடம். இங்கிருந்து மேற்கே செல்லும் சாலை பதினேழாவது மைலில் மூன்றுமுறிப்புக் கிராமத்தையடையும். இடையே 4வது கல்லில் கதிரவேலர் பூவரசங்குளத்தில் இடப்புறம் திரும்பி புகழ்பெற்ற வண்ணான்குளம் அம்மன் ஆலயத்தைக் காட்டு முகப்பில் கண்டு காட்டுக்குள் புகுந்து பறங்கியாற்றைக் கடந்து எட்டாவது கல்லில் கோதண்ட நொச்சிக்குளத்தை அடையும். மேலும் இப்பாதை தவசியாக்குளத்தைக்கடந்து தாண்டிக்குளமிருந்து இரணை இலுப்பைக்குளம் வரும் சாலையை ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தருகே தொடும். ஆக ஓமந்தை ரம்மைக்குளம் மேற்குச் சாலையில் நாமும் போகலாம்.

**1ம் கல் கொந்தைக்காரன் குளம்** - நிரம்ப பட்டதாரிகளைக் கொண்ட விவசாயக்கிராமம்.

**4ம் கல் கோழியகுளம்** - ஒரு சிறிய கிராமம்

**கதிரவேலர் பூவரசங்குளம்** - தனித்த உடையார் பரம்பரையினர் வாழுகின்ற கிராமம். விவசாயக் காணிகளும் ஊரைச் சுற்றி பல குளங்களும் உண்டு.

**5வது கல் மாதர்பனிக்க மகிழங்குளம்**- பெண் பணிக்கர்கள் வாழ்ந்த இடமாக கொள்ளப்படுகிறது. இங்குள்ள வேரக்கல் குன்றும் அங்கு கூட்டங் கூட்டமாக அலையும் முதலைகளும் இக்குன்றின் உச்சியில் அமைந்துள்ள ஆழங்காணமுடியாத ஊற்று நிலைபற்றியும் பல ஐதீகக்கதைகள் உண்டு.

**கிழவன்குளம்** - இது மாங்குளத்தருகே இருப்பதல்ல. இது வேறு. இதற்கு இணையான கிழவிகுளம் நெடுங்கேணியில் உள்ளதாம். ஒரு கிழத்தம்பதி பற்றிய கதை இக்கிராம வாசிகளிடம் உண்டு. இதன் புறமருங்கே இடிபாடுகளுடன் கூடிய புராதனச்சின்னங்கள் காணப்படுகின்றன.

**8வது கல் பாலமோட்டை** - பெரிய கிராமம் இங்கிருந்து புதூர், பெரியமடு, கல்மடு போன்ற கிராமங்களுக்கு இணைப்புண்டு. பாலமோட்டை மக்கள் மிகமிகப் பழமையான சுயபொருளாதாரத்திலேயே வாழ்ந்து வருபவர்கள்.

**10வது கல் நவ்வி** - இதன் பின்காட்டுள் துடரிக்குளம் என அழைக்கப்படும் பழைய கிராமம் கைவிடப்பட்டுள்ளது. நவ்வி பாரிய பண்ணை அமைக்கப்பட்டிருந்த இடம். முழுமையாக பண்ணைசார் கூலித் தொழிலாளர் வசிப்பிடமாக இருந்தது.

**குஞ்சுக்குளம்** - சின்னஞ்சிறிய குளங்கள் எல்லாம் குஞ்சுக்குளங்கள்தான். இதுவும் ஏழு குடும்பங்களுடனும் புகழ் பெற்ற அம்மன் கோவிலுமாக இருந்த ஊர் அந்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தக்குளம்கூட ஆலயத்துக்கான மானியமாக அரசர்கள் காலத்தில் பட்டயம் செய்யப்பட்டதே. காலப்போக்கில் இங்கு குடிமக்கள் வரவும் விவசாய நிலமும் அதிகரித்து சின்னச்சின்னக் குளங்களும் திருத்தப்பட்டு பல குஞ்சுக்குளங்கள் வந்துள்ளன. கோவிலின் தென்பக்கத்தால் வரும் வண்டிப்பாதை இன்னும் 4 கல் நகரும்.

**மூன்றுமுறிப்பு** - இப்போது ஓமந்தை ரம்பைக்குளம் வழியாக மூன்றுமுறிப்பை அடைந்தோம். இது துணுக்காய் பனங்காமம் ஊடாக பூவரசங்குளம் செல்லும் சாலை, இங்கிருந்து மேலும் தெற்கு நோக்கி நகருவோம். பறங்கியாறு வீதியைக் கடக்கும் முச்சந்தித் தொடுப்பு (மீண்டும் மாங்குளம் வருக) .

**மூன்றுமுறிப்புச்சந்தி** - மாங்குளம் மல்லாவிச்சாலையில் மூன்றாவது மைல் தெற்கே நோக்கித் திரும்பி மன்னாகுளம் கிராமத்தை அடைவோம்.

**மன்னாகுளம்** - கனகராயன்குளத்தைச் சேர்ந்த பழைய கிராமம். கண்டிச்சாலையில் மாங்குளமிருந்து ஓமந்தை நோக்கி 4வது கல்லில் வலப்பக்கமாக இது இருக்கின்றது. மிகக்குறைந்த குடித்தொகை. மன்னாகுளம் கடந்து மூன்றுமுறிப்புச்சந்தியை இந்த வீதிதொட்டு திரும்பி புதூர் செல்லும்.

**கல்லிருப்பு** - நடுக்காட்டுள் அமைந்துள்ள ஒரு அம்மன்கோவில். இங்கு மக்கள் வாழ்வதற்கான அறிகுறிகள் இல்லை. எனினும் கோவில் பூசை நடப்பதுண்டு. பூசகர் பாலைப்பாணியிலிருந்து வருவார்.

**பாலைப்பாணி** - பாலியாற்றுப்பாலம் கடந்து வவுனிக்குள அலைகரையை ஒட்டி நேர்செல்ல வரும் கிராமம். தனியார் உடமை - இது கடந்து வரும் மூன்றுமுறிப்புக்கும் பாலைப்பாணிக்கும் 3 மைல் தொலைவு.

**சின்னவலையன்கட்டு** - மூன்றுமுறிப்புப் பாலம் கடந்து வரும் கிராமம். இது கடந்து வருவது.

**விளாத்திக்குளம்** - என்னவோ வன்னி நிறைய விளாத்திக்குளம் உண்டு. இது இரணைஇலுப்பைக்குளத்திலிருந்து ஆறு மைல் தார்சாலையும் பஸ் போக்குவரத்தும் இருந்த இடம். பாடசாலை, ஆரம்பச் சுகாதாரநிலையம் எல்லாம் உண்டு.

**பூவரசங்குளம்** - குடியேற்றக்கிராமம் வீதியின் கிழக்கே உள் அமைந்த கிராமம். இங்கிருந்து காக்கையன்குளம் செல்ல காட்டுவழி உண்டு.

**அலைகள் போட்டகுளம்** - ஒருபுறம் பள்ளமும் - ஒருபுறமும் குடியிருப்பும் அமைந்த கிராமம்.

**(மீண்டும்) பனங்காமம்** - பனங்காமம் பற்று பண்டாரவன்னியன் காலத்தில் கைலாயவன்னியனால் ஆளப்பட்டது. இங்குகைலாய வன்னியனால் பூசிக்கப்பட்டது எனக் கருதப்படும் கோவிலும் உண்டு. இங்கிருந்து தென்மேற்காகச் செல்லும் சாலைக்குப் போகுமுன், தெற்கே மூன்றுமுறிப்பு என்பதை நினைவிற் கொள்வோம். தென்மேற்கு சாலை - 3கல் தொலைவுக்கும் சற்று அதிகமாக சிராட்டிக்குளம். இடப்பெயர்வின் முன் ஆக 12 வீடுகளே இருந்த அருவிக்கரைக்குடியிருப்பு சிராட்டிக்களமூடாக இப்பாதை பெரியமடுவை மன்னார் பெரியமடுவை அடையும்.

**பாலம்பிட்டி** - பாலன்பிட்டி என்று கிறிஸ்தவர்களால் சூட்டப்பட்ட பெயரே பாலம்பிட்டியானது. மற்றப்படி இங்கே குறிப்பிடும் படியாக பாலம் எதுவும் இல்லை. மேற்கே- பெரியமடு, தெற்கே - மடுதேவாலயம்-, கிழக்கே - முள்ளிக்குளம், எனச் செல்லும் சாலைகள் இங்கே சந்திக்கின்றன.

**முள்ளிக்குளம்** - இரணை இலுப்பைக் குளத்திலிருந்து மடு செல்லும் சாலையில் 8வது மைலில் அமைந்துள்ள இடம். குளப்பாசனக் காணிகள் உள்ள அகதிக்குடியேற்றம்.

**கீரிசுட்டான்** - முள்ளிக்குளம் கடந்து பறங்கியாற்றின் கிளைப்பாலம் கடக்க வரும் கிராமம், தென்னிந்திய திருச்சபையினரின் குடியேற்றத்திட்டம்.

## வரலாற்றில் ஆழப்பதிந்த ஆவணியில்....

### மலையகத் தமிழரை நாடற்றவர்களாக்கிய பிரஜாவுரிமைச் சட்டம்

பெருந்தோட்டத் துறையை இலங்கையில் விருத்திசெய்வதற்காக வெள்ளையரால் தமிழகத்தில் இருந்து தமிழர்கள் அழைத்துவரப்பட்டனர். இரு நூற்றாண்டுகளுக்கு மேல் வாழ்ந்து பெருந்தோட்டத் துறையின் முதுகெலும்பாகத் திகழ்ந்த மலையகத் தமிழர்கள், சுதந்திர சிறிலங்காவின் முதல் பிரதமரான டீ.எஸ். சேனநாயக்கா தலைமையிலான அரசு, 20.08.1948 இல் கொண்டு வந்த பிரஜாவுரிமைச் சட்டத்தினால் நாடற்றோராகவும், வாக்குரிமையற்றோராகவும் ஆக்கப்பட்டார்கள். இதனால் பல லட்சக்கணக்கான தமிழ் மக்கள் ஏதிலிகளாக அல்லலப்பட்டனர்.

### 1981 தமிழர்கள் மீதான தாக்குதல்கள்

1981ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முழுவதிலும் தமிழர்கள் அதிலும் குறிப்பாக மலையகத் தமிழர்கள் மீது பரவலான இனவன்முறைகள் சிங்கள இனவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்டன. விசேடமாக மூன்று இடங்களில் வாழ்ந்த தமிழர்கள் தாக்கப்பட்டனர். அவையாவன இரத்தினபுரி மாணிக்கக்கல் சுரங்கத் தொழில் ஸ்தலம், நீர்கொழும்பு, மத்தியமலைநாடு ஆகிய இடங்கள் ஆகும். சிறிலங்காவின் பொருண்மியத்தை வளப்படுத்துவதற்காக தமது இரத்தத்தை வியர்வையாகச் சிந்திய மலையகத் தமிழர்களில் 50ற்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர். 5000ற்கும் அதிகமான மலையகத் தமிழர்கள் ஏதிலிகளாகினர்.

### அராலி கண்ணிவெடித்தாக்குதல்

08.08.92 அன்று, யாழ் அராலிப் பகுதியில் சிங்களப் படையின் கட்டுப்பாட்டுப் பகுதியுள் வெற்றிகரமாக ஊடுருவிய புலிகளின் சிறப்பு வேவுப் பிரிவு நடத்திய கண்ணிவெடித்தாக்குதலில், சிறீலங்காப் படைத்துறையின் வட பிராந்திய உயர் அதிகாரிகளான வடபிராந்திய ஆணைத்தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவா, கடற்படையின் வடபிராந்தியத் தளபதி கொமடோர் மொகான் ஜெயமாகா, மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணா, கேணல் ஆரியரத்தினா, லெப்.கேணல் பலிப்பான, லெப்.கேணல் ஸ்ரீபன் உட்பட 9 உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

### முதலாது தமிழீழ மாவட்ட நீதிமன்று திறப்பு


தனியரசுக்கான அலகுகளில் ஒன்றான நீதிமன்று 1993.08.21அன்று சுன்னாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்ட நீதிநெறிகளை நிலைநாட்டி மேற்பார்வை செய்ய வேண்டிய அமைப்பு என மக்களால் பாராட்டப்பட்ட தமிழீழ நீதிமன்றங்கள் தமிழீழ நீதி நிர்வாகத்துறையினரால் நிர்வகிக்கப்படுகின்றன.

### முதற் பெண் கடற்கரும்புலித் தாக்குதல்

16.08.94 அன்று காங்கேசன்துறை துறைமுகத்தினுள் வெடியாய்ப் பாய்ந்தாள் அங்கையற்கண்ணி. 175 அடி நீளமும் 50அடி அகலமும் கொண்ட சிங்களக் கடற்படையின் தாய்க்கட்டளைக் கப்பலும் டோறாப் படகும் மூழ்கடிக்கப்பட்டது. முதற் பெண் கடற்கரும்புலியான அங்கையற்கண்ணி நீரடி நீச்சல் பிரிவு முதற் கடற்கரும்புலியாகவும் சாதனை படைத்தார்.

### 1977ஆவணி இனப்படுகொலைகள்

ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் புதிய அரசியலமைப்புச் சட்டத்தைக் கண்டித்து தமிழர்கள் அமைதிவழியில் தமது எதிர்ப்பைத் தெரிவித்து போராட்டம் நடத்தினர். அப்போது பிரதமராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா திட்டமிட்டபடி தமிழர்கள் மீதான இனப்படுகொலையை நெறிப்படுத்தினார். 15.08.1977 அன்று யாழ் நகரில் இடம்பெற்ற கலைநிகழ்வு ஒன்றில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து தென்னிலங்கையிலும் தமிழர்கள் கண்மூடித்தன மான முறையில் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டார்கள். 400 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பல தமிழ்ப் பெண்கள் பாலியல் வதைக்கு உள்ளாக்கப்பட்டனர். தென்னிலங்கையில் இருந்த பலகோடிப் பெறுமதியான தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப் பட்டன. 40,000 தமிழர்கள் ஏதிலியானார்கள். கொழும்பிலிருந்து மூன்று கப்பல்களில் தமிழர்கள் ஏற்றப்பட்டு ஏதிலிகளாக யாழ் குடாநாட்டிற்கு அனுப்பப்பட்டனர்.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போரில் இயலாமை – அரசியல் தீர்வில் நாட்டமின்மை அதளபாதாள நிலையை நோக்கி சிங்கள அரசு

"விடுதலைப்புலிகள்" பத்திரிகை [ஆடி 2000]

ஓயாத அலைகள் ஆரம்பித்து சுமார் 08 மாதகாலம் வரையிலும் சிங்களப்படைகளால் ஒரு வலிந்த தாக்குதலை புலியணிகள் மீது நடாத்த முடியவில்லை. தற்காப்புச் சண்டைகளை மட்டுமே நடாத்த வேண்டிய இக்கட்டான இராணுவச் சூழலில் சிங்களப்படை இருந்தது.

எட்டு மாதங்களின் பின் மணலாறு, நாகர்கோவில், அரியாலை, நாவற்குழி என நான்கு முனைகளில் இழந்த நிலத்தைக் கையகப் படுத்தும் ஆசையுடன் சிங்களப் படையினர் வலிந்த தாக்குதலை நிகழ்த்தியிருந்தனர்.

எனினும் படையினரின் நான்கு வலிந்து தாக்குதல்களின் மீதும் புலிவீரர்கள் முறியடிப்புத் தாக்குதல்களைத் தொடுத்து படையினரை முன்னைய இடங்களுக்கு விரட்டியடித்து- அவர்களின் தாக்குதல்களை முறியடித்துள்ளனர்.

இவ்விதம், வடபுலப்போர்முனையில் நடைபெறும் மரபுவழிச் சண்டைகளில் படையினர் பலத்த இராணுவத் தோல்விகளைச் சந்தித்தபடியிருக்கும் அதேவேளை, கிழக்குப் போர்முனையில் புலிவீரர்களின் கரந்தடித் தாக்குதல்களினால் சிங்களப்படையினர் கணிசமான அழிவுகளையும் ஆயுத இழப்புக்களையும் சந்தித்து வருகின்றனர்.

சிங்களப்படையுடன் ஒப்பிடும்போது எண்ணிக்கையில் குறைந்த புலிப்படை, எண்ணிக்கையிலும் - ஆயுதபலத்திலும் அதிகமான சிங்களப்படை நிலைகள் மீது தாக்குதல் நடத்தி அவற்றை வெற்றி கொள்வதும், வென்று மீட்ட நிலங்களில் புலிவீரர்கள் நிரந்தரமாக நிலை கொள்ளும்போது அதை முறியடிக்க முடியாத இராணுவ இயலாமையுடன் சிங்களப் படைகள் தவிப்பதுமாக இன்றைய கள யதார்த்தம் உள்ளது.

ஒரு கட்டத்தில் குடாநாட்டுப் படையைப் பாதுகாக்க உலக நாடுகளின் உதவியை சிங்கள அரசு இரந்து கேட்ட இராணுவ அவ மானத்தையும் சிங்களதேசம் அனுபவித்துவிட்டது. குடாநாட்டுப் படையின் இருப்பு அதற்கு அபாயம் நிறைந்ததாகவே உள்ளது.

புலிகளை ஒடுக்குவதற்காக எந்தப் பேய்களிடமும் உதவி கோருவேன் என, அன்று ஜே.ஆர் ஜெயவர்த்தனா கூறியிருந்தார்.

புலிகளிடமிருந்து குடாநாட்டுப்படையைப் பாதுகாப்பதற்காக எந்தப் பேயிடமும் உதவி கோரும் நிலையில் சந்திரிகா அம்மையார் இன்றுள்ளார்.

இவ்விதம் தனது தேசிய கௌரவத்தை அடகு வைத்தாவது புலிகளுடன் போர்புரிய வேண்டிய இராணுவ இயலாமையுடன் சிங் களப்படை உள்ளது.

புதிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்தும்; ஆள் எண்ணிக் கையை மேலும் அதிகரிக்கச் செய்விக்க புதிதாக படையில் ஆட் களை இணைத்தும்; ஓடிய படையினருக்கு சலுகைகளை அறிவித்து - ஆசையூட்டி மீண்டும் படையில் இணைக்கவும்; போர்ச்செலவீனத்தை மேலும் மேலும் அதிகரித்தும்; சிதைந்து போயுள்ள சிங்கள அரசின் போர் இயந்திரத்தைப் புனர மைப்புச் செய்ய, அரசு முயற்சிக்கின்றது.

இந்த முயற்சியால் சிங்களஅரசு பெரும்பயனைப் பெறப்போவ தில்லை என சிங்கள ஆய்வாளர்களே அரசை மிரட்டியுள்ளனர்.

போரில் சிங்களப்படைகள் சந்தித்துவரும் மோசமான தோல்விகளின் விளைவுகளை சிங்கள மக்கள் உணராது தடுப் பதற்கும், சிங்கள அரசாங்கத்தின் இராணுவ இயலாமையை மூடி மறைக்கும் இலக்குடனும் பத்திரிகைத் தணிக்கையை அரசாங்கம் கடைப்பிடிக்கின்றது.

போர்மூலம் தமிழரின் அரசியல் போராட்டத்தை ஒடுக்கமுடியாது என்பதை களயதார்த்தம் நன்கு உணர்த்திய பின்னர், அரசியல் தீர்வு முயற்சிக்காக புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை நடாத்த வேண்டும் என்று சர்வதேச நாடுகளும் - மனிதாபிமான நிறுவனங் களும் சிங்கள அரசைக் கோரிவருகின்றன.

ஆயினும் அந்த சர்வதேச அபிப்பிராயத்தை சிங்கள அரசு கௌரவிப்பதாகத் தெரியவில்லை. அதற்கும் பதிலாக புலிகளுடன் போர்புரிய உதவுமாறு தனது நட்பு நாடுகளுக்கு அது கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும் மேலைத்தேய நாடுகளிடமிருந்து பொருண்மிய உதவி களைப்பெறும் நடவடிக்கைகளுக்காக பேச்சுவார்த்தை என்ற தந்தி ரோபாய நிலைப்பாட்டையும் சந்திரிகா அரசு கைவிடவில்லை. அரசி யல் தீர்வு முயற்சியில் தனது அரசாங்கம் ஆர்வமாக இருக்கின்றது என உலகிற்குக் காட்டும் முயற்சியிலும் அரசு இறங்கியுள்ளது.

தமிழரின் அரசியல் பிரதிநிதிகளான புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடமாட்டேன் என முன்னர் அறிவித்து, ஆயுதங்களை புலிகள் கைவிட்டால் அவர்களையும் பேச்சில் இணைத்துக் கொள்வேன் என பின்னர் அறிவித்து, அரசியல்தீர்வு முயற்சியில் அம்மையாருக்கு இருக்கும் "உண்மையான அக் கறையை" பகிரங்கப் படுத்தியுள்ளார்.

போர்விரிவாக்கத்தாலும் - ஆயுதப் பெருக்கத்தாலும் சிங்கள அரசின் பொருண்மியபலம் பெருமளவு சிதைந்துவிட்டது.


அரச பொருளாதாரம் பற்றாக்குறையாக உள்ளதால் வரி அதி கரிப்பு உட்பட பல்வேறு பொருண்மியச் சுமைகளை சிங்கள மக்கள் மீது சுமத்தி ஒரு சமூக- பொருளாதாரப் பிரச்சனையை சந்திரிகா அரசு உருவாக்கியுள்ளது.

படையை விட்டோடிய சிப்பாய்களால் சிங்களசமூகம் பயமுறுத் தப்படுகின்றது என பல்வேறு சிங்கள சமூகவியலாளர்கள் எச்சரிக் கின்றனர். இவர்களின் குற்றச் செயல்களால் சிங்கள சமூகத்தில் கொலைகளும் தற்கொலைகளும் பெருமளவு அதிகரித்துள்ளன.

சிங்கள அரசு சந்தித்துள்ள இராணுவ-அரசியல் - பொருளாதார நெருக்கடிகளுக்குப் பிரதான காரணம் புலிகளின் இராணுவ பல வளர்ச்சிதான்.

இந்தப் பலவளர்ச்சி இன்னும் வளர்த்தெடுக்கப்படும்போது சிங்கள அரசு முழுமையாகவே ஸ்தம்பிதநிலையை அடையலாம் .

அதுவே தமிழரின் அரசியல் இலட்சியம் ஈடேறும் உச்சக்கட்டமாக இருக்கும்.




கருத்தோவியம் கி.ஓவியநாதன் (போராளி)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆண்பரும் தீரவுகள்

என் பாதையெங்கும்
பரவிக்கிடக்கின்றன முட்கள்
வைத்தகால் எடுக்கும் நிமிடத்தில்
எப்போது மிதிவெடி அதிரும்
சுடுகுழல் எப்போது குறிபார்க்கும்
எனக்குத் தெரியவில்லை.
இங்கு மனிதர்கள் வாழ்ந்த
சுவடிருப்பதாய்த் தெரியவில்லையே
பேய்கள் ஆட்சி செலுத்திய நகராய்
தெரிகின்றது அப்பூமி.
அமைதியுடன் வாழ்வதற்கான
கனவுகளை எரித்து
அதன்மேற் கட்டிய
நச்சுப் புற்றுகள் நசிந்து
போய்க் கிடக்கின்றன.


துளித் துளியாய் வியர்வை சிந்தி
சிறுகச் சிறுகச் சேமித்து
எத்தனை ஆசைகளுக்கு அணைபோட்டு
தம் கனவுகளுக்காய் உழைத்திருப்பர்
என்மக்கள்.
தன் தலைமுறைக்கன்றி
எதிர் காலத்துக்காய்
எத்தனை மரங்களை நட்டிருப்பர்.
எம்மை அடிமையென்றெண்ணி
வந்து குந்தியோரின்
துப்பாக்கிகள் துப்பிய சன்னங்களில்
பீரங்கிகள் பொழிந்த அனல் மழையில்
இரக்கமற்ற அவர்களின்
கோரத்தாண்டவத்தில்
தண்ணீரில் எழுதிய கோலமாய்
எல்லாம் கலைந்து கிடக்கிறதே.

யுத்தம்
கொடிய யுத்தம்
தாய் தந்தை உறவுகளுடன்
இனிமையாய் வாழாது
என்னைத் துரத்திய யுத்தம்.
காப்பரணில் சற்று முன்னிருந்த தோழியை
அடுத்த நிமிடத்தில் உயிர்குடித்த யுத்தம்.
கந்தகக் காற்றையே
என் மெல்லிய அணுகுமுறையை எல்லாம்
வன்முறையால் விழுங்கிய யுத்தம்.
ஏன் சிங்களத்து வீரர்களைக் கூட
தம் சொந்த நிலத்தில் வாழவும்,
சாகவுங்கூட
விடாத கொடிய யுத்தம்.
எனக்குப் பிடிக்கவில்லை
பிடிக்கவேயில்லை.

துப்பாக்கி என் கரத்திலிருப்பதால்
யுத்தவெறி பிடித்தவள் என்று
எவர் சொல்ல முடியும் என்னை?
கொல்லத் துணிந்தவள் என்று
எப்படி நம்ப முடியும்?
யார் நிலத்தையும் அபகரிக்க
நான் துணியவில்லை.
யார் வேலியையும் பிய்த்தெறிந்து விட்டு
பயிர்களைக் கருக்க
நான் முயன்றதேயில்லை.
யாரது சாவின் மேலேறி நின்றும்
இன்புற்றிருக்க விழைந்ததில்லை.
நான் சுதந்திரமாய் நடக்க
முடியாத வீதி
எனக்குக் கொடிதாய் விரிந்த காலம்.

என்னிமை சிந்திய
இரத்தக் கண்ணீர்
எதையுமே நாளைய தலைமுறை
சுமக்கக் கூடாது.
என் காதுகளால் ரசிக்க முடியாத
ஓசைகள்
உணர்வுகளை உருக்குலைக்கும்
நான் பார்க்க
மறுத்த காட்சிகள்
எல்லாம் என்னுடன்
முடியட்டும்.

கோரத்தின்
பயங்கரத்தைச்
சுமந்த
எம் தாய்நிலம்
ஆறும் வரை
எம் குரல்வளை
நெரிக்க வருவோர்
- எம்மை
ஓட ஓட விரட்டும்
வரை
நாங்கள்
யுத்தமிட்டுக்
கொண்டிருப்போம்.
சமாதானத்திற்காய் நாங்கள்
சாகலாமெனில்
போரைக் கொல்லவும் நாங்கள்
போரிடலாம்.



- அம்புலி -



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குடியேற்றங்களால் இழந்துபோன தமிழ்ப் பிரதேசங்கள்

கலாநிதி க.குணராசா

*முன்னிதழ் தொடர்ச்சியும் முடிவும்.*

கி.பி 10 ஆம் நூற்றாண்டில் இலங்கை முழுவதையும் ஈழ மண்டலம் அல்லது மும்முடிச் சோழபுரம் எனஅழைக்கப்பட்டது. சோழர் ஆட்சி நிலவியது. சோழராட்சியிலிருந்து மீண்டும் தென்னிலங்கையை பராக்கிரமபாகு என்பவன் ஒருவாறு கைப்பற்றிக்கொண்டான். மாகன் என்னும் தமிழ் மன்னன் கைப்பற்றும் வரை இலங்கை சுதந்திரத்தை இழந்திருந்தது. மாகன் தனது ஆட்சித்தலைநகராக ஜனநாதமங்களம் எனப்பட்ட பொலன்நறுவையை அமைத்துக் கொண்டான். சிங்களவர்களால் தமிழர்களிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்ட நிலங்கள் சொத்துக்கள் என்பவற்றை இவன் மீளப்பெற்றுக் கொடுத்தான்.

இதனை மகாவம்சம் அழகாகக் கூறுகின்றது “சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே தர்மமான சமத்துவம் பாராட்டிய பண்டைய எல்லாளனைப்போல மாகன் விளங்கவில்லை. இவன் தனது தமிழ்த் துணைவரிடம் விசேடமாக அன்பு பாராட்டி அவர்களுக்கு புற்றரைகளும், வீடுகளும், தோட்டங்களும், பணியாட்களும், மாடுகளும், எருமைகளும் - தொகுத்துக் கூறுங்கால் சிங்களவரின் உடமைகள் யாவற்றையும் கொடுத்தான். அந்தோ காலனின் பூதங்கள் போன்ற அந்தத் தமிழ் பூதங்கள் இப்படியே இந்த இராச்சியத்தையும் சமயத்தையும் அழித்தனர்.” என மகாவம்சம் ஆற்றாமையினால் புலம்பும். தமிழர் பிரதேசங்களை சிங்கள ஆதிக்கத்திலிருந்து மீட்டு, இராசரட்டை எனப்படும் வட பகுதியில் அத்துமீறிக் குடியிருந்த சிங்கள ஆக்கிரமிப்பாளர்களை, தென்புலம் பெயர வைத்தவன் மாகன் ஆவான்.

கி.பி 1236ஆம் ஆண்டு இரண்டாம் பராக்கிரமபாகு என்ற சிங்களவனிடம் தென்னிலங்கை பறிபோனது. மாகன் தென்னிந்தியாவிற்கு ஏகிப் பின்னர், விஜய காலிங்கன் என்ற புதியநாமம் சூடி பெரும் படை சேர்த்து வந்து தமிழர் அரசாம் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னானான். அக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம் மேற்கே குதிரைமலை முனையிலிருந்து கிழக்கே கதிர வெளி வரைக்கும் ஒரு நேர்கோடு வரைவோமாயின் அக்கோட்டிற்கு வடக்குப்புறப் பிரதேசம் முழுவதையும் அடக்கியிருந்தது.

கி.பி 1505இல் போர்த்துக்கேயர் இலங்கைத் தீவுக்கு வந்த வேளையில் இங்கு ஐந்து இராச்சியங்கள் இருந்தன. யாழ்ப்பாண இராச்சியம் தமிழ் மன்னனாலும், கண்டி இராச்சியம் தமிழகத்து நாயக்க தமிழ் மன்னாலும், ஆளப்பட்டன. கண்டி இராச்சியத்தின் ஆளுகையின் கீழ் அதே வேளை வன்னியர்கள் நிர்வாகத்தில் மட்டக்களப்பு, அம்பாறை தமிழர் பிராந்தியங்கள் அடங்கியிருந்தன. கோட்டை, சீதாவாக்கை, இரய்கம என்ற மூன்று மேற்குக் கரையோர இராச்சியங்கள் சிங்கள மன்னர்களின் ஆதிக்கத்தின் கீழ் விளங்கின. இலங்கையின் பெரும் பகுதி தமிழ் அரசாட்சி நிலவியது. அதே வேளை இலங்கைத்தீவு முழுவதுமே தமிழே நிர்வாக மொழியாகவும் விளங்கியது.

ஒல்லாந்தர் காலத்தில் கண்டி இராச்சியம் தவிர்ந்த கரையோரங்கள் அனைத்தும் அவர்களால் கைப்பற்றப்பட்டன. மட்டக்களப்பு கரையோரமும் அவர்களின் ஆளுகையின் கீழ் வந்தது. அவர்கள் தமிழர் வாழும் பிரதேசங்களை ஒரு பிரிவாக்கி யாழ்ப்பாணப் பிரதேசம் எனப் பெயரிட்டு நிர்வகித்தனர். அவ்வாறு பிரிப்பது அவர்களுக்கு இலகுவாக இருந்தது. இவ்விரு பெரும் பகுதிகளிலும் தமிழ் மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வந்தமையும், யாழ்ப்பாணப் பிரதேசம் எனப்பட்ட இப்பெரும் பகுதியையும் ஏனைய சிங்களப் பகுதிகளையும் தெளிவான பல மைல்கள் அகலமான காடு பிரித்திருந்தமையும் தனித்ததொரு பிரதேச அலகாக அவர்களைக் கருத வைத்தது.



எல்லாள மாமன்னனைச் சித்தரிக்கும் ஓவியம்

பிரித்தானியர் இலங்கையை ஐந்து மாகாணப்பிரிவுகளாகப் பிரித்து ஆண்டனர். தெதுறு ஓயாவிற்கும் யான் ஓயாவிற்கும் வடக்கேயுள்ள பகுதி வடமாகாணம் எனப்பட்டது. யான் ஓயாவிலிருந்து கும்புக்கன் ஓயா வரையிலான கிழக்குப்பகுதி கிழக்கு மாகாணம் எனப்பட்டது. அவர்களின் மாகாணப்பிரிவு குடிசார் அடிப்படையில் அமைந்ததும் புவியியற் பிரதேச அடிப்படையில் அமைந்த பிரிவுகளாகும். 1946ஆம் ஆண்டளவில் இலங்கையை ஒன்பது மாகாணங்களாக இறுதியாக வகுத்தபோது தமிழ் மக்கள் வாழ்கின்ற வடக்குப் பிரதேசம் ஒரு மகாணமாகவும் , கிழக்குப் பிரதேசம் ஒரு மாகாணமாகவும் பிரிக்கப்பட்டன. தமிழரின் தாயகப் பிரதேசங்கள் குடிசார் அடிப்படையில் நிர்வாகப் பிரிவுகளாக வகுக்கப்பட்டன.

ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுபட்டபோது, அவர்கள் தமிழ் மக்களின் நலன்களைப் பேணத் தவறிவிட்டனர். போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றிய போது, தமிழர் இராச்சியம் சிங்களர் இராச்சியம் என இரு தெளிவான அரசியற்பிரிவுகள் இலங்கைத்தீவில் இருந்தன. தமது நலனுக்காக போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் பின்னர் வந்த ஆங்கிலேயரும் ஒருங்கிணைத்து ஆண்டனர். ஆங்கிலேயர் தமது ஆதிக்கத்தை விடுவித்துக் கொண்டு கப்பலேறிய போது நிச்சயமாக முன்னர் இருந்த வகையில் சிறீலங்காவையும், ஈழத்தையும் வகுத்துக் கொடுத்திருக்க வேண்டும். அக்காலத்து அரசியல் தலைவர்களும் தெளிவான இரு இனப்பிரிவுகளுக்கான இராச்சியங்களைக் கோராமல், ஒற்றையாட்சியின் கீழ் வாழலாமெனத் தப்புக் கணக்குப் போட்டுவிட்டனர். எனவே ஆங்கிலேயர் தமிழர் அரசையும் வலுக்கட்டாயமாக சிங்கள ஆட்சியாளரிடம் ஒப்படைத்து விட்டு 1948இல் இந்த மண்ணிலிருந்து வெளியேறினர்.

இக்காலகட்டத்தின் பின்னர் சிங்கள அரசு திட்டமிட்ட விதத்தில் குடியேற்றங்களை நிறுவத்தொடங்கியது. வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கும் சிங்கள மாகா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணங்களுக்கும் இடையிலான காட்டுப் பிரதேச எல்லைகளை அழித்துக் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி அவற்றில் சிங்கள மக்களைக் குடியமர்த்துவதன் மூலம் தமிழரின் பாரம்பரிய பிரதேசத்தை அபகரிக்கும் விதத்தில் செயற்பட்டது. மகாவலி கங்கையிலிருந்து கும்புக்கன் ஓயாவரை பரவியிருந்த மட்டக்களப்பு மாவட்டம் 7004 சதுரக்கிலோமீற்றர் பரப்பினைக் கொண்டிருந்தது. அதில் மூன்றில் இரண்டு பரப்பினை அதாவது 4539 சதுர கிலோமீற்றர் பிரித்து எடுத்து அம்பாறை மாவட்டத்தினை உருவாக்கியது. ஆக 2464 சதுரக்கிலோமீற்றர் பரப்பே மட்டக் களப்பு மாவட்டமாக எஞ்சியுள்ளது. இந்த இரு பிரிவுகளையும் நிரந்தரமாகப்பிரித்து அம்பாறை மாவட்டத்தினை சிங்களக் குடியேற்றமாக மாற்றிவிடும் எண்ணத்துடன் கல்லோயாக் குடியேற்றத் திட்டம் மாபெரும் குடியேற்றத் திட்டமாக உருவாக்கப்பட்டது.



ஒல்லாந்தர் கால தமிழர் நகர வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஓவியம் கி.பி 17ஆம் நூற்றாண்டு

அம்பாறை மாவட்டம் உட்பட்ட மட்டக் களப்பு மாவட்டத்தில் 1946ஆம் ஆண்டில் மொத்த சனத்தொகையில் 5.9 வீதமான தொகையினரே சிங்கள மக்களாகவிருந்தனர். கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தோடு, அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து உருவாக்கப்பட்ட சங்கமம் குடியேற்றம், நாவல்ஆறுத் திட்டம், அம்பன்ஓயாத் திட்டம் என்பனவற்றின் மூலம் சிங்களவர்கள் ஏராளமாக குடியேற்றப்பட்டனர். அதனால் அம்பாறை மாவட்டத்தில் 37.8 வீதமானோர் சிங்கள மக்களாகிவிட்டனர். 42.5 வீதமானோர் இஸ்லாமியத் தமிழர்களாகவும் ஏனையோர் தமிழர்களாகவும் உள்ளனர்.

இன்றைய மட்டக்களப்பு மாவட்டத்தினுள்ளும், அதன் எல்லைப் புறங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்பகுதியில் வடக்குத் தெற்காக அமைந்துள்ள மதுறுஓயாக் குடியேற்றத் திட்டம் மட்டக்களப்பில் 10 வீத நிலப்பரப்பினைத் துண்டித்து மாத்தளை மாவட்டத்துடன் சேர்த்துவிட்டுள்ளது. அதன் எல்லையில் அமையும் உல்கித்தஓயாக் குடியேற்றத் திட்டம் எல்லைப்புறக் காடுகளை அழித்து தனித்துவப்பிரிவினை இல்லாது செய்து விடுவதோடு மட்டக்களப்பு மாவட்டத்தின் பரப்பினுள் குடியிருப்புக்களை நிறுவ இடம் கொடுத்துள்ளது. 1991ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்போது, 1981இல் 3.4 வீத சிங்கள மக்களைக் கொண்டிருந்த மட்டக்களப்பு மாவட்டம் குறைந்தது 15 வீத சிங்கள மக்களைக் கொண்ட மாவட்டமாக மாறியிருக்கும். மதுறுஓயாத் திட்டமும் உல்கித்த ஓயாத் திட்டமும் இதனைச்சாதித்திருக்கும்.

சிங்களக் குடியேற்றங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டம் திருகோணமலையாகும். கந்தளாய்த்திட்டம் திருகோணமலையின் பரப்பில் 5 வீதத்தை சிங்களக் குடியேற்றமாக ஆரம்பத்தில் விழுங்கிவிட்டது. அதனைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட மொறவேவத்திட்டம் (முதலிக்குளம்), திருகோணமலையின் எல்லைப்புறங்களில் ஆரம்பிக்கப்பட்ட பதவியாத் திட்டம், வாகல்கடவெலத்திட்டம் என்பனவும் ஏராளமான கிராம விஸ்தரிப்புத் திட்டங்களும் திருகோணமலையில் சிங்களக் குடியேற்றங்களை அதிகரிக்க வைத்தன. 1921இல் திருகோணமலை மாவட்டத்தில் 4.4 வீதமான மக்களே சிங்களவராவர். 1946 இல் இந்த எண்ணிக்கை 14.7 வீதமாக அதிகரித்திருந்தது. குடியேற்றத்திட்டங்கள் செயற்படுத்தப் பட்டதன் பின்னர் திருகோணமலை மாவட்டத்தில் இன்று சிங்கள மக்கள் 33.4 வீதமாக மாறிவிட்டனர். திட்டமிடப்பட்ட செயற்பாடு இதுவாக அமைந்தது. தமிழரின் பாரம்பரிய நிலங்கள் அபகரிக்கப்பட்டன. அவைபற்றிய தரவுகள் கச்சேரிக் காணிக் கிளைகளில் பேணப் பட்டிருந்தன. அவற்றினை கலவரத்தின்போது திட்டமிட்டு எரியூட்டி அழித்தும் விட்டமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா மாவட்டத்தில் பாவற்குளம், உலுக்குளம், மாமடுவ, மடுகந்த முதலான குடியேற்றத்திட்டங்கள் சிங்களக் குடியேற்றத்தை இந்த மாவட்டத்தில் உருவாக்கிவிட்டன. இம்மக்களுக்கெனத் தனித்த ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. இன்று வவுனியாவில் 16.6வீதமான மக்கள் சிங்களவராவர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்கள மீனவரை குடியமர்த்த எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்ததால், மணலாற்றுப் பகுதியில் கென்ற்பாம், டொலர்பாம் என்ற இரு பெரும் தனியார் தோட்டங்களை உள்ளடக்கிய பகுதியில் இத்திட்டம் உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எப்படி மட்டக்களப்பை அம்பாறையிலிருந்து பிரித்துக் கொண்டார்களோ அதேபோன்று குடியேற்றச் சதியாக வெலிஓயாத்திட்டம் விளங்குகின்றது. இத்திட்டமும் தற்போதைய ஓயாத அலைகள் -03 இன் அலையடிப்பினால் முறியடிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தையும் அப்படியே நடுவால் குடைந்தெடுத்து அநுராதபுர மாவட்டத்துடன் சேர்க்கும் திட்டம் இதுவாகும். இதனால் முல்லைத்தீவு மாவட்டம் தனது பரப்பில் 6 வீதத்தை இழந்துவிடும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. எல்லாவற்றிற்கு மேலாக வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையிலான தரைப் போக்குவரத்தில் இப்பிரதேசம் பறிபோனால் வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக நிலப்பரப்பினால் பிரிக்கப்பட்டுவிடும்.

இவ்வாறான குடியேற்றத்திட்டங்கள் ஆங்கிலேயர் ஆதிக்கம் நிலவி விலகிய காலத்திலிருந்து திட்டமிட்ட முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அன்றைய தமிழ்த் தலைவர்கள் மண்மீட்பில் கவனம் செலுத்தத் தவறியதன் விளைவே இதுவாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள அதிகரித்த செலவீனத்தினாலும், திறமையற்ற அரச நிர்வாகத்தினாலும் சிறீலங்காவின் பொருளாதாரம் பின்தங்கியுள்ளதாக சிறீலங்கா தொடர்பாக உலகவங்கி இறுதியாக வெளியிட்ட அறிக்கையில் குறை கூறியுள்ளது. இவ்வாறான அம்சங்கள் அண்மைக்கால அறிக்கைகளில் வெளிவருவது சாதாரணமான விடயமே எனினும், இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வேறுசில விடயங்கள் இது தனிப்பட்ட ரீதியில் சந்திரிகா குமாரதுங்காவிற்கும், பொதுவில் அவரது அரசாங்கத்திற்கும் நிச்சயம் கவலை அளிக்கும் ஒன்றாகவே இருந்திருக்கும்.

அதிகரித்த யுத்த செலவீடானது சிறீலங்காப் பொருளாதாரத்திற்கு பெரும் சுமையாக மாறியுள்ளது என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றே. அதே போன்று சிறீலங்கா குறித்தமைக்குப் பல காரணிகள் இருந்திருக்கலாம். ஆனால் அதில் கட்டாயமாக ஆயுதக்கொள்வனவு தொடர்பாக இடம்பெற்ற, பெறும் ஒப்பந்தங்களில் உள்ள மோசடிகள் நிச்சயமாக இடம் பெறாமல் இருக்கப்போவதில்லை.

இதற்கும் மேலாகப் பாராளுமன்ற ரீதியிலான மேற்பார்வை போதியளவு இல்லாமையினால் அரசசேவையில் காணப்பட வேண்டிய பதிலளிக்கும் கடப்பாடு உதாசீனப்படுத்தப்படுகின்றது என்ற உலகவங்கியின் குற்றச்சாட்டானது பாராளுமன்ற ரீதியிலான மேற்பார்வையை ஜனாதிபதி சந்திரிகா திறம்பட மேற்கொள்ளவில்லை, அன்றி பாராளுமன்ற செயற்பாட்டை ஜனாதிபதி கட்டுப்படுத்தியிருந்தார் என ஒரு புறமும், சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கத்தில் அதிகாரிகள் பொறுப்பற்ற விதத்தில் தான் தோன்றித்தனமாக நடந்துகொள்கின்றார்கள் எனவும் கொள்ளத்தக்கதாகும்.

# உலகவங்கி கொடுத்த கவலை

அண்மைய உலகவங்கியின் அறிக்கைகள் யாவற்றிலும் யுத்த செலவீடு அதிகரிப்புப் பற்றி குறிப்பிடப்படுவது வழமையான தொன்றாகிவிட்டது.

இதே சமயம், உலவங்கி யுத்தம் உடனடியாக நிறுத்தப் படவேண்டும் எனவும் பல தடவை வலியுறுத்தி வந்துள்ளது. ஆனால் யுத்தத்தை சிறீலங்கா அரசு நிறுத்தவில்லை. இருப்பினும் வேடிக்கை என்னவெனில் உலகவங்கி தொடர்ந்தும் சிறீலங்காவிற்கு நிதியுதவி வழங்கிக் கொண்டிருந்தமையே ஆகும். இந்நிலையில் யுத்த செலவீடும், யுத்தம் குறித்த உலகவங்கியின் நிலைப்பாடும் சந்திரிகா குமாரதுங்காவிற்கோ அன்றி அவரது அரசிற்கோ புதியதும் அல்ல. பெரும் அழுத்தத்திற்குரிய தொன்றாக இருக்கும் என்பதுமில்லை.

அத்தோடு உலகவங்கியின் அறிக்கைகள் ஒவ்வொன்றும் வெளிவரும்போதும் அதிகரித்த அரச ஊழியர்கள் உண்டெனவும் மற்றும் தனியார்மயப்படுத்தலின் வேகம் போதாதெனவும் பிரஸ்தாபிக்கப்படுவது உண்டு. ஆனால் இவ்விடயமாக உலகவங்கியின் நலன் சார்ந்ததும் சிறீலங்கா அரசின் உள்நாட்டுப் பொருளாதார நிலையுடன் சம்மந்தப்பட்டவையுமாகும். எடுத்துக்காட்டாக தனியார் மயமாக்கல் என்பது பெரும் தொழிலாளர் பட்டாளத்துடன் சம்மந்தப்பட்டதாக உள்ளமை ஆட்சியாளர்களை விருப்பத்திற்கு ஏற்ப செயற்பட முடியாது செய்துவிடுகின்றது.

ஆகையினால் இவ்விடயங்களை உலகவங்கி கூறுவதும் அரசாங்கம் தன்னால் இயன்றளவில் அதனைக் கைக்கொள்ளுதலும் என்பது வழமையானதொன்று. ஆனால் இம்முறை உலகவங்கியின் அறிக்கையானது சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கத்தின் நிர்வாகத் திறமையின்மையையும் பாராளுமன்றத்தின் மேற்பார்வை பலவீனமானதாக உள்ளதெனவும் பிரஸ்தாபித்துள்ளமை ஜனாதிபதிக்கு நிச்சயம் கவலை அளிக்கும் ஒன்றாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஏனெனில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமது அரசாங்கத்தின் நிர்வாகத்திறமை, முகாமைத்துவம் என்பன பற்றி அடிக்கடி பிரஸ்தாபிப்பவர். தமது இத்திறமைகளினால் பெருமளவு வளம் விரயமாவது தடுக்கப்பட்டுள்ளதாகவும். ஐ.தே.கவின் ஆட்சிக்காலத்தில் பெருமளவு நிதியை வீண்விரையம் செய்தமையால் நாடு பெரும் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்ததாகவும் சந்திரிகா பெரும் பிரச்சாரம் செய்வதுண்டு.

ஆனால் தற்பொழுது உலகவங்கியானது சந்திரிகா அரசின் நிர்வாகத் திறமையின்மை குறித்து பிரஸ்தாபித்துள்ளமையானது சந்திரிகா குமாரதுங்காவின் பிரச்சாரத்தையே முறியடிப்பதாக உள்ளது. உலகவங்கி இவ்வாறனாதொரு முடிவிற்கு வருகின்றமைக்குப் —

இவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் நிர்வாகத் திறமையின்மையின் வெளிப்பாடே ஆகும். உலகவங்கி இவற்றை சுட்டிக்காட்ட விளைந்திருப்பதானது சந்திரிகா குமாரதுங்காவின் நிர்வாகத்தின் மீது அது அதிருப்தி கொண்டுள்ளது என்பதினாலேயே ஆகும். ஆகையினால் தனது நிர்வாகத் திறமை பற்றியும், முகாமைத்துவம் பற்றியும் நிரம்பவே பேசும் சந்திரிகாவிற்கு உலகவங்கியின் குற்றச்சாட்டுக்கள் வேதனை அளிப்பதாக இல்லாது இருக்கமுடியாது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சிங்கப்பூர், மலேசியா போல் சிறீலங்காவும் ஆசியாவின் பொருளாதாரப் புள்ளிகளில் ஒன்றாக மாறும் என அறுபது, எழுபதுகளில் உலகப்பொருளியல் நிபுணர்களினால் கணிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இன்று ஆசியாவின் பொருளாதார நோயாளிகளில் ஒன்றாகச் சிறீலங்கா அரசு விரைந்து மாறி வருகின்றது." என எக்கனோமிக்ஸ் ரைம்ஸ் என்னும் பொருளியல் சஞ்சிகை தெரிவிக்கின்றது.

சிறீலங்காவின் இந்நிலைக்கு இனப்பிரச்சனையும், தமிழர் மீது அரசு நடத்தும் யுத்தமுமே காரணம் என எக்கனோமிக்ஸ் ரைம்ஸ் கூறுவதோடு அதற்கு அப்பால் அரசியலா அன்றி சமுதாயமா அன்றி இரண்டுமா என்ற கேள்வியையும் அது எழுப்புகின்றது.

என்றனர். 1977ஆம் ஆண்டு தேர்தலின்போது ஜே.ஆர். ஜெயவர்த்தனா "தேர்தலில் வெற்றிபெறின் சிறீலங்காவைச் சிங்கப்பூர் போல் ஆக்குவேன்" என்றார். இதே போன்றே 1994ஆம் ஆண்டு தேர்தலின்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் பிரஸ்தாபித்திருந்தார்.

ஆனால் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவும் சரி, சந்திரிகா குமாரதுங்காவும் சரி கடைப்பிடித்த இனவாதக் கொள்கையானது சிறீலங்காவை சிங்கப்பூர் ஆக்கவில்லை. மாறாக எத்தியோப்பியா போன்றோ அன்றி சாயர் போன்றோ அன்றி ருவாண்டா போன்றோ உலகில் வறுமை மிக்க நாடுகளின் பட்டியலில் சேர்க்கும் அளவிற்கு மிக வேகமாக இழுத்துச் செல்லும் ஒன்றாகவே இருந்தது. இதன் வெளிப்பாடே உலகில் உள்ள 40 வறிய நாடுகளின் பட்டியலுக்குள் சிறீலங்காவை இணையச் செய்தது.

# பொருளாதார நோயாளி

ஐம்பதுகளில் காலனித்துவத்தில் இருந்து விடுபட்ட ஆசிய நாடுகளில் இலங்கை பொருளாதாரரீதியில் ஏனைய நாடுகளுக்கு உதாரணமாகத் திகழக்கூடிய வகையில் வளர்ச்சிப் போக்குக் கொண்டிருந்தது. ஒரு சமயத்தில் சிங்கப்பூரினால் இலங்கை உதாரணமாகச் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் இருந்தது.

ஆனால், எழுபதுகளில் நிலைமை மாற்றம் கண்டிருந்தது. சிங்கப்பூர் மூன்றாம் உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாக மாறியிருந்தது. இதனால், சிறீலங்கா ஆட்சியாளர்கள் சிங்கப்பூர் போன்று பொருளாதார வளர்ச்சி காணப்பட வேண்டும்

பயங்கரவாத ஒழிப்பென்று
ஒரு வேடமணிந்து பேரினவாதத்தின்
பல நாடக அரங்கேற்றத்திற்குள்
முத்தமிழ் பண்பாடுகள் பல வற்றையும்
அழகாய் சூழ்ந்து ஆபரணிக்கும்
தமிழ்ச் செல்வங்களையும்
சின்னா பின்னமாக்கி
கழுமரத்தில் ஏற்ற நினைக்கிறது
சிங்கள அரசு.
இந்தச் சிலுவையின்
நிழலில் சேயை
இழந்து குமுறும்
இந்தத் தாயின் உள்ளத்தில்
நிலவும் கேள்விக்கு
விடை என்ன?

- பாலன், பாரிஸ்

இவ்வாறானதொரு நிலைக்கு அதிகரித்த யுத்தசெலவீனமே காரணம் எனபதில் சந்தேகமில்லை. ஒரு புறம் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் யுத்தத்திற்கெனச் செலவீடு செய்யப்படுகின்றது. இவ்வாண்டில் யுத்த செலவீனம் சுமார் 7500 கோடி ரூபாவைத் தாண்டலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது வருடாந்தச் செலவீட்டில் 30 வீதத்திற்கு மேலாகும்.

இதேசமயம் இந்த யுத்தமானது பெரும் அழிவு சக்தியாக உள்ளது என்பது ஆட்சியாளர்களுக்கும் சிங்கள சமூகத்திற்கும் தெரியாததல்ல. ஆனால், ஆட்சியிலுள்ளவர்கள் தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளுவதற்கும், சமுதாயத்தில் முக்கிய இடம் வகிக்கும் அமைப்புக்களும் பாதுகாத்துக் கொள்வதற்குமாக அவை சமாதானம் உருவாவதை விரும்பவில்லை.

ஆனால் சிங்கப்பூர் பெரும் வளர்ச்சியடைவதற்கு அரசியல்வாதிகள் முக்கிய பங்காற்றியுள்ளனர். அவர்கள் அதிகாரத்தை மட்டும் கொண்டவர்களாகவோ அன்றி இனவெறியர்களாகவோ இருக்கவில்லை. சிங்கப்பூரும் பல இனங்களைக் கொண்ட நாடுதான். மலேயரும், சீனரும் அங்கு அதிகளவில் உள்ளனர். தமிழ்மக்களும் கணிசமான அளவில் உள்ளனர். ஆனால், ஆட்சியாளர்கள் இனப்பாகுபாடின்றி நடந்து கொண்டமையால் குறுகிய காலத்திற்குள் நாட்டை பெரும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றனர்.

ஆனால் சிறீலங்காவில் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவும் சரி, சந்திரிகா குமாரதுங்காவும் சரி சிங்கப்பூரில் வளர்ச்சிகண்டுள்ள ஒரு கட்சி ஆட்சி முறையில் ஆர்வம் கொண்டுள்ளனரே ஒழிய அதாவது நீண்டகாலம் எவ்வாறு ஆட்சியில் நீடிப்பது என்பதைக் குறித்து அக்கறை காட்டினரே ஒழிய அந்நாடு கண்டுள்ள வளர்ச்சிக்கான அடிப்படையை அவை கண்டு கொள்ளவில்லை.

இந்த நிலையில் 17 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து யுத்தத்தை நடத்தி வரும் சிறீலங்கா அரசு பொருளாதார நோயாளியாக மாறாது எவ்வாறு இருக்க முடியும். ஆனால், இன்றைய நிலை நீடித்தால் இன்னும் சில வருடங்களின் பின் மிக வறிய நாடுகள் எனப் பட்டியல் இடப்படும் பொழுது அதில் சிறீலங்காவிற்கு முதன்மை இடம் கிடைப்பது தவிர்க்கவியலாததாகவே இருக்கும். அத்தோடு, யுத்தம் நிறுத்தப்படாத வரையிலும் சிறீலங்கா அரசியல் வாதிகளும் சமுதாயப் பிரமுகர்களும் இனப்பிரச்சனை குறித்து நியாயப்பாடானதொரு தீர்வை வழங்குவது பற்றி முடிவெடுக்காத வரையிலும் சிறீலங்காவின் பொருளாதார நோய் தீவிரமாவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எல்லை காக்கும் இ

## நேற்றுச் சுடுவேன்

தங்கா ... 3 வயது தர்சிகாவுக்கு செல்லப் பெயர் இது தான். கொஞ்சம் மிக மிக கொஞ்சம் அமைதி. படபடவென பொரிந்து கொண்டிருக்கும் வாய். துறுதுறு என்ற கண்கள், பார்த்தவுடன் எவருக்கும் பிடித்துப்போய் விடும் உருவம். அழகான மலர்க் கொத்தாய் சிரிக்கும் தங்கா. தன் வயதிற்கு மீறிய "வாங்கோ, இருங்கோ, ரீ குடியுங்கோ" என்ற உபசரிப்பு வேறு.

சிறப்பு எல்லைப்படை வீரராக களத்திற்குச் சென்று வீரச்சாவடைந்துவிட்ட கந்தையா யோகேஸ்வரனின் வீட்டிற்கு சென்றபோது, அந்த வீட்டின் கண்ணீரை, கவலையை எப்படி எதிர்கொள்ளப்போகிறோம் என்ற மனச்சுமையுடன் போன எங்களுக்கு தங்காவின் வரவேற்பும் தர்சினியின் வார்த்தைகளும் வியப்பு, சந்தோசம், கவலை என ஒரு கலப்பு மனநிலையையே தந்தது.

தர்சினி - இருபத்தியாறு வயதே ஆன இளம் மனைவி. அமைதியே உருவான நான்கு வயது தாட்சாயணிக்கும் பேச்சே வடிவான மூன்று வயது தர்சிகாவுக்கும் தாய்.

காதல் திருமணம் மூலம் இணைந்து இதுவரை காலமும் வாழ்வின் ஒவ்வொரு கணப்பொழுதிலும் தன்னுடன் கலந்து நின்ற கணவனை இழந்து நிற்கும் அவரிடம் கவலை இருந்தாலும், கடமையைச் செய்யத்தானே வேணும் என்ற தீவிரமும் வீணாக விலை கொடுக்கவில்லை என்ற கம்பீரமுமே அதிகம்.

"அவராக விரும்பித்தான் எல்லைக்குப் போனவர். எங்களுக்கும் கடமை இருக்குத் தானே"

தர்சினியின் வார்த்தைகள் தமிழீழப் பெண்களின் இன்னொரு விம்பத்தையே கண்முன் தோற்றுவிப்பதாய்...

தந்தையை, கணவனை, மகனை போருக்கனுப்பிய தமிழ்ப் பெண் என்ற விம்பம் மறைந்து தானே போரிடும் போராளியாக மாறிய பெண்ணே தமிழீழத்தின் இன்றைய கதாநாயகி. எனினும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் புதிய புரட்சிகர திருப்புமுனையாக எழுச்சி கொண்டு நிற்கும் கிராமிய, எல்லை, சிறப்பு எல்லைப்படைகளின் உருவாக்கம் கணவனை போராட அனுப்பிவிட்டு குடும்பப் பொறுப்பை தன் தலையில் முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளும் பெண்ணையும் மீண்டும் உருவாக்கிவிட்டது.

இது காலத்தின் தவிர்க்க முடியாத தேவையாக இருப்பினும் கூட இதன் நீட்சி மகிழ்ச்சிக்குரிய ஒன்றல்ல. போராட்டத்தின் சுமை பெண்களின் மீதே வந்து அமர்ந்துவிடும் நிலை விரைவில் மாறி விடுதலையின் வெளிச்சம் எங்கும் பரவிவிடவேண்டு. களத்தில் மட்டுமல்ல பெண்கள் தளத்திலும்கூட. இந்த விடுதலைக்காக எத்தனை தூரம் போராட வேண்டியிருக்கிறது என்பதை உணர்ந்து எம் இனம் இன்னும் வேகமெடுத்தே ஆகவேண்டிய கட்டாயநிலை.

"அப்பாவை துயிலும் இல்லத்தில் தாட்டாச்சு. அப்பாவைச் சுட்ட ஆமியை நான் நேற்றுச் சுடுவன்"

நேற்றுக்கும் நாளைக்கும் வித்தியாசம் அறியாத அந்த மழலையின் கைகளுக்கு போராட்டப்பழு தேவையா என்பதை தீர்மானிக்க வேண்டியது, போராடும் வயதிலும் ஊரிலிருக்கும் இளைஞர், யுவதிகளே.

## கண்ணீர்த்துளிகள்

"ஏன் அம்மா! ஒரு ஓட்டையும் வைக்கேல்ல, அப்பா எழும்பி வர?"

துயிலும் இல்லம் சென்று தந்தையை புதைத்துவிட்டு வந்த நாள் முதலாய் மதுஷாவிற்கு இதே சந்தேகம்தான்.

ஐந்து வயது மதுஷா வீட்டின் கடைக்குட்டி, மூன்று அண்ணன்களின் ஆசைத் தங்கை. "அப்பாவை தாட்டு வைச்சிருக்கு. ஓட்டை ஒண்டும் வைக்காததால் அவரால் எழும்பிவர ஏலாமல் இருக்கு" என்பதுதான் அவளது எண்ணம்.

அப்பா இந்திரன் எல்லைப்படை வீரர் என்பதோ எல்லைக்குப் போய் எதிரியுடன் நேர்நின்று வீரச்சாவடைந்ததோ புரியாத பருவம் அவளுடையது. வன்னி மண்ணில் சிங்களப் படைகள் சந்தித்த பேரிடிகளுக்கும் யாழ் மண்ணில் அதே படைகள் அனுபவிக்கும் அவலங்களுக்கும் உலக நாடுகளிடமெல்லாம் பிச்சை கேட்கும் அவமானங்களுக்கும் காரணமாகி ஓங்கி அடிக்கும் ஓயாத அலைகள் - 03ன் பக்க பலமாகவும் பின்னணித் தளமாகவும் தாங்கிநின்று உயிர் கொடுக்கிறது மக்கள் படை. உலகின் மகத்தான புரட்சிகளும் போராட்டங்களும் மக்கள் மயப்பட்டதன் பின்தான் தோல்விகளை துரத்தியடித்து வெற்றிக்கு மாலையிட்டன என்பதே வரலாறு. அதுவே தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் தோற்றம் காட்டத்தொடங்கிய வேளை, 'இயக்கம் மட்டும்தான் சண்டை பிடிக்க வேணுமோ நாங்களும் சண்டைக்குப் போக வேணும்' என்ற ஆசையை ஏராளமாய் மனதில் புதைத்து இருந்த இந்திரனுக்கு வாய்ப்பை இலகுவாக வழங்கியது.

நான்கு பிள்ளைகளின் தந்தையாக இருந்தாலும் போராட்டத்தின்பால் இருந்த பற்றால் விடுதலை நேசத்தால் மனைவியின் சம்மதத்துடன் எல்லைப் படை வீரராக.

"பிள்ளைகளை நல்லா வளர்க்க





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# லங்கள்

— தமிழவள் —





வேணும். நிறைய படிப்பிக்க வேணும் என்று அடிக்கடி சொல்லுவார். சாவு வரும் என்று நினைச்சுக்கொண்டு போறேல்லத் தானே? ஏற்கனவே ஆறுதரம் போய் வந்தவர். அதே மாதிரி வருவார் என்று நினைச்சன். வர வேயில்லை. நாட்டுக்காக செய்யவேண்டிய கடமை எங்களுக்கும் இருக்கு. அதைத் தான் செய்தோம். வேற என்ன சொல்ல இருக்கு" எனக் கேட்ட திருமதி. ராஜேஸ் வரியின் கண்களில் நிறைந்திருந்த நீர்த் துளிகள் ஒரு போராளி சிந்தும் இரத்தத் துளிக்கு எந்தவகையிலும் தாழ்ந்ததில்லை என்பதே நிதர்சனம். தான், தனது குடும்பம், தனது தேவைகள் என்ற வட்டம் விரிந்து தேசம் மக்கள், விடுதலை என்ற வரைக்கும் வியாபித்து நிற்கும் தமிழீழப் பெண்ணை எவரால் வெல்ல இயலும்?

அடைகாக்கப்படுபவை அக்கினிக் குஞ்சுகள் என்பதறியாமல் ஆக்கிரமித்துள்ள, ஆக்கிரமிக்க நினைக்கிற எதிரிகளுக்கு எரியூட்டல்கள்தான் இனி தினம் தினமும். இது இந்த மண்ணுக்கேயுரித்தான தனிப் பண்பு.



இதுதான் ராஜேஸ்வரி சொல்லாமல் சொன்ன செய்தியும்கூட.

## மருமகன் அல்ல மகன்

"அப்பனின் பிள்ளையள் அழுவதை பார்க்கச் சகிக்கேலாமல் இருக்கு"

"எல்லைக்கு எல்லைக்கு என்று திரியிறீங்கள். இப்படித்தான் நாளைக்கு உங்கட பிள்ளைகளும் அழும்"

"அதுக்காக மனச்சாட்சியை சாக் கொண்டுபோட்டு வீட்டில் இருக்கச் சொல்லுறியா? ஏதோ சண்டைக்குப் போறவங்கள் மட்டும்தான் சாகிறமாதிரியெல்லோ உன்ர கதை"

"எனக்குத் தெரியாது. நாலு பிள்ளையளையும் வச்சுக்கொண்டு நான் என்ன செய்யிறது. எல்லைக்கும் போகவேண்டாம், சண்டைக்கும் போகவேண்டாம்"

"நேற்றுப் பிறந்ததுகள்கூட சண்டை பிடிக்குது. நான் வீட்டில் இருக்கவோ. செத்தாலும் பிரயோசனமாகச் சாகவேணும். என்னை மறிக்கவேண்டாம்"

"நீங்கள் இப்படி ஒரு இடமும் போகக் கூடாதென்றுதானே தங்கச்சி இயக்கத்திற்கு போனவள். எல்லாருக்காகவும் நான் போறன். அத்தானை ஒரு இடமும் போக விடாதை என்று சொல்லிப்போட்டு போனது நினைவில்லையோ"

"அந்தச் சின்னப்பிள்ளையின்ர தியாகத்தில் குளிர்காயச் சொல்லுறியா. அவள் தன்ரை கடமைக்கு போனாள். எனக்கு என்ர கடமை இருக்கு"

"உங்களோட கதைச்சு என்னால வெல்லேலாது"

"அப்பிடிச் சொல்லாதை. சண்டைக்கு போற எல்லாரும் சாகிறதே. ஏழு நாள்ல திரும்பி வந்திடுவன்"

அருள்மேரிக்கும் கணவன் பீற்றர் பாபுவிற்கும் இப்படித்தான் சொல்லாடல் நடக்கும். வன்னிப் பெருநிலப்பரப்பில் பெரும்பாலான வீடுகளில் நடக்கும் உரையாடல்கள் இந்த வகைதான். என்றாலும்கூட இப்போது அருள்மேரிக்கும், நான்கு குழந்தைகளுக்கும், தாய், தங்கைக்கும் மிஞ்சியிருப்பது பீற்றர்பாபுவின் வார்த்தைகள் மட்டுமே.

கணவன் இளம் வயதிலேயே இறந்து போக மூன்று பெண் குழந்தைகளை சிரமப் பட்டு வளர்த்த அம்மாவுக்கு மூத்த மகளின் திருமணம் நடந்தபின் பெரும் நிம்மதி. மருமகன் குடும்பத்தின் மூத்தமகன் போலவே அன்பைப் பொழிந்து அம்மாவின் கவலைகளுக்கு ஆறுதல் சொல்லி மனைவியின் தங்கைகளை தன் தங்கைகளாகவே பாவித்து அவர்களுக்கும் சேர்த்து உழைத்து குடும்பத்தின் தூணாகவே மாறி நின்றவர் பீற்றர்பாபு.

நான்கு குழந்தைகளின் தந்தையாக இருந்தும், குடும்பத்தின் பாரம் முழுவதும் தன்னிடமே என்றறிந்தும், வரலாற்று நிர்ப்பந்தத்தில் இருந்து விலகிச் செல்ல மனமில்லாததால் எல்லைக்குப்போக முடிவெடுத்து பல தடவைகள் போயும் வந்தவர்.

எல்லைப்படைவீரர் அப்பனின் வீரச்சாவிற்கு சென்றுவிட்டுவந்து அந்தக் குழந்தைகள் அழுவதைப் பார்க்கச் சகிக்கேலாமல் இருக்கு என்றவர், 'பிரயோசனமாகச் சாக வேணும். பேரப்பிள்ளையள், பூட்டப்பிள்ளையள்கூட தாத்தா இப்படித்தான் செத்தவர் என்று பெருமைப்படவேணும்' என்று விரும்பிய பீற்றர்பாபு தான் விரும்பியபடியே...

மகனாக நின்று தன் குடும்பத்தையே கொண்டு நடத்திய மருமகனின் இழப்பில் இருந்து மீள முடியாமல் கண்ணீரோடு தவிக்கின்ற தாய்.

ஒருவரையொருவர் மனமாற நேசித்து திருமணம் செய்த நாளில் இருந்து இந்த எட்டு வருடங்கள் தனக்கு எல்லாமுமே ஆகிநின்ற கணவரை, முரண்பாடுகளோ சண்டை சச்சரவுகளோ ஏதுமின்றி கழிந்த தனது கடந்த கால இனிமை வாழ்வை இழந்து குடும்பச் சுமையை தன்தோளில் தாங்கத் தயாராகிவிட்ட அருள்மேரி.


அப்பா எங்கே எனக்கேட்டால் படத்தைக் காட்டும் மழலைகள்.

வசந்தம் துளிர்க்கும் என்ற நம்பிக்கைக் காய் நாம் கொடுத்துக் கொண்டிருக்கும் இந்த விலைகள் வீன்போகாது என்பதாகவே அலையடிக்கும் தருணம் இது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






யாழ் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் இருப்பானது 'இரும்பு வலயம்' என வர்ணிக்கப்படும் ஆனையிறவுப் பெருந்தளத்தின் இருப்பிலேயே தங்கியிருந்தது. ஆனையிறவுத் தளமானது புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டபின் யாழ் ஆக்கிரமிப்பு இராணுவம் ஆட்டம் காணத் தொடங்கியது. உலக நாடுகள் பலவும், பல இராணுவ ஆய்வாளர்களும் இனி யாழ்ப்பாணம் புலிகளின் கையில் விழுவதற்கான சாத்தியக்கூறே மிகப் பெருமளவில் உண்டு என்பதைக் கூறிக் கொண்டிருக்க, ஓயாத அலைகள் மூன்றின் கட்டம் - 05 ஆக புலிகள் யாழ்நகர் நோக்கி அலைப் பயணத்தைத் தொடங்கினர்.

எதிரியின் பிரதான விநியோக வீதிகளை உடறுத்துத் துண்டாடிக்கொண்டு குறிப்பிட்ட தளங்களைத் தாக்கி அழித்து அப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதென்பதுதான் ஓயாத அலைகள் மூன்று கட்டம் 05இன் இலக்காக தேசியத் தலைவர் அவர்களால் திட்டமிடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் இலக்கை அடைவதற்கு நான்கு கட்ட நகர்வுகளை புலிகள் வெற்றிகரமாக மேற்கொண்டனர்.

## முதலாம்கட்ட நகர்வு

வலிகாமத்திற்கும் தென்மராட்சிக்குமான பிரதான விநியோகப் பாதையாக இருந்த யாழ் - கண்டி வீதியை அரியாலைக்கும் நாவற்குழிக்கும் இடைப்பட்ட பகுதியில் புலிகள் அணிகள் ஊடறுத்து நிலைகொள்வதன் மூலம் வீதியை துண்டாடுவதே இந் நகர்வின் இலக்காக இருந்தது. அதன் அடிப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




படையில் நீரேரி கடந்து கிழக்கரியாலையில் இருந்த எமது நிலைகளைச் சென்றடைந்த மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா தலைமையிலான யமுனாவின் அணியும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் 10ஆம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் எதிரியின் முன்னரங்க நிலைகளை நோக்கி முன்னேறின.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி முதலில் முன்னேற எதிரியின் இடதுபக்க முன்னரங்க பாதுகாப்பு நிலைகளை மாலதிபடையணியின் ஒரு அணியும், வலது பக்க முன்னரங்க பாதுகாப்பு நிலைகளை மாலதிபடையணியின் இன்னொரு அணியும் தாக்கியழித்தபடி முன்னேற மாலதிபடையணியின் மற்றொரு அணி கண்டிவீதியை நோக்கி முன்னேறியது. செம்மணிப் பிரதேசத்தை அண்டிய பிரதான வீதியில் ஏறிவிட்டிருந்த இவ் அணியின் பணியாக தென்மராட்சியில் இருந்து யாழ் நகருக்கான இராணுவத்தின் நகர்வையும் நல்லூர்-செம்மணி வீதியால் மேற்கொள்ளப்படும் இராணுவத்தின் நகர்வையும் தடுத்து நிறுத்துவதாக இருந்தது. அதற்கமைய விடிவதற்குள் வேக வேகமாக நிலைகளை அமைத்து எதிரியின் முன்னேற்றத்தை முறியடிக்க நிலையெடுத்து எதிர்பார்த்திருந்தனர் பெண்புலிகள். அடுத்த நாள் நாவற்குழி முகாமில் இருந்து எதிரிப்படை ஆட்லறிகள், மோட்டார்களின் சூட்டாதரவுடன் கனரக வாகனங்கள் சகிதம் எமதணிகள் நின்ற பகுதியை நோக்கி முன்னேறியது. முன்னேறிய படையினரைத் தடுத்து நிறுத்த கடும் சமர் புரியவேண்டியிருந்தது அங்கு நின்று கொண்டிருந்த மாலதி படையணிக்கு.

இச்சமரை எப்படிப்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் முகம்கொடுக்க வேண்டியிருந்தது என்பது பற்றி ஒரு பெண் போராளி கூறினாள். "நாங்கள் நிலை அமைத்து நின்ற பகுதியோ பெரும் உப்புவெளிப் பிரதேசம். வெட்டிய எமது அகழிகளுக்குள் அரைவாசிக்கு உப்புத் தண்ணி நின்றது. அதற்குள் நின்றுதான் சண்டை பிடிக்க வேண்டியிருந்தது. உடம்பெல்லாம் உப்புத் தண்ணி பட்ட அரிப்பு ஒரு புறம், சுட்டெரிக்கும் வெய்யில் ஒரு புறம் அதைவிட வெட்டை கடந்த மரக்கூடல்களில் இருந்து எதிரியின் 'சினைப்பர்' தாக்குதல் மறுபுறம், தலைநிமிர்த்த முடியாத ஷெல் அடி, ஷெல் அடியில் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த பற்றைகளில் இருந்து வந்த அனல்க்காற்று இன்னொரு புறம். எல்லா வெக்கையும் சேர்ந்து தாகம் ஒரு புறம். தண்ணி அற்ற நிலை. நாக்கெல்லாம் வறண்டு போயிருந்தது. இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு வெட்டையில் நின்று நாம் எதிரியுடன் கடுமையாகச் சண்டை பிடிக்க வேண்டியிருந்தது." அவள் கூறியபோது அந்தக் கடுமையான களச்சூழலே அவர்களை எதிர்த்துப் போரிட்டதுபோல் இருந்தது. கடினமான அச் சூழலிலும் நாவற்குழியாலும் செம்மணி வீதியாலும் பல தடவை முன்னேற முயன்ற எதிரிகளை அவர்கள் முறியடித்தார்கள்.

முன்னரங்க காவலரண்களை தாக்கும் பணியில் எதிரியின் வலதுபக்க முன்னரங்க நிலைகளைத் தாக்கி அழித்தபடி முன்னேறிய மாலதி படையணி தென்னந்தோப்பில் இருந்த மினி முகாமில் எதிரியின் கடுமையான எதிர்ப்பைச் சந்தித்தது. இங்கு இவ்வணி எதிரிப்படையுடன் உக்கிர சமர் புரியநேரிட்டது. முடிவில் துருப்புக்களின் இழப்புக்களுடன் அம்முகாம் எமதணிகளின் கையில் வீழ்ந்தது.

அரியாலைச் சந்திக்கண்மையில் தென்னந்தோப்புக்குள் மண் அணைகளின் பாதுகாப்புடன் பலம் பொருந்தியதாய் இருந்த அரியாலை இராணுவத் தளத்தை தாக்கியழிப்பதற்காக பரந்த வெளிப்பகுதியால் எதிரியின் கடும் எதிர்ப்புக்கு முகம் கொடுத்தபடி உக்கிரச் சமர் புரிந்தது சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி. அவர்களுக்கு உதவி அணியாக மாலதி படையணியின் ஒரு அணியும் சென்றிருந்தது. நீண்ட கடும் சண்டையின் பின்னர் எதிரிக்கு முற்றுமுழுதாகச் சாதகமான சூழலுக்குள் இருந்த அத்தளமும் புலிகள் அணிகளின் மூர்க்கத்தனமான தாக்குதலால் 11ஆம் திகதி நண்

# ...ாத பொறிக்குள் ...போகும் இராணுவம்

— பாரதி, தமிழீழம் —



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பகல் 12.45 மணியளவில் கைப்பற்றப்பட்டது. அதே நேரம் இடதுபக்க முன்னரங்க நிலைகளை தாக்கியழித்தபடி முன்னேறிய மாலதி படையணி கிழக்கு அரியாலை வீதியில் பலத்துடன் நின்ற எதிரிப் படையின் தாக்குதலுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. இதில் எதிரியின் கடுமையான எதிர்ப்பைச் சந்தித்த இவ் அணி எதிரிக்கு இழப்பை எற்படுத்தி வீதியைக் கைப்பற்றியபடி மணியந்தோட்ட இராணுவத் தளத்தை நோக்கி தொடர்ந்து முன்னேறியது. அங்கும் எதிரியுடன் கடும் சமர் புரியவேண்டியிருந்தது. அங்கு நடந்த பெரும் மோதலின் பின் பகல் 1.45 மணியளவில் மணியந்தோட்ட இராணுவத் தளமும் எமதணிகளின் கையில் வீழ்ந்தது.

பின்னர் அங்கிருந்து இவ்வணிகள் கொழும்புத்துறை இறங்குதுறை நோக்கி முன்னேறின. கொழும்புத்துறைப் பிரதேசம் கட்டடங்கள் நிறைந்த பகுதி. அங்கு முன்னேறிய எமதணிகள் முன்னேறும் ஒவ்வொரு சதுர அடிக்கும் கடுமையாகப் போரிடவேண்டியிருந்தது. ஏனெனில் ஒவ்வொரு கட்டிடத்தின் மதிலுக்கும் ஒரு பக்கத்தில் எமதணிகள் நின்றால் மறுபக்கத்தில் எதிரி அணிகள் நின்றன. எமதணிகள் கட்டிடச் சண்டைக்கு புதியவையாக இருந்தபோதிலும் செயல்வேகம் மிக்கவர்களாக போராளிகள் மன ஓர்மத்துடன், முன்னேறும் வழியில் எதிர்த்து நின்ற எதிரிகளையெல்லாம் முறியடித்தபடி கொழும்புத்துறை இராணுவத் தளம் மீது உக்கிரச்சமர் புரிந்தனர்.



தொடர்ச்சியாக எதிரியின் நிலைகளையும், தளங்களையும் தாக்கியழித்தபடி முன்னேறியதால் உணவு உண்ணவோ, ஓய்வெடுக்கவோ நேரம் அற்று இருந்த இவர்கள் தங்கள் உடற்களைப்பையும் பொருட்படுத்தாது போரிட்டதில் கொழும்புத்துறை இராணுவத் தளமும் அன்றைய நாளின் மாலைப் பொழுதிலேயே எமதணிகளின் கையில் வீழ்ந்தது. கொழும்புத்துறை இறங்குதுறையும் இவ் அணிகளால் மீட்டெடுக்கப்பட்டது. அதன் பின் இவ் அணிகளுடன் அரியாலைப் பகுதியில் நின்ற சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி இணைப்பை ஏற்படுத்தி ஒரு பாதுகாப்புத் தடுப்புவேலியாக நிலைகளை அமைத்து மீட்டெடுக்கப்பட்ட பகுதிகளை பாதுகாத்து நின்றதுடன் முதற் கட்ட நகர்வின் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டது.

## இரண்டாம்கட்ட நகர்வு

யாழ்-கண்டி வீதியை ஊடறுத்து நிற்கும் புலிகள் அடுத்த கட்டமாக தங்கள் பகுதியை நோக்கி முன்னேறுவார்கள் என்பதை புரிந்து வைத்திருந்த தனங்கிளப்பு, கோயிலாக்கண்டி இராணுவத் தளங்களில் இருந்த எதிரிப் படையினர் வேகமாக மேலும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து தம் தளங்களை பலப்படுத்தினர். ஏனெனில் இத் தளங்களின் இருப்பில்தான் சாவகச்சேரி நகரின் இருப்பானது தங்கியிருந்தது.

நன்கு அரண் செய்யப்பட்டும், பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டதுமான இவ்விரு இராணுவத் தளங்கள் மீதான தாக்குதலை 11ஆம் திகதி காலை தலைநகர் படையணியும், கடற்புலிகளின் தாக்குதல் படகுத் தொகுதிகளும் மேற்கொண்டன. கடற்கரையை அண்டிய இராணுவத் தளமாக கோயிலாக்கண்டி இராணுவத்தளம் இருந்தமையால் இத்தளம் மீது கடற்புலி தாக்குதல் படகுத் தொகுதிகள் இத்தள முன்னரங்க பாதுகாப்பு நிலைகளை வேகமாகத் தாக்கி பிய்த்தெறிந்ததுடன் தரையணியின் நகர்வுக்கான செறிவான சூட்டையும் வழங்கின. கடற்கரை வீதியால் முன்னேறிய தலைநகர் படையணி தளத்தின் முன்னரங்க நிலைகளை உடைத்தழித்தவாறு உட்புகுந்து உக்கிரச்சமர் புரிந்து எதிரித் தளத்தை மாலை 5.30 மணியளவில் கைப்பற்றியது. அதே நேரத்தில் தனங்கிளப்பு இராணுவத் தள முன்னரங்க நிலைகளை உடைத்தெறிந்தவாறு உட்புகுந்து கடும் சமர் புரிந்து கொண்டிருந்த இம்ரான் பாண்டியன் படையணியின் கையில் மாலை 6.30 மணியளவில் தனங்கிளப்பு இராணுவத் தளமும் வீழ்ந்தது. இரு இராணுவத் தளங்களின் வீழ்ச்சியின் பின், பின்வாங்கிய இராணுவத்தினர் புலிகளின் அடுத்த கட்ட நகர்வைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் தனங்கிளப்பு - சாவகச்சேரி வீதியின் இடையில் இருந்த இராணுவ மினி முகாமையும் புகையிரதப் பாதையையும் நாவற்குழிவரை இணைத்து பெரும் தடுப்பு வேலியைப் போட்டனர்.

அடுத்த கட்ட முன்னேற்றத்திற்காக புதிய அணிகள் வரவழைக்கப்பட்டன. மாலதி படையணியின் துணைத் தளபதி லெப். கேணல் நிஸ்மியா தலைமையிலான அணியும் சோதியா படையணியின் துணைத் தளபதி மேஜர் செல்வி தலைமையிலான அணியுமே அப்புதிய அணிகள் ஆகும். நாவற்குழி - கைதடி வீதிக்கு ஏறி முதலாம் கட்ட நகர்வு அணிகளுடன் இணைப்பை ஏற்படுத்துவதற்காக தலைநகர் படையணியும், மாலதி படையணியும் கடற்கரை வீதியால் எதிரியால் புதிதாக உருவாக்கப்பட்டிருந்த முன்னரங்க நிலைகளை தாக்கியழித்தவாறு நாவற்குழி-கைதடி வீதியை நோக்கி முன்னேற தச்சன்தோப்பு கிராமத்தை கைப்பற்றுவதற்காக சோதியா படையணி தச்சன்தோப்புக்கான பாதையால் மாலை 4.00 மணியளவில் முன்னேறியது.

தச்சன்தோப்புக் கிராமத்தை பாதுகாத்து புகையிரதப்பாதையில் அமைத்திருந்த எதிரியின் முன்னரங்க நிலைகளின் வலதுபக்க நிலைகளை சோதியா படையணியின் ஒரு அணி உடைத்தழித்து கைப்பற்றியவாறு முன்னேற இன்னொரு அணி அதன் இடது பக்க நிலைகளை உடைத்தழித்து கைப்பற்றியவாறு முன்னேற மற்றைய அணி தச்சன்தோப்புக் கிராமத்தை நோக்கி முன்னேறியது. பெரும் வெட்டவெளிப்பகுதியால் எதிரியின் கடும் எதிர்ப்புக்களையெல்லாம் முறியடித்து எதிரியின் வலம், இடம் என 1500 மீற்றர் நீளம் உள்ள முன்னரங்க நிலைகளை கைப்பற்றி அன்றைய இரவுப் பொழுதுக்குள்ளாகவே தச்சன்தோப்பு கிராமத்தையும் வெற்றிகரமாக மீட்டெடுத்தார்கள் அப்போராளிகள்.

இப்பொழுது முதலாம் கட்ட நகர்வு அணிகளான மாலதி படையணியாலும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியாலும் நாவற்குழிப்பாலம் வெற்றி கொள்ளப்பட்டிருந்தது. இவ் அணிகள் அங்கிருந்து 15ஆம் திகதி காலை நாவற்குழிப்பாலத்திற்கும் நாவற்குழிச்சந்திக்கும் இடையில் அமைந்திருந்த அன்றூஸ் கொம்பனி இராணுவத் தளத்தையும், நாவற்குழிச்சந்தி இராணுவத்தளத்தையும் தாக்கியழிப்பதற்காக முன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னேறின. இவ்விரு தளங்களைப் பொறுத்த வரையில் வலிகாமத்திற்கும் தென்மராட்சிக்குமான பிரதான விநியோகப் பாதையாக யாழ்-கண்டிவீதி இருந்தமையால் இவ் வீதியின் பாதுகாப்பிற்காக எதிரிக்கு சாதகமான சூழலைக்கொண்ட இடத்திலேயே இத்தளங்களை நிறுவியிருந்தது இராணுவம்.

ஓயாத அலைகள் - 03 இன் கட்டம் 03 மூலம் கிழக்கரியாலையில் நிலைகொண்டிருந்த எமதணிகள் பிரதான வீதிக்கு ஏறும் அபாயம் ஏற்கனவே இருந்த போதிலும் இவ்விரு இராணுவத் தளங்களில் இருந்த எதிரிப்படையினர் புலிகளை முறியடித்துவிடலாம் என்பதையே நம்பினர். ஏனெனில் அதி உயர்பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் பாரிய பலத்துடனுமே இவ்விரு இராணுவத் தளங்களும் இருந்தன. அப்படிப்பட்ட இத்தளங்கள் மீதே மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டன எமதணிகள்.

அவ்விரு தளங்களையும் தக்கவைக்க வென எதிரியணிகளும், அத்தளங்களைக் கைப்பற்றவென புலிகள் அணிகளும் இரு நாட்களாக இடைவிடாது உக்கிர மோதலில் ஈடுபட்டன. இறுதியில் 17ஆம் திகதி கிட்டு பீரங்கிப் படையினர் செறிவான சூட்டை வழங்க எமதணிகள் மேற்கொண்ட ஆவேசமான உக்கிர தாக்குதலில் அன்றூஸ் கொம்பனி இராணுவத் தளமும் நாவற்குழிச்சந்தி இராணுவத் தளமும் காலை 10.00 மணியளவில் எமதணிகளின் கையில் வீழ்ந்தன.

அதேநேரம் நாவற்குழி-கைதடி வீதிக்கு ஏறிய தாக்குதலணிகள் இவ்வணிகளுடன் இணைப்பை ஏற்படுத்தின. இணைந்து கொண்ட அன்றே இவ்வணிகள் எல்லாம் கைதடி நோக்கிய முன்னேற்றத்தை மேற்கொண்டன. வலிகாமத்திற்கும் தென்மராட்சிக்குமான இரண்டாவது விநியோகப் பாதையாக கைதடி-கோப்பாய் வீதி இருந்தது. இவ் வீதியைப் பாதுகாக்க கைதடி இராணுவத் தளத்தை எதிரி அமைத்திருந்தான். அன்றூஸ் கொம்பனி, நாவற்குழிச்சந்தி இராணுவத் தளங்கள் புலிகளால் மீட்கப்பட்டவுடன் கைதடி-கோப்பாய் விநியோக வீதியின் இருப்பும் கேள்விக்குறியாக மாறிவரும் அபாயத்தை உணர்ந்து கொண்ட எதிரிப் படை அவசரம் அவசரமாக மேலதிக துருப்புக்களையும் வரவழைத்து கைதடி இராணுவத் தளத்தை உச்ச பாதுகாப்பில் வைத்திருக்க முயன்றது. ஆனால் புலிகள் அணிகள் அதற்கான சண்டையையும் தொடங்கின.

எதிரியின் ஷெல் மழைக்குள்ளும், வான் தாக்குதல்களுக்கும் மத்தியில் கைதடிச்சந்தியை நோக்கி முன்னேறிய தாக்குதல் அணிகளில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும், யமுனாவின் தலைமையில் மாலதிபடையணியும் கைதடி-கோப்பாய் வீதியை அடைந்து கோப்பாய் பாலத்தைக் கைப்பற்றி எதிரியின் விநியோகப் பாதையைத் துண்டாடவேண்டும். தலைநகர்ப் படையணியும், நிஸ்மியாவின் தலைமையிலான மாலதி படையணியும் 17ஆம் திகதி மேற்கொண்ட உக்கிர தாக்குதலில் பலத்த இழப்புக்களை எதிரிப்படைக்கு ஏற்படுத்தி கைதடி இராணுவத் தளத்தை அன்றைய நாளே மாலை 4.00 மணியளவில் மீட்டெடுத்தன. அதே நேரம் கைதடி-கோப்பாய் வீதியில் ஏறிய எமதணிகள் எதிரியின் தாக்தகுதல்களையெல்லாம் முறியடித்தபடி முன்னேறி கோப்பாய்ப் பாலத்தை கைப்பற்றியவுடன் வலிகாமத்தில் இருந்து தென்மராட்சிக்கு உதவிக்கு வரும் எதிரிப் படைகளை தடுத்து நிறுத்துவதற்காக தடுப்பு நிலைகளை உடனடியாக அமைத்து பாதுகாத்து நின்றன. கைதடி இராணுவத் தளத்தை மீட்டெடுத்த தாக்குதலணிகள் கைதடி வடக்கு பிரதேசத்தையும் அன்றைய நாளே மீட்டெடுத்தன. இவ்வாறு தென்மராட்சியில் நிலை கொண்டிருந்த எதிரிக்கான இரண்டாவது விநியோகப் பாதையையும் துண்டாடியதன் மூலம் இந்நடவடிக்கையின் இரண்டாம் கட்ட நகர்வும் அதன் இலக்கை வெற்றிகரமாக அடைந்தது.

இருந்தது.

இம்ரான் பாண்டியன் படையணியின் அணியொன்று உடறுத்து உள்நுழைந்து மட்டுவில்-புத்தூர் வீதியில் இருந்த வண்ணாத்திப் பாலத்தை நோக்கி முன்னேறி எதிரியுடனான பதுங்கித் தாக்குதலை மேற்கொண்டு, வண்ணாத்திப்பாலத்தைக் கைப்பற்றி, புத்தூரிலிருந்து மட்டுவில்ப் பகுதிக்கான எதிரியின் விநியோகத்தை தடுத்து நிறுத்துவதற்காக தடுப்பு நிலைகளை அமைத்து நிலை கொண்டது. அதே நேரம் ஜெயந்தன் படையணியும், சாந்தா தலைமையிலான அன்பரசி படையணியும் 19ஆம் திகதி இரவு கைதடி வடக்கிலிருந்து மட்டுவில் தெற்குப் பகுதியைநோக்கி முன்னேறின. முன்னேறிய இவ்வணிகள் அப்பகுதியிலிருந்த எதிரியின் பாதுகாப்பு முன்னரங்க நிலைகளை வலம், இடமென உக்கிர தாக்குதலை மேற்கொண்டு துடைத்தழித்தன. தொடர்ந்து முன்னேறிய இவ்வணிகள் நுணாவில்-கனகம்புளியடி வீதியை அடைந்தன. பின்னர் அங்கிருந்து இத்தாக்குதலணிகள் இரு தொகுதிகளாகப் பிரிந்து ஒரு தொகுதி நுணாவில்சந்தியை நோக்கி முன்னேற மற்றைய தொகுதி கனகம்புளியடி நோக்கி முன்னேறியது. எதிரியின் எதிர்ப்புக்களையெல்லாம் முறியடித்து முன்னேறி நுணாவில்சந்தியைக் கைப்பற்றினர் அவ்வணிகள். அதிலிருந்து ஜெயந்தன் படையணியின் அணியொன்று கைதடி-நுணாவில் வீதியால் எதிரியைத் தாக்கியவாறு முன்னேறி கைதடி இராணுவத்தளத்தை வீழ்த்தி கைதடிப் பாலத்தையும் கைப்பற்றி நின்ற தாக்குதலணிகளுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டது.




## மூன்றாம்கட்ட நகர்வு

வலிகாமத்திற்கும் தென்மராட்சிக்குமான இரு விநியோகப்பாதைகள் புலிகளினால் துண்டிக்கப்பட்ட நிலையில் எதிரிக்கு எஞ்சியிருந்த ஒரேஒரு வலிகாமத்திற்கான பாதை மட்டுவில்-புத்தூர் வீதிதான். இப்பாதையும் புலிகளால் துண்டிக்கப்படுமாயின் பலாலியில் இருந்து தென்மராட்சிக்கான விநியோகத்தை வடமராட்சிக்கான விநியோகத்தை வடமராட்சிக் கூடாகவே மேற்கொள்ள வேண்டியிருக்கும். இது நீண்ட தூரத்தைக் கடக்க வேண்டியிருப்பதும் நேர தாமதத்தையும் ஏற்படுத்துவது மட்டுமல்ல ஆபத்தானதும்கூட. எனவே நிலமை மேலும் இறுகி வருவதைப் புரிந்து கொண்ட எதிரிப்படை இப்பாதையைப் பாதுகாக்கும் பாரிய ஏற்பாடுகளை மேற்கொண்டு பலத்துடன்

இச் சண்டையில் ஈடுபட்ட அன்பரசி படையணி பெண் போராளிகள் பற்றி அணித்தலைவி மதுமிதா கூறினார், "எங்களைப் பொறுத்தவரையில் இப்பிரதேசமென்பது முழுக்க முழுக்க புதிது. நாங்கள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்டிடச் சண்டைக்கும் புதிதானவர்கள். எமக்குத் தரப்பட்ட பணியை வெற்றிகரமாகச் செய்து முடிக்க வேண்டும் என்றதற்காக அணியொன்றின் தலைவியான கியூரி என்ற போராளி தனக்குத் தரப்பட்ட சண்டைக் களப் பகுதியைப்பற்றி பூரணமாகத் தெரிந்து கொண்டு களமிறங்குவதால் இழப்பைக் குறைத்து வெற்றிகரமாகத் தரப்பட்ட பிர தேசத்தை மீட்கலாம் என்ற நோக்குடன் சண் டைக்கு முன் பகலே வேவு எடுக்க தன்னை உருமாற்றியபடி எதிரி இருந்த பகுதிக்குள் சென்று தரவு எடுத்து வந்தாள். அத்தரவின் அடிப்படையிலேயே அவள் தனக்குரிய அணி யைக் கொண்டு சிக்கலின்றி முன்னேறி இரா ணுவத்தை தாக்கியழித்தாள். அவளுடைய அணி அவர்களுக்கு கொடுக்கப்பட்டபணியை வெற்றிகரமாக முடித்திருந்தது. ஆனல் அவ் வெற்றிக்கு காரணமாயிருந்த கியூரியை நாம் இச்சண்டையிலேயே இழந்தோம்"



"மரியாள் என்ற எல்.எம்.ஜி போராளிக்கு இச்சண்டையில் இராணுவத்தின் பி.கே அடியில் வயிற்றிலேயும், காலிலேயும் காயம். அவளை எமது பின்கள மருத்துவ நிலைக்கு போகும் படி கூறினோம். ஆனால் உறுதியாக போக மறுத்துவிட்ட அவள் தனது காயத்தின் வலியை யும் பொருட்படுத்தாது சண்டையிட்டாள். இராணுவத்துடனான அந்தக் கட்டிடச் சண் டையில் வேகமாக மதில்கள் கடந்து ஓடிச் சண்டையிட வேண்டியிருந்தது. அந்த நேரங் களில்கூட அப்போராளி காயங்களுடனேயே எல்.எம்.ஜியையும் கொண்டு உயர் மதில் களையும் கடந்து ஓடிச் சண்டையிட்டாள்" என்று அந்தச்சண்டையில் வெற்றிக்குப் பின் னால் இருந்த போராளிகளின் கடினங்களை யும், அவர்களின் மாண்பையும் பற்றிக் குறிப் பிட்டார்.

தலைநகர் படையணியும், மாலதி படை யணியும் தச்சன் தோப்பிலிருந்து கைதடிப் பாலத்திற்கு ஏறிவிட்டிருந்த சோதியா படை யணியும் புதிதாக வரவழைக்கப்பட்டிருந்த 4.1 படையணியும் கைதடிப் பாலத்தில் இருந்து சாவகச்சேரி இராணுவத்தளம் நோக்கி முன் னேறின. மூன்று முக்கிய நகர்களைக் கொண் டதுதான் தென்மராட்சிப் பிரதேசம். பளை நகர், கொடிகாமம் நகர், சாவகச்சேரி நகர். ஓயாத அலைகள் - 03 கட்டம் 04இன் மூலம் பளைநகர் புலிகளால் மீட்கப்பட்டிருந்தது. எஞ்சியிருந்தது இவ்விரு நகர்களும்தான். சாவகச்சேரி நகரின் வீழ்ச்சி கொடிகாமம் நகரின் இருப்பையும் கேள்விக்குள்ளாக்கு மாகையால் பெரும் பாதுகாப்பு ஏற்பாடுகளு டனும் பலம் பொருந்தியதாகவும் இருந்த சாவகச்சேரி இராணுவத்தளம் மீது உச்சக் கட்ட தாக்குதலை மேற்கொண்ட எமதணி களின் கையில் இத்தளம் 20ஆம் திகதி மாலை வீழ்ந்தது. பின்னர் மீட்டெடுத்த சாவகச்சேரி நகரை பாதுகாக்கும் நடவடிக்கை களில் ஈடுபட்டன இத்தாக்குதலணிகள். நான்கு வருட ஆக்கிரமிப்பின் பின் அந்த நகர் எங் களால் மீட்கப்பட்டபோது மனதில் எழுந்த பூரிப்பு மட்டற்றது. எத்தனை காலம் இதற்காக காத்திருந்தோம் இனி ஒவ்வொன்றாக வெல் லப்படும் பகைத்தளங்களின் பின் எம் நிலம் மீட்கப்படும்.

மீட்டபகுதியில் தற்காப்புத்தயார் நிலை யில் அணிகள்.

முன்னேறிய தாக்குதல் அணிகள் தமக் குள் இணைப்பை ஏற்படுத்தி கைப்பற்றிய பகுதிகளைத் தக்க வைக்கவும் எதிரியின் முன் னேற்றங்களை முறியடிக்கவுமாக பாதுகாப்பு நிலைகளை அமைத்து தடுப்பு வேலியை போடு வதே இந்நகர்வின் இலக்காக இருந்தது.

அதற்கேற்றவாறு தலைநகர் படையணியும், சோதியாபடையணியும் சாவகச்சேரி தபாற் கந்தோர் வீதியால் இறங்கி பெருங்குளச்சந் தியை பாதுகாத்து நின்ற எதிரியின் நிலை களை தாக்கியழித்தவாறு முன்னேறி பெருங் குளச்சந்தியை அடைய ஜெயந்தன் படை யணியும், அன்பரசி படையணியும் நுணாவில்- கனகம்புளியடி வீதியில் இருந்து இறங்கி பெருங்குளச்சந்தியை நோக்கி எதிரியின் முன் னரங்க நிலைகளை உடைத்தழித்தவாறு முன் னேறி பெருங்குளச்சந்தியை அடைய இவ்விரு தாக்குதல் அணிகளும் இணைப்பை ஏற் படுத்திக்கொண்டன. இவ்வாறே கொழும்புத் துறை தொடக்கம் கனகம்புளியடி, சாவகச்சேரி, கச்சாய் கடற்கரை வரை எமது அணிகள் இணைந்து தற்காப்பு நிலைகளை அமைத்துக் கொண்டன.

**எதிரியின் முன்னேற்றமும் புலிகளின் முறியடிப்பும்.**

எதிரியின் முதல் முன்னேற்ற முயற்சி கொழும்புத்துறையை புலிகளிடம் இருந்து மீளக் கைப்பற்றுவதாகவே இருந்தது. 30ஆம் திகதி எமது அணிகளின் பாதுகாப்பு முன்ன ரங்க நிலைகள் மீது எதிரி மோட்டார்கள், ஆட்லறிகள், பலகுழல் றொக்கட் செலுத்திகள் போன்றவற்றால் செறிவான சூட்டை வழங்கித் தாக்கியபடி புகையிரதப்பாதையின் வலம், இடம் என எமது நிலைகளை உடைத்துக் கொண்டு முன்னேறி உள் நுழைந்துவிட்டான். பாதையின் வலதுபக்க முன்னரங்க நிலை களில் நின்ற அன்பரசி படையணி எதிரியுட னான தற்காப்புச் சண்டையை மேற்கொண்டது. ஆயினும் இடப்புறம் உள்நுழைந்த எதிரியால் பக்கவாட்டாலும், முன்புறம் இருந்தும் கிடைக் கும் எதிர்ப்பை முறியடிக்கவேண்டிய ஆபத் தானதும், நெருக்கடியானதுமான சூழல் இவர் களுக்கு. ஏனெனில் பக்கவாட்டாக முன்னே றிய எதிரிகளால் பின்வளைக்கப்படக்கூடிய ஆபத்தான நிலையும், இவர்களுக்கான எமது உதவி அணிகள் வரும்வரை விநியோகம் அற்ற நிலையில் போராடவேண்டிய நெருக் கடியான சூழலும் இவர்களுக்கு இருந்தது. இத்தகைய நெருக்கடிக்குள் நின்று அவர்கள் தம் நிலைகளை தக்கவைத்தனர். எமது கிட்டு பீரங்கிப் படையினர் செறிவான சூட்டை முன்னேறிவந்த எதிரி நின்ற பகுதிக்குள் வழங்க திணறும் எதிரி மீது எமது உதவி அணிகள் வேகமாக முன்னேறித்தாக்கின. எதிரியால் தாக்குப்பிடிப்பது முடியாததால் நடந்த சண்டையில் எதிரிக்கு பலத்த இழப் புக்கள் ஏற்படுத்தி எதிரியின் முன்னேற்றத்தை வெற்றிகரமாக முறியடித்தனர் புலிகள்.

அதே நேரத்தில் கனகம்புளியடி-நுணா வில் வீதியை மீளக்கைப்பற்றுவதற்காக எதி ரிப் படையினரால் மேள்கொள்ளப்பட்ட முன் னேற்ற முயற்சியானது அப்பகுதியை பாது காத்து நிலையமைத்து நின்ற இம்ரான் பாண்டியன் படையணியாலும், சோதியா படை யணியாலும் எதிரியுடனான கடுமையான தற் காப்புச் சமர் புரியப்பட்டு வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது. இச்சமரில் பெரும் இழப் புக்களைச் சந்தித்த எதிரிப் படையினரின் உடல்களையும், ஆயுதங்களையும்கூட கைப் பற்றின எமதணிகள். அன்றைய தனது முயற்சி அனைத்தையும் எதிரி நிறுத்தினான். ஆனால் அதுவே முடிவாக இருக்கவில்லை. மீண்டும் தன்னைப் பலப்படுத்திக்கொண்டு வான்படை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறீலங்கா அரசினால் தமிழரழிப்புக்கெனத் தருவிக்கப்பட்ட பல்குழல் பீரங்கி

**இதன் மூலம் சிறீலங்கா அரசு இரு நாடுகளுக்கிடையேயான யுத்தம் என்பதை நிரூபித்துள்ளது**

வழமையாக இரு நாடுகளுடனான யுத்தங்கள் நடைபெறுகின்ற வேளைகளிலேயே பல்குழல் பீரங்கிகள் பாவிக்கப்படுகின்றன. அண்மைக் காலங்களில் கார்கில் யுத்தத்தின் போதும், எத்தியோப்பியா எரித்திரிய யுத்தத்தின் போதும் இவ்வகைப் பல்குழல் பீரங்கிகள் பாவிக்கப்பட்டன. ஆனால் சிறீலங்காவிலோ தனது இறைமையின் கீழ் உள்ள பிரதேசம் எனக்கூறிக்கொள்ளும் பிரதேசத்தை பாதுகாப்பதற்காக அரசு பல்குழல் பீரங்கிகளை கொள்வனவு செய்துள்ளது. சின்னஞ்சிறிய தீவிற்கு ஏன் இந்தப் பல்குழல் பீரங்கி என்று பல இராணுவ ஆய்வாளர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். சிறீலங்கா அரசோ நடைபெறப் போகும் பாராளுமன்றத் தேர்தலுக்காக தனக்கு ஏற்பட்ட இரணுவத் தொடர் தோல்விகளில் மீட்கப் போகும் துருப்புச் சீட்டாக பல்குழல் பீரங்கியை நம்பியுள்ளது. ஓயாத அலைகள் அடித்த அடியில் ஏற்பட்ட தோல்விகளை மறைத்து சந்திரிகா அம்மையார் பல்குழல் பீரங்கிகளைக் கொள்வனவு செய்ததும் தமது சாதனைகளில் ஒன்றென பத்திரிகைகளிலும் தொலைக்காட்சி ஊடகங்களிலும் பிரச்சாரம் செய்து வருகின்றார். இதுவரைக்கும் தென்மராட்சிப் பகுதியில் 500ற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் சிங்களத்தின் புதிய பல்குழல் ஏவுகணைச் செலுத்தியினால் கொல்லப்பட்டனர். பல மக்கள் வாழிடங்கள், கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன.



சிறீலங்கா அரசு புதிதாக கொள்வனவு செய்த செக் தயாரிப்பான 122mm பல்குழல் பீரங்கி (MRBL) சம்மந்தமான தரவுகள் சில இங்கு தரப்படுகின்றன. இங்கு தரவுகள் தரப்படுவதன் நோக்கம் சிங்களத்தின் பலம் பற்றிய பிரமிப்பை ஊட்டுவதற்கு அல்ல, மாறாகத் தமிழர்கள் தாயக மீட்பிற்கான பங்களிப்புக்களை இன்னும் அதிகரிக்க வேண்டும் என்பதும், அத்தோடு சிங்களத்தின் இன அழிப்புக் கொள்கையை உலகறியச் செய்ய வேண்டும் என்பதுமே ஆகும்.

## கட்டமைப்பு விபரங்கள்

*கலிபர் - 122.4mm

*முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு - 1963

* தயாரிக்கும் நாடுகள்- வடகொரியா, ரஸ்யா, சீனா, எகிப்து, செக் குடியரசு

* பாவிக்கும் நாடுகளின் எண்ணிக்கை - 50

* தேவையான படையினர் - 5 ( பொருத்தப்பட்ட தாங்கியோடு 9)

*மொத்த நிறை - 13மெட்றிக் தொன்

*சுடுகுழல்களின் எண்ணிக்கை - 40

*சுடுதலின் வேகம் - 40 குண்டுகள் 20 செக்கன்களில் தனித்தனி ஏவுகணைகளாக - 5செக்கனுக்கு ஒன்று

*தாக்குதூரம் குறைந்தது - 5000m

*ஆகக்கூடியது - 20,380m

*ஏவுகணையின் நீளம் - 2.87m

*சுருட்குழியின் கோணம் - 2-2.5 பாகை

*மூலப்பொருள் - உருக்கு

***ஏவி(Launcher) - 180பாகை சமாந்திரமாக 40சுடுகுழல்களுடன் பொருத்தப்பட்டிருக்கும் அதிலிருந்து 0-55 பாகைவரை தன்னியக்கமாகவும், கைகளினாலும் அசைக்க வல்லது.**

*** ஏவுகணைகளை ஒரேதடவையாகவும் அதேவேளை ஒவ்வொன்று ஒவ்வொன்றாகவும் வெடிக்க வைக்கலாம்.**

**தூரஅழுத்தியின் உதவியுடன்** (Remote Control) 60 மீற்றரிலும் ஏவுதலை மேற்கொள்ளலாம்.

# தமிழர் சேனையின் மனபலத்திற்கு முன்னால் மல்ரிபரல் என்ன செய்யும்

யின் உதவியுடன் பாரிய படை முன்னெடுப்பை கனகம்புளியடி - புத்தூர் வீதியை மீளக்கைப்பற்றும் நோக்குடன் 09ஆம் திகதி காலை 7.00 மணியளவில் இரு முனையிலான முன்னேற்றத்தை மேற்கொண்டது எதிரிப்படை.


எதிரியின் ஒரு முனை உடைப்பாக கனகம்புளியடி-புத்தூர் வீதியை அண்டியதாகவும், அடுத்த முனை உடைப்பாக வீதிக்கு பக்கவாட்டாகவும் இருந்தது. எதிரி மீண்டும் வருவான் என்பதை எதிர்பார்த்து தங்களை தயார்படுத்திக் காத்திருந்த எமது அணிகள் கிட்டு பீரங்கிப்படையின் செறிவானதும், துல்லியமானதுமான சூட்டாதரவுடன் எதிரியுடன் உக்கிரமாக மோதின. அன்று நடந்த அந்தக் கடும் சமரில் எதிரிக்கு பெரும் இழப்புக்களுடனான தோல்வியை வழங்கி இருமுனை முன்னேற்றத்தையும் முறியடித்து வெற்றியை தமதாக்கினர் புலிகள் அணிகள். ஓயாத அலைகள்-03 கட்டம் 05இல் மீட்கப்பட்ட நிலத்தை எதிரி மீண்டும் கைப்பற்றும் அவனது உடனடி முயற்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டு நடவடிக்கையின் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டது.

ஓயாது அதிரும் அலைச்சமர் எதிரிக்கு ஆழத்தோண்டப்பட்ட புதைகுழி. தமிழருக்கு வெளித்தெரியும் விடிவெள்ளி. இதை எதிரித் தரப்பு உணர்ந்து கொள்ளாதவரை அவர்களின் எண்ணில் அடங்கா உடல்களை இந்தப்புதைகுழி உள்வாங்கிச் செரிக்கும். சிங்கள இனவாத மமதை கொண்டவர்கள் எங்கெல்லாம் எம் தேசத்தில் கால்பதித்து வைத்திருக்கிறார்களோ, எங்கெல்லாம் கால் பதிக்கிறார்களோ அங்கெல்லாம் அதிரும் அலைச்சமர். இனி வீழ்வதன்றி வேறு வழியெதையும் வீரத்தலைவன் பிரபாகரன் படை எதிரிக்கு விட்டுவைக்கப்போவதில்லை. வெற்றியன்றி வேறெதனையும் பிரபாகரன் படை இனித் தொட்டு நிக்கப்போவதில்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# பார்த்து
# சமா

சிறீலங்காவின் ஆளும் பொதுசன ஐக்கியமுன்னணியும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும், சில மாதங்களாக நடத்திய பேச்சுவார்த்தைகள், இறுதியில் பொய்த்துப்போய், பரஸ்பரம் கடுமையான குற்றச்சாட்டுக்களை சுமத்தல், மோசமாகத் திட்டித் தீர்த்தல் வரையில் சென்று முடிந்திருக்கின்றது. இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைக்கப்போவதாக அறிவித்து, பலமாதங்களாக பல தடவைகள், இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளும் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டன. சிறீலங்காவின் வரலாற்றில் அதிமுக்கியமான நகர்வு, இனப்பிரச்சனைத் தீர்வில் முக்கியமான திருப்பம் என்றெல்லாம் சந்திரிகா அரசு, தன் முயற்சிகளை வர்ணித்ததை நம்பி, அதே பதங்களுடன், சர்வதேச தொடர்புச் சாதனங்களும் சந்திரிகாவின் இந்தப் பேச்சுவார்த்தை நாடகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தன.

இலங்கைத்தீவில் முனைப்புற்று நிற்கின்ற, இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் என, சர்வதேச நாடுகள் பலவும் நம்பிக்கை தெரிவித்தன. அத்துடன், சந்திரிகா அரசின் முயற்சிக்கு ஆதரவு தெரிவித்தும் அவை தமது அபிப்பிராயங்களை வெளியிட்டன.

ஒரு வருடத்திற்குள் இனப்பிரச்சனையை பேச்சுவார்த்தை மூலம்தீர்த்து, யுத்தத்திற்கு முடிவுகட்டுவேன் எனச்சபதம் செய்து, 1994 ஆண்டு தேர்தலை வெற்றி கொண்ட சந்திரிகா, மறுவருடமே மோசமான இன அழிப்புப் போரை ஆரம்பித்தார். சமாதானத்திற்கான யுத்தம் என்ற விசித்திரமான பெயரையும், இதற்குச் சூட்டி தமிழ் மக்கள் மீதான தனது கொடும் தாக்குதலை விஸ்தரித்தார்.

தமிழீழப் பகுதிகளை மேலும் ஆக்கிரமிக்க, யுத்தகளங்களை எல்லாத்திசையிலும் திறந்துவிட்டார். வன்னியிலும், மன்னாரிலும், மணலாற்றிலும், மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் என, சிங்களப் படையின் ஆக்கிரமிப்புப் போர் விஸ்தரிக்கப்பட்டது. பலம் வாய்ந்த இராணுவக் கரங்கள் கொண்டு, தமிழ் மக்களின் தாயக மண் நசுக்கப்பட்டது. கசக்கப்பட்டது.

கடந்த ஐந்தாண்டுகளில், யுத்தத்தை விஸ்தரித்து, இறுதியில் தோல்வியால் துவண்டு, நொந்து அவமானப்பட்டுப் போயுள்ள சந்திரிகா அரசு, சமாதானத் தீர்வு காண்பதில் அதீத ஆர்வம் கொண்டிருப்பதாக நாடகமாடியது. எதிர்க்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. பாராளுமன்றத்தில் தனது தீர்வுத்திட்ட நகலை, பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக முன்வைத்தார். பாராளுமன்றம் கலைக்கப்பட இருக்கின்ற இறுதி வாரங்களில், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா இத்தனை அவசரம் காட்டினார் என்பது பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தத் தவறவில்லை.

இத்தனை காலம் போரின் கூரிய முனைகளைத் தீட்டி யுத்தத்திற்கு முன்னுரிமை கொடுத்த சந்திரிகா, நாட்டை யுத்தப்பாதையில் இட்டு, நாட்டின் அனைத்து புனர்வாழ்வு புனர்நிர்மாண வேலைகளை நிறுத்தி யுத்தச் செலவுக்கு அதனை தாரை வார்த்த சந்திரிகா, அரசாங்க உத்தியோகத்தர்களின் இரண்டு நாள் ஊதியத்தை யுத்தத்திற்கு வழங்க வேண்டும் என அறிவித்தல் விடுத்த சந்திரிகா, பெரும்தொகை யுத்த ஆயுதங்களை, தளபாடங்களை, சாதனங்களை வாங்கிக் குவித்த சந்திரிகா, இராணுவத்தினரின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்த சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தையில் திடீர் ஆர்வம் காட்டினார் என்பது இயல்பானதொன்றாக இல்லை என்பது தெளிவானது.

எனினும், அவரது அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சி, கைவிடப்பட்டது. எதிர்க்கட்சியும், பௌத்த பிக்குகளும், ஆளும் கட்சிக்கு ஆதரவு தெரிவித்த கட்சிகளும், இன்னும் ஆளும்கட்சியில் அங்கம் வகித்த அமைச்சர் உட்பட உறுப்பினர்கள் பலரின் எதிர்ப்பிற்கு மத்தியில் கைவிடப்பட்டது. தீர்வுத்திட்டத்தில் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்த்துவைக்கக்கூடிய எந்தவித அம்சமும் இல்லை என்றபோதும், ஆளும் கூட்டணிக்கு ஆதரவு வழங்கிவந்த தமிழ்க்குழுக்கள் சில, இந்த அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை ஆதரிக்கத் தயாராக இருந்ததும், அப்படியொன்றுமே இல்லாத தீர்வுத் திட்டத்தைக்கூட ஆதரிக்கக்கூடாது என்ற பேரினவாத நிலைப்பாட்டில், ஆளும்கட்சி அமைச்சர் மகிந்த ராஜபக்ஸ்சவே அதனை எதிர்த்ததும், இனத்துரோகமிழைக்கும் தமிழ்க்குழுக்களுக்கும் பேரினவாதச் சித்தாந்தத்தில் ஊறித்திளைத்த சிங்களப் பேரினவாதிகளுக்கும் நல்ல உதாரணம். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகர்வாக, முயற்சியாக சந்திரிகாவால் வர்ணிக்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சி, இலங்கைத்தீவின் கடந்தகால அரசியல் வரலாறுகளுக்கு ஒப்ப இறுதியில் கைவிடப்பட்டது.

தற்போது, சிறீலங்காவின் அடுத்த பாராளுமன்றத்திற்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதே வாக்குறுதிகளுடன் சிங்களக் கட்சிகள், தேர்தல் களம் இறங்கியுள்ளன.

இனப்பிரச்சினையைத் தீர்வு கண்டு, நாட்டை நல்லநிலைக்கு உயர்த்த இன்னும் ஆறாண்டுகள் காலத்தை எனக்குத்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ச் சலித்த சிங்களத்தின்
# தானக் கூத்து!

தாருங்கள், எனக்கூறி சந்திரிகா வாக்குப்பிச்சை கேட்க ஆரம்பித்திருக்கின்றார். கடந்த ஐந்தாண்டுகளில், சமாதானத்திற்கான யுத்தம் எனக்கூறி, நாட்டின் பொருளாதாரத்தை அதளபாதாளத்திற்கு உருட்டிவிட்ட சந்திரிகா, தற்போதைய தனது தேர்தல் விளம்பரத்தில், தனது ஆறாண்டுகாலச் சாதனைகளைப் பட்டியலிடும் வகையில் பிரசுரிக்கப்பட்ட புகைப்படங்களில், யுத்தத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச்செல்ல அண்மையில் வாங்கிக் குவிக்கப்பட்ட பல்குழல் ஏவுகணைகளையும் தேர்தெடுத்திருக்கின்றார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும், பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாகப் பாவித்து, அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை சட்டமாக்கி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என, அவர் ஒரு பக்கத்தில் தெரிவித்துக்கொண்டிருந்தாலும், மறுபக்கத்தில், புதிதாக பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்ட இரட்ணசிறி விக்கிரமநாயக்கா யுத்தம் தொடர்ந்து கடுமையாக நடத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். தீர்வுத்திட்டத்திற்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வந்த புத்தபிக்குகளின் ஆலோசனை கருத்துக்களை அறிந்தே, தீர்வுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என இவர் தெரிவிக்கிறார்.

பொதுசன ஐக்கியமுன்னணியின் இரண்டு தலைவர்களும் இரண்டுவிதமான கோணத்தில் வாக்காளர்களைக் கவரமுற்பட்டாலும், அவர்களின் அடிப்படை நோக்கம் குறி என்பன யாவும் ஒன்றே. யுத்தம், அழிப்பு, அடக்குமுறை என்பதைத்தவிர அவர்களிடம் வேறுஎதுவும் இருக்க நியாயமில்லை.

இதில் அடுத்த வேடிக்கை என்னவென்றால், ஐக்கிய தேசியக் கட்சியும் இந்தச் சமாதானக் கோசத்தை தனது தேர்தல் சோசமாக்கிக் கொண்டிருப்பதுதான்.

சந்திரிகாவின் மலிவான அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைக்கூட நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாமல் தடைகளை ஏற்படுத்தி ரணில் விக்கிரமசிங்கா, தான் தேர்தலில் வெற்றிபெற்றால் சமாதானத்தைக் காண்பேன் என்கிறார். தீர்வுத்திட்டம் குறித்து எல்லோருடனும் பேசி இணக்கத்தைக் கண்டு(?) குறிப்பாக பௌத்த பிக்குகளுடன் கலந்தாலோசித்து சரியான தீர்வுத்திட்டமொன்றை வரைந்து, அதனை விடுதலைப் புலிகளின் பார்வைக்கு அனுப்புவேன் என்கின்றார்.

சிங்களத்தின் இந்த அரசியல் கூத்துக்களை வெறுமனே நகைச்சுவைதொனிக்கப் பார்ப்பதுடன் நிறுத்திக்கொள்வதுடன், இந்தப் பித்தலாட்டங்களில் மனதைப்பறிகொடுக்கும் அறிவிலித்தனமான நிலையில் தமிழ்மக்கள் இல்லை. சிங்களத்து அரசியலை நீண்டகால பட்டறிவில் இருந்து புரிந்து தெளிந்துகொண்டு, விடுதலைக்கான போராட்டப்பாதையில் அணிவகுத்திருக்கும் தமிழீழ மக்கள், அடுத்த வெற்றி எப்போது என்று எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். விடுதலைக்கான உழைப்பின் முனைப்புடன்.

**-சுப்பு-**



தமிழர் உரிமைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் பௌத்தநெறியைக் கைவிட்ட பிக்குகள்



தீக்கிரையாகும் தீர்வுப் பொதி



"போரை ஆதரித்துப் பழக்கப்பட்டவர்கள்"



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முல்லையும் பாலை

“இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி” என்ற கூற்றுக்கள், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் வாழ்க்கை அனுபவத்தின் வெளிப்பாடுகளாகும். இயற்கையைத் தனது நண்பனாகவும், வாழ்க்கையைத் தனது தத்துவாசிரியனாகவும், வரலாற்றைத் தனது வழிகாட்டியாகவும் ஏற்றுக்கொண்டு ஒரு மாபெரும் விடுதலை வரலாற்றின் வெற்றி வேந்தனாக இலங்கும் தேசியத் தலைவருக்கு இயற்கை, உற்ற இடத்து உதவும் நட்பாய் உதவி நிற்கின்றது. இந்த இயற்கை, காடும் காடு சார்ந்த நிலம் என்னும் முல்லையாய் மலர்ந்து விரிந்து தனது மண்வாசனையோடு அந்த மன்னவனுக்கு ‘மணம்’ தந்து நிற்கின்றது.

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்று அழைக்கப்படுகின்றது. இந்த முல்லை நிலத்தின் அக ஒழுக்கமாக ‘இருத்தல்’ ஒழுக்கமும், புற ஒழுக்கமாக ‘வஞ்சி’யும் கருதப்படுவது வழக்கம். இந்த நில மக்கள் தங்களது நிலத்தையும், தமது செல்வங்களான மந்தைகளையும் பகைவர்களிடத்திலிருந்து காத்தற் பொருட்டு, தம் எல்லைப் புறங்களுக்குச் சென்று பாடிவீடமைத்து, தங்கியிருந்து தமது பகைவர்களை அடக்கி மீளுவர். இப்பாசறைகள் வேனிற்பாசறை, கூதிற்பாசறை என்று அழைக்கப்பட்டன. இவ்வாறு எல்லைப் புறத்தில் பாடிவீடமைத்து முல்லை நில மக்கள் நிகழ்த்திய போர் வஞ்சி என அழைக்கப்பட்டது. இத்தகைய பாசறைகள் அமைத்து, முல்லை நில மக்கள் நிகழ்த்திய போர்கள் பற்றிய விபரங்களை முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை போன்ற சங்க இலக்கிய நூல்களிலிருந்து நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு முல்லை நில அரசனும், படைத்தலைவர்களும், வீரர்களும் பாசறை அமைத்துப் போர் புரிவதற்காகச் சென்று, வெற்றியுடன் மீண்டும் திரும்பிவரும்வரை அவர்களின் மனைவியர் அவர்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற இருத்தல் முல்லை நிலத்தின் அகஒழுக்கமாகக் கருதப்பட்டது. அப்படி அவர்கள் இருக்கின்றபோது, பாசறைக்குச் சென்ற வீரர்கள் வருவதாகக் கூறிச் சென்ற காலத்தில் வராவிட்டால் வீட்டில் இருந்த பெண்கள் ஆற்றாமையோடு துன்பப்பட்டுக் கொண்டு இருந்த செய்திகளையும் சங்க இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

‘சங்ககாலம் திரும்பியது ஆடு’ என்றபடி இன்றும் ஒரு வீரம் செறிந்த வாழ்வு தமிழர்களின் வாழ்வாகச் சிறந்து நிற்கின்ற நிகழ் காலச் சூழலில் தமிழீழக் கடலெங்கும் எங்கள் கரிகாலனின் ஓயாத அலைகளின் வெற்றிச் செய்தி பரவிக்கொண்டிருக்கும் இவ்வினிய வேளையில், முல்லையும் வல்வையும் பற்றி அதாவது இயற்கை எனது நண்பன் என்று கூறிய வல்வை வேந்தனின் வாகையை முல்லையோடு இணைத்து எழுத மனம் ஆவல் கொள்கிறது.

முல்லைச்செடி சிக்கெனப் பூக்கும் சிறியசெடி. தன் வெண்மலர்களின் அழகிய தோற்றத்தால் மட்டுமன்றி அதன் வாசனையாலும் அனைவரையும் வசீகரிக்கும் தன்மை கொண்டது.

மாலையில் மலரும் இம் மலரின் அழகிலும் வாசனையிலும் மனதைப் பறிகொடுக்காதோர் யார்? முல்லைக்குத் தேர் கொடுத்த பறம்புமலை மன்னன் பாரியின் கொடையைக் கபிலர் இவ்வாறு பாடுகின்றார்.

“பூத்தலை யறாஅப் புனை கொடி முல்லை
நாத்தழும்பி யிருப்பப் பாடாதாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுத்த பரந்தோங்கு சிறப்பிற் பாரி"

பாடிவந்த புலவர்கட்குப் பரிசில் கொடுத்ததோடு மட்டுமன்றி, வாய்விட்டுச் சொல்ல வகையறியாத கொடியாகிய முல்லைக்குக்கூட பெருங்கொடை கொடுத்த இப்பாரியின் பெருமையை, மண்ணுலகைப் பாதுகாப்பதற்கு மாரியும் உண்டு என்பதை மறந்து எல்லோரும் பாரி ஒருவனையே போற்றுகின்றனரே என்று பேசுமளவிற்குப் பெரிதாகப் பேசப்பட்டது.

இன்று தமிழீழத்தாயின் காடும் காடு சார்ந்த இடங்களுமாகிய பெரு நிலப்பரப்பென்னும் அன்பு மடி மீது தமிழீழத் தேசியத் தலைவரும் அந்த மாபெரும் தலைமையில் அணிதிரண்ட வீரமைந்தர்களும் தமது போராட்டப் பயிற்சிகளைப் பெற்று, அரண் அமைத்து, தமது வரலாற்று வெற்றிகளுக்கான அத்தனை முயற்சிகளையும் செய்கிறார்கள். இந்தவகையில் எங்கள் முல்லை எங்கள் தாயக மீட்புப்பாதையில் ஒரு பெரும் பங்களிப்பை நல்கி நிற்கின்றது. நிலம் சுரக்கும் நிறைவளம் என்றபடி தன்னகத்தே உள்ள நிறைவளங்களால் காயும் கனியும் கிழங்கும் மட்டும் நல்காமல், அரணாக நின்று ஆதரித்து நிற்கின்றது. முல்லை நிலம் என்னும் நல்லாளின் 'காப்பு' எங்கள் காவலனையும், வீரர்களையும் காத்துநிற்கின்றது. தமிழீழத்தின் எல்லைப் புறங்களை மீட்டெடுத்து எங்களது தாயகத்தின் விடுதலையை வென்றெடுப்பதற்காகப் பாசறைகள் அமைத்து அங்கே தங்கியிருந்து எதிரியுடன்

# லையும்

போரிட்டு மீண்டும் வெற்றி வாகையுடன் நாட்டுக்குள் மீளும் நன்னாளும் இன்றைய இந்தத் திருநாளே. அதனால்தான் சங்ககால முல்லைநிலம், அந்நிலத்துக்குரிய அக ஒழுக்கம், புற ஒழுக்கம் என்பவற்றை மீண்டும் மீள நினைத்துப் பெருமையுறும் நாட்களாக இன்றைய நாட்கள் இருக்கின்றன.

முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி. ஆனால் காடும் காடு சார்ந்த இடமுமாகிய முல்லை எனும் வன்னி, வல்வை வேந்தனுக்குப் போராட்டம் என்னும் தேரை நகர்த்தி ஊருக்குள் உலாவந்து தமிழீழம் என்ற இருப்புக்கு வருவதற்குத் தானே முன்வந்து உதவி முறுவலித்து நிற்கின்றது. தமிழீழப் போராட்டம் என்ற வளர்ச்சிப் பாதையில் இந்த முல்லை நிலத்தின் பங்களிப்பு பாரியது. இயற்கை எனது நண்பன் என்ற தேசியத் தலைவரின் கூற்றுக்கு உரியதாக நட்பாகி நின்ற இந்த நிலம், இனி வருகின்ற வரலாறுகளுக்குத் தலைவரை வழிகாட்டியாய் துலங்கவைத்திருக்கின்றது.

1995ஆம் ஆண்டு இடம்பெற்ற வரலாற்று இடப்பெயர்வின்போது, தன்னை நாடி வந்தவர்களை வாழவைத்திருக்கின்றது. நஞ்சையும் புஞ்சையுமாய் நலம் கொழிக்கும் நன்னிலமாய் நன்மை செய்திருக்கின்றது. ஆவும், மாவும் நிறைந்திருக்க ஆதரித்துக் காப்பாற்றிய காவல் மண். வீரத்தால் சிறந்து உரம் தந்து சிவந்த மண். காடும் கழனியும் கவின் செய்யக் காலமெல்லாம் காப்பாற்றும் வீரமண். மானும் மயிலும் மகிழ்ந்தாட, முக்கனிகளும் முகம் காட்ட பாறை பிளந்தும் பயிர் விளைவிக்கும் பார் அது. மீண்டும் தொடங்கும் மிடுக்கோடும், பகையறுக்கும் திறத்தோடும் வேரோடிநிற்கும் உரத்தோடும் உயர்ந்து நிற்கும் உறுதி மிக்க மண். தம்மைக் கொடையாக்கிக் கொள்கைக்காய் உயிர்விட்ட தியாகிகளின் ஈரத்தால் நிறைந்து நிற்கும் புனித பூமி. இந்த மண்ணின் வாழ்வும் வளமும் எல்லோரையும் வாழவைத்திருக்கின்றது. தன்னை நாடி வந்தோருக்கு நாடென்பது நாடா வளத்தது என்பதை மெய்ப்பித்து அன்பு செய்திருக்கின்றது. இந்த முல்லை இன்று ஓயாது அடிக்கும் அலைகளின் வெற்றிகளுக்கு களமாய் நின்றிருக்கிறது. நிற்கின்றது. இயற்கை எனது நண்பன், வரலாறு எனது வழிகாட்டி, வாழ்க்கை எனது தத்துவாசிரியன் என்று தமிழீழத் தேசியத் தலைவர் கூறியிருக்கின்ற கூற்றுக்கள் அவரின் தமிழீழம் நோக்கிய விடுதலைப் பாதையின் அனுபவ வெளிப்பாடுகள்.

முல்லை என்ற நிலப் பிரிவோடு குறிஞ்சி, நெய்தல், மருதம் என்ற வேறு மூன்று நிலப்பிரிவுகளும் உண்டு. இவற்றோடு பாலை என்ற ஒரு நிலமும் உண்டு.

முல்லையும் குறிஞ்சியும் முறைமை யிற்றிருந்து

நல்பியல்பு இழந்து நடுங்கு துயருறுத்துப்

பாலை என்பதோர் வடிவம் கொள்ளும்...

என்ற படி முல்லை நிலமும், குறிஞ்சி நிலமும் தங்களுடைய நல்ல தன்மையில் நின்றும் வெம்மை காரணமாக வரட்சியுற்றுப் பசுமை குன்றி பாலை என்ற மணற் பிரதேசமாக மாறும். பின்பு மழைபெய்து பசுமை வர பாலையாக மாறிய குறிஞ்சி, குறிஞ்சியாகவும் பாலையாக மாறிய முல்லை, முல்லையாகவும் மாறும்.

இப் பாலை நிலப் புற ஒழுக்கமாக வாகையும் அக ஒழுக்கமாகப் பிரிதலும் பேசப்பட்டன. வாகை என்றால் வெற்றி என்று பொருள்படும். பாலை நில மக்கள் மறவர் எனப்பட்டனர். அவர்கள் போருக்குச் சென்றபோது வாகைப் பூக்களைச் சூடிச்செல்வது வழக்கம். எந்த நிலத்துக்குச் சென்றபோதும் வெற்றி பெற்றே மீள்வர். அவர்கள் சூடிச்சென்ற பூ வெற்றிக்கு அறிகுறியாகவே கருதப்பட்டது. இதனால் வெற்றி பெறுதலை வாகைசூடுதல் என்று அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

இன்று தமிழீழம் வெற்றித் திருநகராக இலங்குகின்றது. விடுதலை வீரர்கள் வெற்றி வீரர்கள், "சங்கு முழங்கடா தமிழா...! இந்தச் சாதனை பாரடா தமிழா!" என்று வாகைசூடிக் கொண்டிருக்கிறார்கள். இது எங்கள் ஈழத்துக்கு வெற்றி. தர்மத்துக்கான வெற்றி. எங்கள் தாயக மீட்பின் தலையாய வெற்றி. தமிழீழத் தேசியத் தலைவருக்கு வரலாற்று வெற்றி. "வெற்றி எட்டுத்திக்கும் முட்டக் கொட்டு முரசே" என்று வெற்றி முரசுகளாய் எங்கள் குரல்கள் ஒலிக்கும் வேளை இது. எங்கள் வாகையை நாங்கள் கொண்டாடும் காலம் இது. பாலையாய் வரண்டு, வளம் கெட்டு, நலமிழந்து நிற்கும் நிலங்கள் மீண்டும் வாகை சூடும் நன்னாளை எதிர்பார்த்து நாங்கள் முல்லை நில மக்களாய் இருத்தல் ஒழுக்கத்தில் இருப்போம். முல்லையும் வாகையும் வல்வையும் இணைந்த வரலாற்றுக் காலம் இது. முல்லைகள் மலரும். வாகைகள் தொடரும். வல்வை வரலாறாகும். வரலாறு எமதாகும்.

# வல்லையும்



**-இலக்கியா-**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பட்டினியால் மடிந்த பயாவ்ரா – 1967




மேற்கு ஆபிரிக்க நாடுகளில் அதிக சனத்தொகை கொண்ட தேசம் நைஜீரியா. இதன் மக்கள் தொகை தற்போது 150 மில்லியன்களுக்கு மேலாகும். மொத்தமாக 250 வகையான இனக்குழுக்களைக் கொண்ட தேசம் இது. இவற்றுள் இபோஸ், யொரூபா, கௌசா, புலானி என்பனவே பிரதானமான இனக்குழுக்கள் ஆகும். இவர்களுள் கௌசா இனத்தவரே பெரும்பான்மையினராவார். இவர்களுக்கு நைஜீரியாவின் வட பகுதி பாரம்பரிய தாயகமாகும்.

உலக வரலாற்றிலே 1914 ற்கு முன்னர் நைஜீரியா என்றொரு நாடே இல்லை. நான்கு தேசிய இனங்களின் தாயகங்களை இணைத்து இந்நாட்டினை உருவாக்கினர்.

1897இல் தெற்குப்பிராந்திய யொரூபா மக்களுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. 1901ற்கும் 1903ற்கும் இடையேயான ஆண்டுகளில் வடபகுதியில் கிளர்ச்சியானது கொடுரமான முறையில் றோயல் நைஜர் கொம்பனிப் படைகளால் அடக்கப்பட்டது. 1914இல் இவ்வாறு யொரூபா, கௌசா, புலானி இன மக்களின் பிரதேசங்கள் ஏற்கனவே பிரித்தானியரின் கட்டுப்பாட்டில் இருந்த அத்திலாந்திச் சமுத்திரத்தின் விரிகுடாப்பகுதியான பயாவ்ரா பிராந்தியத்தோடு இணைக்கப்பட்டு நைஜீரியா உருவாக்கப்பட்டது. ஆனால் இந்த ஒருங்கிணைப்பானது மக்களின் மனஒருமித்த இணைப்பல்ல, மாறாக காலனியாதிக்கத்தின் நலன்களைத் தொடர்ச்சியாகப் பேணும் நோக்கிலான இணைப்பாகவே இது இருந்தது.

இங்கே குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் இபோ மக்களின் தாயகமான கிழக்கு மற்றும் தென் கீழ் பிராந்தியமான பயாவ்ராவே எண்ணெய் மற்றும் கனிமவளங்கள் நிறைந்த பகுதியாகும். நைஜீரியா நாட்டின் பிரதான நதியான நைஜர் நதிக் கழிமுகமும் இங்கேதான் அமைந்திருந்தது. அத்தோடு இபோ மக்கள் கல்வியிலும், தொழில்நுட்பத்திலும் சிறந்தவர்களாக விளங்கினர். இவர்கள் தங்களை மூழ்கடித்து விடுவார்களோ என்ற அச்சம் காரணமாக பெரும்பான்மை கௌசா மற்றும் புலானி மக்கள் எப்போதும் குரோதமனப் பான்மையுடனே இபோ மக்களை நோக்கினர்.

1959இல் பெரும்பான்மை கௌசா இன மக்கள் மத்திய அரசை அமைத்தனர். 1960 ஒக்டோபர் 1 பிரித்தானியர் நைஜீரியாவை விட்டு வெளியேறினர். 1963இல் குடியரசாகிக் கொண்டது. மேற்கு ஆபிரிக்காவில் மிகப் பெரிய நாடாக உருவெடுத்த நைஜீரியாவில் பல இனக்குழுமங்களிலும் முன்னிலை வகித்தது இபோ இனமாகும். நைஜீரியாவின் மிகப்






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரிய எண்ணெய் வயல்கள் மற்றும் கனிப்பொருள் சுரங்கங்கள் இம்மக்கள் வாழ்ந்த தெற்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களிலேயே அதிகம் காணப்பட்டது. இதனால் இம்மக்கள் பொருளாதார ரீதியாக மேம்பட்டவர்களாக விளங்கினர்.

பிரிட்டிஸாரின் பிரித்தாளும் கொள்கையின் பிரகாரம் நைஜீரியாவில் இனச்சிக்கலை மும்முனைப்படுத்தினர். தெற்கே பயாவ்ரா பிராந்தியத்தில் வாழ்ந்த இபோ மக்களும், யொரூபா மக்களும் இணைந்து வாழாமலும் அதே வேளை வடக்கு வாழ் கௌசா மக்கள் இவர்களோடு என்றும் இணையாதவாறும் பார்த்துக்கொண்டனர். இதனால் நாட்டில் இபோ இனத்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் என்றுமில்லாத வகையில் அதிகரித்தன. நைஜீரியாவின் அரச உயர் பதவிகள் மற்றும் வியாபார முயற்சிகளிலும் முன்னோடிகளாக இபோ இனமக்கள் விளங்கினர்.


கௌசா இனமக்கள் இனச்சுத்திகரிப்பு நோக்கிலான மிலேச்சத்தனமான தாக்குதல் முயற்சிகளை 1953 மற்றும் 1966 ஆம் ஆண்டுகளில் இபோ மக்கள் மீது மேற்கொண்டனர். இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு 1958 மற்றும் 1983ஆம் ஆண்டுகளில் நேர்ந்த படுகொலையிலும் பார்க்க இபோ மக்கள் நிராயுதபாணிகளாகப் பாரிய இழப்புக்களைச் சந்தித்தனர்.

1966இல் இடம்பெற்ற இபோ மக்கள் மீதான படுகொலைகள் அவர்களுக்கு பயாவ்ராதான் தமது தாயகம் என்பது உணரவைக்கப்பட்டது. இவையெல்லாம் பயாவ்ராவின் விடுதலைத்தீக்கு நெய்யூற்றின.

தொடர்ச்சியான இனப்படுகொலைகளால் தமது தரப்பில் 50,000 மக்களை இழந்த இபோ மக்களுக்கு வேறு தெரிவு இருக்கவில்லை. இதனால் தமது தாயகப் பிரதேசங்களான கிழக்கு மற்றும் தென் கிழக்குப் பகுதிகளில் தனிநாடாகப் பிரிந்து வாழ்வது என தீர்மானித்துக்கொண்டனர்.




1966 ஜூலையில் கௌசா இனத்தவர் இபோ இனத்து இராணுவ அதிகாரிகளையும் அரச உயர் அதிகாரிகளையும் கொன்று தள்ளினர். இனச்சுத்திகரிப்பு மிக மோசமான முறையில் மேலிருந்து கீழ் நோக்கி மேற்கொள்ளப்பட்டது. 1,000,000, இபோ இனமக்கள் ஏதிலிகளாக நைஜீரியாவின் பல பகுதிகளிலிருந்தும் பயாவ்ராவிற்குத் திரும்பினர். நைஜீரியாவின் வேறெந்தப் பகுதியும் இபோ மக்களுக்கு பாதுகாப்பானதல்ல என்பது



பயாவ்ராவின் சுதந்திரத் தலைவரான லெப்.கேணல் ஒடுமெகுவா ஒசுக்குவா'

அவர்களின் ஆழ்மனதில் பதியவைக்கப்பட்டது.

கிழக்குப் பிராந்தியத்தில் இபோ இனமக்களின் தலைவர் லெப்.கேணல் 'சுக்குமேக்கா ஒடுமெகுவா ஒசுக்குவா' பயாவ்ரா சுதந்திரப் பிரகடனத்தை மேற்கொண்டார்.

இதனை முறியடிக்கும் நோக்கில் வடக்குத் தளபதியான யாக்கோகோபன் பயாவ்ரா பாரம்பரியத் தாயகக் கருதுகோளை இல்லாதொழிக்கச் செய்யும் நோக்கில், நான்கு மாநிலப் பிராந்தியங்களைக் கலைத்து 12 புதிய அலகுகளை ஏற்படுத்தினார்.

1967ஆம் ஆண்டு மே 30ஆம் திகதி பயாவ்ரா என்ற நாடு 'அத்திலாந்திக் சமுத்திரத்தின் கரம்' என்ற பொருள் படும்படி, தனிக்கொடி இலச்சினை, தனியான நாணயம் என்பவற்றோடு பிரகடனப்படுத்தப்பட்டது. லெப்.கேணல் ஒசுக்குவா தலைமையிலான அரசு எனகுவை தலைநகராகக் கொண்டு இயங்கத் தொடங்கியது.

தழைகளால் கட்டப்பட்ட எறிகணைகளை தலையிற் சுமக்கும் விடுதலைப் போராளி



பயாவ்ராவின் சுதந்திர அரசாங்கம் ஒரு வருடகாலம் சிறப்புற நடந்தது. எப்பாடுபட்டேனும் பயாவ்ரா எழுச்சியை நசுக்குவதற்கு முழுமூச்சாக நைஜீரியப் படைகள் பெரும் எடுப்பில் கடல், தரை, வான் மார்க்கங்களால் மேற்கொண்டனர். ஏனெனில் கனிப்பொருள் நிறைந்த நைஜர் நதியின் கழிமுகத்தையும், பயாவ்ராவின் எண்ணெய் வயல்களையும் இழந்துவிடத் தயாராக இல்லாத நைஜீரியா தனது முப்படைகளை தாக்குதலை தீவிரப்படுத்தியதோடு உணவு, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களை ஆயுதமாகப் பாவித்து பயாவ்ராவின் அனைத்து விநியோக வழிகளையும் மூடிவிட்டது. ஏற்கனவே ஒரு நீண்ட கால முற்றுகைப் போருக்கு தயாராக இல்லாத நிலையில் நாட்டின் வளங்கள் அனைத்தும் தீர்ந்து போயின. பெருந்தொகையான இபோ இனமக்களின் குழந்தைகள் குவாசியக்கோர், மரஸ்மஸ் நோய்களால் பாதிக்கப்பட்டனர். பெருந்தொகையான கர்ப்பிணித்தாய்மார் போதிய மருந்து வசதிகள் இன்றி மாண்டனர். கடும் பொருளாதாரத் தடையினாலும் 15 மில்லியன் இபோ மக்களில் 1 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர். இறுதியாக 1970 தை 15 அன்று பயாவ்ரா தனது இறையாண்மையை நைஜீரியாவிடம் கொடுத்து சரணடைந்தது.

பயாவ்ரா விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் போராளிகள் ஏற்ற தற்சார்புப் பொருண்மியத்தை உருவாக்கத் தவறியமையே அவர்கள் விட்ட தவறு. அத்தோடு கிடைத்த காலத்தில் தமக்குச் சார்பாக சர்வதேச ஆதரவையும் திரட்டத் தவறிவிட்டனர். இதனால் நைஜீரியாவிற்கு பெருந்தொகையான நாடுகள் உதவி செய்து பயாவ்ரா மக்களின் சுதந்திரக் கூட்டைக் கலைத்து விட்டனர்.

ஏறக்குறைய தமது சனத்தொகையில் 15 வீதத்திற்கு மேற்பட்ட மக்களை இழந்த பயாவ்ரா மக்கள், இன்றும் தமது நாட்டிற்கான விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்த வண்ணமே இருக்கின்றனர். இதற்கு அவர்கள் கொடுத்து வரும் விலைகளும் அதிகம்.

மாசோப் எனப்படும் பயாவ்ரா விடுதலைக்கான அமைப்பின் கீழ் பயாவ்ரா மக்கள் றாலோப் யுவாசுறுக்கே என்ற இளம் சட்டத்தரணியின் தலைமையில் தமது விடுதலைப் போராட்டத்தை தொடர்கின்றனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குளிரில் குருதியில்

அமைதி, அப்பிரதேசமெங்கும் வியாபித்திருந்தது. தொலை தூரத்தில் இருந்து பகைவனின் எறிகணைக் குழாயிலிருந்து புறப்பட்ட எறிகணைகள் அதிர்வுகளோடு வீழ்ந்து வெடித்து அமைதியைக் குலைக்க முயன்று கொண்டிருந்ததைத் தவிர அப்பிரதேசத்தின் சூழல் மாறுபடவில்லை. அலைகள் ஓய்வற்று தமது பணியை செய்வதில் வெற்றி பெற்றுக் கொண்டிருந்ததை பார்த்துக் கொண்டிருந்த எங்கள் மனதிலும் வெற்றி நிச்சயம் என்ற எண்ண அலைகளே உதிர்த்துக்கொண்டது.

விளக்கவுரைகள், மாதிரியுருக்கள், வரைபடங்கள் என அனைத்தும் விளக்கப்பட்டிருந்தது. இனிச் செயல்தான், அதற்குரிய நேரம் தான் இன்னும் வரவில்லை. நாங்கள் காத்திருந்தோம்.

எப்போவோ, எங்கேயோ கேட்ட வாசித்தறிந்த நோர்மண்டித் தரையிறக்கம் நினைவிற்கு வந்தது. அதே மாதிரியான தரையிறக்கமா இது. அன்றைய தரையிறக்கத்தில் பங்கெடுத்தவைகள் எல்லாம் கப்பல் அணிகளே. இன்றைய எங்களது தரையிறக்கத்திற்கு கை தரப்போறவைகள் படகுகள் அல்லவா. அதுவும் விரல் மடக்கி எண்ணும் எண்ணிக்கைகள்தானே ஆயினும் எங்களால் எதுவும் முடியும் என்ற அசையாத நெஞ்சுரத்தை அண்ணா வளர்த்துள்ளார். எங்களிற்குள் இந்த வரலாற்றுப் பணியை முடித்துக்கொடுக்க வேணுமென்ற தகிப்புகளே ஓயாமல் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

கடல், காலநிலை இவைகள்தான் பரவைப் பயணத்திற்கு துணையிருப்பவை. வளமையாக வீசிக்கொண்டிருந்த வாடைக்காற்று சற்று மிகையாகிக் கடலில் நுரையை உருவாக்கிக் கொண்டிருந்தது. சற்றுப் பாதகமான சூழ்நிலையாக மாறினாலும் பாரிய நெருக்கடியை எமது அணிகள் சந்தித்துவிடும் என்பதை நாங்கள் நன்கறிவோம். எங்கள் அனைவரின் விழிகளும் வினா-டிக்கு வினாடி கடல் மாற்றத்தை படம் பிடிப்பதிலும், காற்றின் வேகத்தை உணர்வதிலும் கவனமெடுத்தன. வடக்கிலிருந்து வரும் காற்றுக்கரம் தென்னை ஓலைகளை தடவிச் செல்ல அவை தென்திசை நோக்கி தலை தாழ்த்திச் செல்லும் அழகை ரசிக்கும் மனநிலை எங்களில் ஒருவரிற்குக்கூட வரவில்லை. தரையிறக்கப் படகுகளை தயார்படுத்தி, மீண்டும், மீண்டும் சரிபார்த்து சூசையண்ணா சொன்ன பணியை மனதில் மீள நினைப்பதிலேயும் மணிக்கம்பியை பார்ப்பதுமாய் காலத்தை நகர்த்தினோம்.

பணி. தரையிறக்கப்பணி. தரையிறங்கும் அணிகளிற்கான விநியோகப்பணி இவைகளையே எங்களின் இறுதிச் சுவாசங்கள் ஓயும் தருணம் வரும் வரை செய்து முடிக்கவேணும். அதுவும் வெற்றிகரமானதாக என எண்ணி எங்கள் மனங்கள் அதற்குள்ளேயே உழன்று கொண்டிருந்தன.

"தரையிறக்கம், எங்களை நம்பி தலைவர் அண்ணா அவர்கள் ஒப்படைத்த பணி. அந்தப் பணியை நாங்கள் முழுமையாக, வெற்றிகரமானதாக முடிக்கவேணும்" இது ஒருத்தியின் ஓயாத புராணம். "எம்மை நம்பி படகுகளில் எறி வரும் போராளிச் சோதர, சோதரிகளுக்கு சின்னக்கீறல்கூட

-அலையிசை-





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரக்கூடாது என்பதில் அதிக கவனமாயிருக்கவேணும்" இன்னொரு போராளியின் தியானம் இது. "எங்கட உயிரைக் கொடுத்தாவது தரையிறங்கும் அணிகளை எதிரியிடமிருந்து காப்பாற்றித் தரையிறக்க வேணும்" என கண்களில் தீவிரம் மின்னக் கூறும் சகபோராளியின் எண்ணப் பிரதிபலிப்பே எங்கள் அனைவரிலும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. நாங்கள் மூச்சுவிடும் ஒவ்வொரு கணங்களிலும் அதைப்பற்றியே யோசித்தோம், கதைத்தோம்.

கால் உரச 'சர்' 'சர்' என சத்தம் எழுப்பும் கடற்கரை மணலில் நடந்த போதெல்லாம் எங்கள் மனங்களில் இனம்புரியா வேதனைக் கதிர்கள் உருவாகிக் கொள்வதை தடுக்க முடியாமல் இருந்தது. "இந்தக் கடற்கரையில்தான் 91இல் ஆமிக்காறன் வந்திறங்கி எங்கட ஊரைப் பிடிச்சதோட அவன்ர ஆனையிறவுத் தளத்தைக் காப்பாற்றினவன்" என்று அருகிலிருந்து சொன்ன போராளியை அனைவரும் திரும்பிப்பார்த்தனர். கதைக்கு இடைவேளைதான் அந்த மௌன நிமிடங்கள் என்பதை உணர்ந்த அனைவரும் மீண்டும் கடலைப் பார்த்தார்கள்.

"பெரிய பெரிய கப்பல் எல்லாம் தொடுவானத்தில் இருந்து கரைக்கு சுட்டுக்கொண்டுவர தொடங்கிச்சுதுகள். நான் அப்பா வலை தெரிக்க அவரிற்கு பக்கத்தில் தம்பிகளோட விளையாடிக்கொண்டிருந்தனான். சத்தங்கள் கேட்கத்தொடங்க அழுதுகொண்டு தம்பியை தூக்கி இடுப்பில வைச்சுக்கொண்டு அப்பாவிற்கு பின்னால ஓடினன். அப்பாவும் சின்னத் தம்பியைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தவர்" சொன்னவளின் விழிகளில் அன்றைய துயர் தோய்ந்த நினைவுகள் ஒளிர்ந்து கொண்டிருந்தது. அவள் அமைதியாகவே இருந்தாள். அவள்விட்ட பெருமூச்சு அன்றைய சம்பவங்களிற்கு வடிகாலா இருக்கவேணும்.

பிறகு அருகிருந்தவள் அடியெடுத்துக் கொடுத்தாள். "பிறகென்ன குண்டு வீச்சு விமானங்களும், கெலியும், நேவிக்கப்பலும், ஷெல்லும் எங்கட ஊரை உழுது கொண்டிருக்க நாங்கள் அகதியாய் நாகர்கோவிலுக்கு போட்டம்" "பேந்து" "என்ன பேந்து... நான் என்ன தொடர் காதையோ செல்லுறன். பேந்து, பேந்தென்று கேட்க" அந்தப் போராளி தன்னைச் சமாளித்துக் கொண்டு சூழ்நிலையின் இறுக்கத்தையும் போக்கினாள். பிறகு தானே சொன்னாள். "இன்டைக்கு எங்கட ஊரைப் பிடிச்சிட்டம். ஆனால் இந்த ஊர் வழியாலே போய் அவன் பிடிச்ச ஆனையிறவைப் பிடிக்கேல்ல. ஆனா நாளைக்கு இந்த நேரமெல்லாம் ஆனையிறவில் கொடி பறக்கும். அவன் எந்த வழியாலை போய் ஆனையிறவை பிடிச்சானோ அதேமாதிரி இண்டைக்கு இரவு நாங்கள் போராளிகளை தரையிறக்கி விடுவோம்"

அனைவரின் மூளைகளும் தரையிறக்கத்தைப் பற்றி மீண்டும் சிந்தித்தன. அந்த இறுகிய சூழ்நிலையின் இறுக்கத்தைப் போக்க விரும்பிய அந்தப் பெண் போராளி சொன்னாள். "நான் செத்தால் வீட்டை போய் அம்மாட்ட சொல்லுங்கோ இரண்டு கிடாரம் நிறைய கஞ்சி காச்சி ஒரு றபர் கரண்டியும் சீனியும் கொடுத்தால் காணும் என்று" "என்னத்திற்கு" என்று அருகிலிருந்தவள் கேட்க "என்ர எட்டுக்குத்தான். இல்லாட்டி உங்கட ஆழமான வயிறுகளுக்கு சமைச்சுக் கட்டுப்படியாகாது" அவளின் தீவிரமான கதையைக்கேட்ட அனைவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

எமது நிழல்களை கிழக்குத் திசைப்பக்கம் நகர்த்தியவாறு சூரியன் மேற்கு நோக்கி சரிந்திருந்தான். முனையில் நுரை கட்டிய கடலலைகள் கரையோடு உறவாடிக் கொண்டிருந்தன. படகுகள் ஒவ்வொன்றாக கடலில் இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. மடக்குகளைத் தாண்டி இயந்திரங்கள் உறும படகுகள் கடலிற்குள் சென்று கொண்டிருந்தன.

"முந்தியெண்டா எங்களைக் கடற்கரைக்குக்கூட விடமாட்டினம். இப்ப நாங்கள் ஆழ்கடலில்கூட பயணம் செய்யிறம், சண்டை பிடிக்கிறம்." இது படகில் இருந்த பெண்போராளி ஒருத்தியின் மன வெளிப்பாடு. உண்மைதான், கரை உரசிச் செல்லும் கடலலைகளில்கூட பெண்களின் பாதங்கள் பதிந்தால் கடல் குமுறும் என்ற அர்த்தமற்ற கதைகளால் அடக்கப்பட்ட அதே பெண்கள்தான் இன்று படகோட்டி களாக, இயந்திர திருத்துனர்களாக, ஆயுத இயக்குனர்களாக, வழிகாட்டி களாக, கட்டளையதிகாரிகளாக பற்பல பணிகளில் வளர்த்தெடுக்கப்பட்டு பணிபுரிகின்றார்கள். கரிகாலத் தலைவனின் தீர்க்கதரிசன வழிகாட்டலில் மிளிரும் கடற்புலி மகளிரணியினர் இன்றைய தரையிறக்கத்தின் பணியிலும், தற்பாதுகாப்பிற்காக சண்டையிடும் பணியிலும் பல கடமைகளைப் பொறுப்பெடுத்துள்ளார்கள். அதே கடல்தான். ஆனால் இன்று



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலையளவு உயரும் அலைகளைக் கூட எதிர்த்து நிற்கும் வலுவை 'அண்ணா' எங்களிடம் வளர்த்துள்ளார்.

சூரியன் மேற்குத்திசை முகத்துள் தன் ஒளிமுகத்தைப் புதைத்து இருள்மையை தோற்றுவித்திருந்தான். மடக்கால் அணியம் திரும்பாமல் அணியத்திற்கு கயிறு போட்டு பிடித்திருந்தனர். தரையிறங்கிச் சமராடும் பெண், ஆண் போராளிகள் உற்சாகத்தோடு படகுகளில் தாவி ஏறினர். அவர்களின் சொல்லும் செயலும் வெற்றி வெற்றி என்பதாகவே இருந்தது. படகுகளில் ஆயுதங்களோடு, இராணுவப் பொருட்களோடு ஏறச் சிரமப்பட்ட போராளிகளுக்கு கை கொடுத்து நாங்கள் ஏற்றிய போதெல்லாம் எங்கள் உடல்கள் சிலிர்த்துப் போயின. இவர்களை நாங்கள் கவனமாய் கொண்டு போய் இறக்க வேணும். இவர்கள் எங்கட தாய் நிலத்தை கூறு போட்டு சிதைக்கும் பகைவனின் சிரசறுக்கப் போகிறவர்கள். இவர்கள் எம்மவர்கள். எங்களின் நேசத்திற்குரியவர்கள். இந்தப் பணியின் முடிவில் இவர்களில் எத்தனை பேரோ...? எங்களிலும்தான் நினைவுச் சுமையால் குளிர்கால நிலையையும் மீறி.

படகுகள் கரையிலிருந்து மேல் எடுக்கப்பட்டு நகரத் தொடங்கின. அமைதி. இயந்திரங்களின் ஒலிகளைத் தவிர பிற சலனங்கள் இல்லை. படகில் இருந்த போராளி ஒருவர் "என்னக்கா உங்கட படகுச் சில்லிற்கு காத்துக் காணாது போல" நாங்கள் சூழலை மறந்து விட்டுச் சிரிந்தோம். அணியத்தில் அலை மோத ஏற்பட்ட சத்தத்தை வைத்தே அப்போராளி நகைச்சுவையாகக் கூறினார்.

எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களைத் தாண்டி குடாரப்பு மணற்பரப்பில் இரகசியமாக முதலாவது அணி தரையிறக்கப்பட்டுவிட்டது. இரண்டாவது அணி நகர எதிரி விழிப்படைந்து தாக்க வர சண்டை அணியினர் வழிமறித்துத் தாக்கத் தொடங்கினர். தரையிறக்கும் அணிகளை எதிரியணி தாக்கவிடாமல் தீவிரமாகச் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தற்காப்புச் சண்டையில் ஈடுபட்ட அனைவரிற்குள்ளும் ஒரே மாதிரியான ஆவேசமையமே கருக்கட்டியிருந்தது. தரையிறங்கும் அணிகளிற்கு அடிவிழக்கூடாது. எங்கட தலைகளைக் கொடுத்தாவது அவர்களைக் காப்பாற்ற வேணும். விழுப்புண்ண டைந்து, வீரச்சாவடைந்து கரை வந்த படகணிகள் உடனே மீள் ஒழுங்கு படுத்தப்பட்டு கடலில் களமிறக்கப் பட்டன. எம்மிடமுள்ள மீதி வளங் களையும் பயன்படுத்தி மீள, மீள நாங்கள் இத்தரையிறக்கத்தில் பங்கெடுத்தோம், சோர்வை எம்மிடம் அண்ட நாங்கள் விடவேயில்லை. எமக்குத் தரப்பட்ட பணியின் முக்கியத் துவமே எமை உழல வைத்தது.

இந்தப் பணியில் எங்களில் எத்தனை பேர்களைக் கொடுத்தாலும் பறவாயில்லை வெற்றியாய் முடிச்சுக் கொடுக்க வேணும் என்ற எண்ணமே எம்மைச் சுற்றிக் கொண்டிருந்தது. தரையிறங்க வேண்டிய அணியினர் விரைவாகத் தரையிறக்கப்பட்டுக் கொண்டிருக்க உசார் நிலையிலிருந்த எதிரி எமது படகணிகளை தரையிலிருந்தும் தாக்கத் தொடங்கினான்.

இருள் பிரிந்து ஒளி பிறந்த அமைதியான அதிகாலைப் பொழுதின் இனிமை, யுத்த ஓசைகளால் கலைந்து கொண்டிருந்தது. இதுவரையும் இரு முனையில் தாக்கப்பட்ட எமது அணிகள் மூன்றாவது முனையாக வான் வழியாலும் தாக்கப்படத் தொடங்கியது. பத்தொன்பது பலம் கூடிய, பீரங்கிகள், நவீனகனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட பகைக்கலங்கள், வான் வழி வந்து தாக்கும் வான்கலங்கள், தரையிலிருந்து எதிரி ஏவும் எறிகணைகள், தரையில் நிரை நிரையாக விட்டுத் தாக்குதல் நடாத்தும் டாங்கிகள் இவ்வளவு பேராயுதங்களும் கடலில் நிற்கும் எமது அணியினரைக் குறிவைத்துத் தாக்க தரையிறக்கம் ஓயாத அலையாகி தரைதட்டிக் கொண்டிருந்தது.

இமை அசைவின் இடைவெளி களற்ற சன்ன மழையின் சிதறல்கள் நீலக்கடலை குத்திக்குதறிக் கொண்டிருக்க படகணிகள் எங்கள் இருப்பிடங்களை நோக்கி வந்து கொண்டிருந்தன. எம் மனங்களில் ஆழவேரோடிய தரையிறக்கத்தை, எங்களிடம் உள்ள வளங்களைக் கொண்டு இறுகிய ஒவ்வொரு கணங்களிலும் தலைவர் வளர்த்தெடுத்த மனோ உறுதியை துணைக்கிழுத்தபடி செய்து முடித்திருந்தோம்.

பணி முடிவில்,

தரையிறக்க அணியினரை ஒருமுகப்படுத்தி வழிநடாத்திக் கொண்டிருந்த கில்மன் வீரவேங்கை மேஜர் கில்மனாகத் தனக்குரிய படகில் கிடந்தான். இது வரையும் உயர் அலைவரிசை சாதனத்தில் தெளிவாக ஒலித்து கட்டளையை வழங்கிய குரல் ஓய்ந்திருந்தது. கில்மனைக் கொண்டு வந்த படகோடு எங்கள் படகை அணைத்து கில்மனைப் பார்த்தோம். இந்த தரையிறக்கத்திற்கு முதுகெலும்பாக உழன்றவர்களில் அவனும் ஒருவன். அந்தக் கில்மனின் குருதி ஓடி எமது பாதங்களை நனைத்துக் கொண்டிருந்தது. பணியின் நோக்கம் புரிந்து, தாக்கப்பட்டு இயங்கமறுத்து கடலில் நின்ற படகுகளிற்கு எல்லாம் தனியே தனது படகைக் கொண்டு, எதிரியணிகளோடு ஓர்மமாய்ச் சண்டையிட்டு அந்தப் படகுகளை உரிய இடங்களிற்கு நகர்த்திச் சென்றவன் அவன். அந்தக் கில்மன் பணிக்கான வெற்றிக்காக குருதியில் குளித்துக் கிடந்தான். விழிவரை வந்த நீரைக் கட்டுப்படுத்திய வாறு கில்மனைப் பார்த்தோம். கில்மன் அமைதியாய் இருந்தான். எமது பணி வெற்றியோடு முடிந்துவிட்ட ஆத்மார்த்தமான அமைதியோடு.

தரையிறக்கப் பணியை, விநியோகப் பணியை வெற்றியோடு முடித்துவிட்டு எங்களது படகுகள் இருப்பிடங்களை நோக்கி வந்த போது எங்கள் மனங்கள் இளகியிருந்தன. ஓர் வரலாற்றுப் பணிக்கு அடித்தளமிட்ட அமைதியில்.

கால்கள் நனைத்த அலைகளைப் பார்த்தோம். மீண்டும் அவை கடலுக்குள் உயர, ஓயாத அலைகளாக உருப்பெற்றுக் கொண்டிருந்தன. நிகழ்வுலகை அவை எமக்குப் படம்பிடித்துக் காட்டியது. நாளையும் நாங்கள் படகேறுவோம் ஓயாத அலைகளாக.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எங்கள் பார்வையில்...

# பலிகொண்டு பழிதீர்க்கும் அணுகுமுறைக்கு பதில் என்ன?

யாழில் தங்களை 'மீட்பர்'களாக வெளியுலகத்திற்குக் காட்ட முனைந்த சிங்கள இராணுவம் தென்மராட்சியில் மக்கள் வாழும் பிரதேசத்தினுள் தொடர்ச்சியாக எறிகணைகளை வீசி அப்பாவிப் பொதுமக்களின் பல உயிர்களைப் பலிகொண்டுள்ளது. பலர் ஊனமடைந்தும், காயமடைந்தும் உள்ளனர். மக்கள் யுத்தக்களத்தைவிட்டு வெளியேறக்கூடிய பாதைகளில் தொடர்ச்சியாக எறிகணைகளை வீசுவதன் மூலம் மக்களை வெளியேறவிடாது தடுப்பதை இராணுவம் சாதித்துவருகிறது.

யாழ் மக்களின் 'காப்பாள'ராக தங்களைக் காட்டிக்கொண்ட சந்திரிகா அரசாங்கமோ களப்பிரதேசத்திலிருந்து மக்களை வெயியேற்றுவதற்காக புலிகள் விடுத்த யுத்தநிறுத்த வேண்டுகோளை கேள்விக்கிடமின்றி நிராகரித்துவிட்டது. மனிதாபிமான அமைப்புக்களூடாக மக்களை வெளியேற்றுவதற்கான யுத்த இடைநிறுத்தத்திற்காக இருமுறை அரசாங்கத்தை புலிகள் அணுகிய போதும் அரசாங்கம் அதைப் புறக்கணித்துவிட்டது.

தன் யுத்தத்தின் தோல்விகளை அப்பாவித் தமிழ்மக்களைப் பலிகொண்டு பழி தீர்த்துக்கொள்வது சிங்களப் பேரினவாத அரசின் புதிய அணுகுமுறையல்ல. அது மிகப் பழைய அணுகுமுறையாக இருந்து இன்றும் தொடர்கிறது அவ்வளவே.

ஆனால் மனிதாபிமான அமைப்புக்கள் தொடர்ந்தும் இது விடயத்தில் கையாலாகாத்தனத்துடன் இருப்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை வேதனைக்குரிய விடயமே. மக்கள் இது விடயத்தில் இவ்வமைப்புக்கள் மீது சினமடைந்து வருவதும் தவிர்க்க முடியாததே.

சிங்கள அரசின் இத்தகைய மக்களைப் பலிகொண்டு பழிவாங்கும் பயமுறுத்தல் அணுகுமுறை, தமிழ் மக்களைப் பணியப்பண்ணுவதிலோ, அவர்களின் விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிப்பதிலோ எந்த வெற்றியையும் இத்தனை ஆண்டுகளாகியும் அடையவில்லை. மாறாக மக்களிடம் சிங்கள அரசு பற்றிய விழிப்புணர்வும், விடுதலையின் அவசியம் பற்றிய தீர்மானகரமான முடிவுமே வலுப்பெற்றது.

இன்று அரசு ஆனையிறவில் சந்தித்த தோல்வி சாதாரண தோல்வியல்ல. இது ஒரு சமரில் மட்டும் புலிகள் அடைந்த வெற்றியுமல்ல. அரச இராணுவம்- புலிகளுக்கிடையிலான இராணுவச் சமநிலை கடந்த இராணுவ மேலாண்மையை புலிகள் அடைந்துவிட்டதற்கான வெற்றி இது. இராணுவச் சமநிலையில் புலிகள் மேலோங்கி நிற்பதை சர்வதேச ஊடகவியல்கள் ஏற்றுக்கொண்டுள்ள அரசின் தோல்வி இது.

இத்தகைய வெற்றியின் தொடர்ச்சியாக புலிகள் யாழ்ப்பாணத்தை மீட்டுச் செல்வதற்காக அடுத்தகட்ட நடவடிக்கையை உடனடியாகவே ஆரம்பித்ததும் அதில் கொழும்புத்துறை தொட்டு சாவகச்சேரி ஈறாக புலிகள் மீட்டெடுத்து அடுத்த நடவடிக்கைக்காக காத்திருப்பதும் அரசால் ஜீரணித்துக்கொள்ளக் கூடியவையல்ல.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் வெற்றி நிச்சயிக்கப்பட்டுவிட்டதாயும் அரசபடைகள் பின்வாங்கிக்கொள்வதே சாதுரியம் என்றும் இராணுவ வல்லுனர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் புலிகள் அடையப்போகும் வெற்றி அரசியல், இராணுவ ரீதியில் அவர்களை எந்தளவு தூரம் உயர்த்தும் என்பதையும், அது விடுதலைப் போராட்டத்தில் எத்தகைய திருப்புமுனைகளை, வேகத்தை ஏற்படுத்தும் என்பதையும் விளங்கி அரசு அச்சம் கொண்டேயுள்ளது.

மொத்தத்தில் சிங்கள தேசத்தை உலுப்பியெடுக்கக்கூடிய வரலாறு கண்டிராத தோல்வி ஒன்றை இராணுவம் எட்டும்போது, அதற்கான பழிவாங்கல் அணுகுமுறை எப்படி அமையும் என்பதே அச்சத்திற்குரியது. அத்தகைய ஒரு நிகழ்வைத் தடுத்து நிறுத்தக்கூடிய ஒரு முன்முயல்வை, வல்லமையை இந்த மனிதாபிமான அமைப்புக்கள் கொண்டுள்ளதா என்பது கேள்விதான்.

ஆனால் தமிழ் மக்கள் தம் வரலாறு முழுவதும் இத்தகைய அரச பயங்கரவாதத்திற்கு தக்க பாடம் கற்பித்தே வந்துள்ளனர். துயரங்களில் துவண்டாலும், வேதனைகளைக் கடந்து வெற்றிக்காக வீறுகொண்டு எழுவதே வரலாறு எம்மை வளர்த்தெடுத்துவந்த வழி. இனியும் தமிழ் மக்கள் மீது அரசு தன் நீசச்செயலைப் புரியவிளைந்தால் அது தக்கபாடம் படிக்கும்; தமிழ் மக்கள் படிப்பிக்க வேண்டும்.

***"சுதந்திரப் பறவைகள்" பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் [2000 வைகாசி, ஆனி]***


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



இப்புவியிலே முதன்முதலாக ஒரு கல உயிரினங்களே தோன்றியதாக கூர்ப்புக் கொள்கையை உலகிற்கு அறிவித்த விஞ்ஞானி சாள்ஸ் டார்வின் 19 நூற்றாண்டின் ஆரம்பத்திலே குறிப்பிட்டிருந்தார் அன்றிலிருந்தே பெரும் சர்ச்சைக்கும் ஆராய்ச்சிக்கும் உரியதாக இருந்த மரபணுவியல் இன்று பெரும் தொழிற்துறையாகவும் பரிணமித்துள்ள அதேவேளை பெரியதொரு உலக அதிசயமாகவும் பிரமாண்டமாய் எழுந்து நிற்கின்றது. இது வரைகாலமும் மனிதன் பிறப்பதும் இறப்பதும் இறைவன் கையில் என்றிருந்த நம்பிக்கையை 2000ஆம் ஆண்டில் விஞ்ஞானிகள் தகர்த்தெறிந்து மனிதனின் மூலமான உயிர்கலத்தின் நிறமூர்த்த செயற்பாடுகளை ஆயந்தறிந்து மனிதனின் நீண்ட ஆயுளினதும், பிறப்பின் மரபுசார் வழியைத் தகர்த்து படியாக்கல்(Cloning) மூலம் உயிரினங்களைப் பிரசவிக்கும் சாத்தியத்தையும் உலகிற்கு அறிவித்துள்ளனர்.

1950 ஆம்ஆண்டிலேயே மனிதனின் உடலில் உள்ள மூலக்கூறுகளையும் தன்மைகளையும் டி.என்.ஏ(DNA- Deoxyribonucleic acid) உள்ளடக்கியிருக்கின்றது என்பதை அறிஞர் வாட்சன் கண்டு பிடித்தார். அதன் பின்னர் " பல படி நகல்" மூலம் டாலி ஆட்டுக் குட்டி பிறந்தது.

தலைமயிரிலும் 50 மடங்கு நுண்ணிய டி.என்.ஏ நிறமூர்த்தங்களைப் பற்றிய ஆய்விற்கு மனித மரபணு ஆய்வு (Human Genom) என்று பெயர். இவ்வாய்வு முயற்சியில் பன்னாட்டு நிறுனங்களினதும் வல்லுனர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். மனிதன் முதன்முதலாக வானில் பறந்த வேளையி




உருப்பெருக்கப்பட்ட நிறமூர்த்தம்

# மரபணுவியலின் புதிய பரி

லும், சந்திரனில் காலடி எடுத்து வைத்ததிலும் பார்க்க அதி அற்புதமான சாதனை ஒன்று கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதி வாசிங்டனில் வைத்து உலகிற்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. மனிதகுலத்தின் 100,000 ஆண்டு வரலாற்றுச் சாதனை இது என உயிரியல் விஞ்ஞானிகள் புளகாங்கிதமடைந்தனர். புவியின் இயற்கை அமைப்பிலேயே புதிய பரிமாணத்தை இந்நிகழ்வு ஏற்படுத்தியுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் மரபணு நிறுவனமான செலெறாவும், மனித நிறமூர்த்த ஆராய்ச்சிக் குழுவும் இணைந்து சர்வதேச அதிசயமாம் மரபணுக் குறியீடு ஒன்றை அறிவித்துள்ளனர். சமாந்தரமான முறையில் அவர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியின் விளைவாக மரபணுக்களின் முழு வடிவத்தையும் குறியிட்டுக் காட்டுவதில் பெருமளவில் வெற்றியும் ஈட்டியுள்ளனர்.

இதில் செலெறா வெளியிட்டுள்ள முன்னேற்றகரமான அறிக்கையில் 3.1 பில்லியன் குறிகள் 23 சோடி நிறமூர்த்தங்களில் (Chrosomes) உள்ளடக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளது. மறுவளமாகக் கூறுவதானால் விஞ்ஞானிகள் டி.என்.ஏ கொண்டுள்ள அமினோ அமிலங்கள் பற்றிய மிகத் திட்டமான வரைவில் சங்கிலித் தொடராக ஆய்ந்தறிந்தவற்றைக் குறிப்பிட்டிருந்தனர். மனித இனத்தின் மூலப் படிவமாக்க முயன்றிருந்தனர். நவீன தொழில் நுட்பத்தின் வாயிலாக ஒத்திசைவான வேக இயந்திரங்களின் 1000 பிரிவுகள் ஒவ்வொரு டி.என்.ஏ துண்டங்களையும் பதிவு செய்தன.

## டி.என்.ஏயின் தொடர் நிகழ்வுகள்




1 குரோசோம்களின் உள்ளே உள்ள டி.என்.ஏ குறிகள். குரோசோம்கள் ஆர்.என்.ஏ எனப் படும் றைபோ நியூகிளிக் அமிலத்தினைக் கொண்டுள்ளன.

2 புரதக்கலங்களால் ஆன ஆர்.என்.ஏ ஆனது கருவிலிருந்து புறப்பட்டு றைபோசோம் களோடு தொடர்பு படுகின்றது.

3 ஆர்.என்.ஏயும் றைபோசோம்களும் அமினோ அமிலங்களால் ஆக்கப்பட்டவை.

4 அமினோ அமிலமும் புரதப்பொருளால்ஆக் கப் பட்டதாகும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்


மனித பிரயத்தனத்தின் குறிகாட்டியாக மரபணுவியல் உள்ளது. "மரபணுவை வெளியிலிருந்து பார்க்கும் பொழுது எதுவும் எங்களுக்குத் தெரியாது" என்று கூறினார் மரபணுவியல் வல்லுனரும், லூயி பாஸ்டர் ஆய்வு மையத்தின் இயக்குனருமான திரு. அன்ரனி டன்சி அவர்கள். "இங்கு முக்கியமானது என்னவெனில் ஜீன்கள் பற்றியது அல்ல. ஜீன்களுக்கிடையிலான உறவுகள் பற்றி ஆராய்வதே இங்கு முக்கியமானதாகும். இதனிலிருந்துதான் மனிதம் பற்றிய முழுப்படிவத்தையும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்." என்கிறார் சீனப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடாதிபதி சுங்செங்.

மரபணுத் தரவின் முக்கியமான உபயோகம் என்னவெனில் ஜீன்களின் செயற்பாடுகளை இலகுவாக விளங்கவும் அதே நேரத்தில் ஜீன்களின் முறையற்ற செயற்பாடுகள் மூலம் ஏற்படும் விசேட நோய்களை இலகுவில் சீர்செய்யக் கூடியதாகவும் இருக்கும். மரபணுத் தரவுகளின் மூலம் ஒரு மருத்துவர் இலகுவாக நோய்களை இனங்கண்டு சிகிச்சையளிக்கக் கூடியதாக இருக்கும். உதாரணமாக பிறப்பின் ஆரம்பத்திலேயே பிற்காலத்தில் ஏற்படக்கூடிய பாரிசவாதம் போன்ற நோய்களை இனங்கண்டு தீர்க்கக்கூடியதாக இருக்கும்.

# ணம்!


செலெறா நிறுவனத்தின் மரபணுப் பிரிவால் இவ்வாராய்ச்சியானது கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன்னர் 1999 செப்டெம்பர் 8ஆம் திகதி இம்முயற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இம்முயற்சியில் மரபியல் விஞ்ஞானி கிறைக் வென்டர் தலைமையிலான, கமில்டன் ஒ சிமித், மார்க் அடம்ஸ், ஜீன் மேயர், கிறாங்கர் சுட்டன் ஆகியோர் உள்ளடக்கிய ஐவர் குழு முழுமூச்சாக இம்முயற்சியில் ஈடுபட்டனர். மேரிலாண்டிலுள்ள றொக்வெல்லி மரபுக் கூறுகள் ஆராய்ச்சி மையத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாராய்ச்சிக்கு Genome Shotgun Sequencing என்று பெயரிட்டனர்.

செலறா நிறுவனத்தினால் மரபணுக் குறியீட்டை நிர்ணயம் செய்வதற்கு ஐந்து வகை தனிப்பட்ட மாதிரிகள் எடுக்கப்பட்டன. ஒரே நேரத்தில் ஆய்விற்கென மூன்று பெண்களினதும், இரு ஆண்களினதும் ஜெனோம்



செலேறா நிறுவனத்தின் தலைமை மரபணுவிஞ்ஞானி ஜே.கிறைக் வென்டர்

## மரபணுக் கலங்களின் ஒழுங்கமைப்பு






www.tamilarangam.net
தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் ஆய்விற்கென எடுக்கப்பட்டன. அவர்கள் முறையே அமெரிக்க வெள்ளையர், ஆசிய நாட்டுக்காரர், காக்கேசியர், அமெரிக்க கறுப் பினத்தவர் ஆகியோராவர். முதலில் மாதிரி கள் மாத்திரம் எடுக்கப்பட்டன. மாதிரிகளை அடிப்படையாக வைத்து மரபுக் குறியீடுகளின் அடிப்படை அலகுகள் கண்டறியப்பட்டன.

மரபணுவியல் குறியீட்டின் முழுவடிவத் தினையும் கொண்டு வருவதற்கு அமெரிக்க அரசின் தொடர்ச்சியான நிதியூட்டத்தினை யும் இவ்விஞ்ஞானிகள் குழு வேண்டி நிற்கின்றது.


வியட்நாம் யுத்தகாலத்தில் சாதாரண மருத்துவப் பணியாளராகப் பணியாற்றிய திரு. கிறைக் வென்டர் ஆரம்பத்தில் 24 வகையான வைரஸ்களின் டி.என்.ஏ மூலக் கூறுகளை எடுத்து பக்றீரியாக்களுக்கும் அவற்றில் இருந்து தாவரங்களுக்கும் பூச் சிகளுக்கும் பிரயோகித்துப் பார்த்தார். தற் பொழுது மனித மரபணுக் கூறுகளின் பொது மரபணுக் குறிகாட்டியை அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். உல கில் உயிர் வாழ்தல் என்பது அவசியமான தாகும். மனிதர்களிடையே பொதுவான பல வகை ஜீன்கள் காணப்படுகின்றன. அத்தோடு இப்புவியிலுள்ள ஒவ்வொரு ஜீன்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் எதுவும் காணப்படுவதில்லை. மனித இனத்தின் புர தக் கூறுகளில் 90 வீதமான புரதக்கூறுகள் ஏனைய பாலூட்டிகளிலும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த உலகில் மனி தனுக்கு ஏற்படுகின்ற வியாதிகளும் அவற் றிற்கான சிகிச்சையும் ஒரு உயிரியல் வட்டத் திலேயே உள்ளது. ஏனெனில் உடல் உபா தைகளுக்கு ஜீன்களில் ஏற்படும் பிரச்சனை கள்தான் காரணம். எமது உடலில் 50 மரப ணுக்கள் எமக்கு நல்லதையே செய்கின்றன.

இந்தவகையில் ஜெனோமின் ஒத்திசை வானது விஞ்ஞானத்தினதும் மருத்துவத் தினதும் புதிய தொடக்கத்திற்கு வித்திட்டு ஒவ்வொரு நோயிற்கான சிகிச்சையும் இலகு படுத்தப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு புற்று நோயை எடுத்துக் கொண்டால் அதனை நோயரும்பு காலத்திலேயே ஜீன்களிலிருந்து இனங்கண்டு தீர்வுகண்டு சரியான சிகிச்சை யளித்து புற்றுநோய்க்கான சாத்தியக் கூறையே இல்லாது செய்து விடலாம். "இது மாத்திரமின்றி கியூமன் ஜெனோம் ஆராய் வின் வாயிலாக பல நூற்றுக்கணக்கான மருந்தற்ற நோய்களுக்கு தீர்வு காண்ப தோடு மனித வாழ்க்கைக் காலத்தை 1200 வருடங்களுக்கு நீட்டிச் செல்லக்கூடிய சாத் தியக்கூறும் உள்ளது." பிரித்தானிய விஞ் ஞானி ஜான் செரிஸ் குறிப்பிட்டுள்ளார்

100,000 ஜீன்கள் மனித டி.என்.ஏயில் உள்ளன. 22 சோடி நிறமூர்த் தங்களையும் முதலில் விரிவு படுத்தி ஆய்ந்தறிந்துள்ள செலெறா நிறுவன விஞ்ஞானிகள் சுமார் 6500 ஜீன்களை இனங்கண்டு காப்பீட்டு உரிமத்தினைக் கோரியுள்ளனர். ஏறக்குறைய 3.5 பில்லியன் காலப் பழ மையான டி.என்.ஏ ஆனது முதல் தடவையாக அதனது முழு வடிவம் இனங்காணப்பட் டுள்ளது. 24 வகையான டி.என்.ஏ உள்ளது ஒவ்வொன்றும் ஒவ் வொரு குரோசோமிற்கு பொருத் தமானதாகும். 3.1 பில்லியன் இரசாயனக் கூறுகள் அடங்கி யுள்ள டி.என்.ஏ 23 சோடி குரோ சோம்களில் நிறைந்து காணப் படுகின்றது. குரோசோம்கள் ஆர்.என்.ஏ எனப்படும் Ribonucleic acid எனப்படும் புரதக் கூறுகளால் நிரப்பியுள்ளன. ஆர்.என்.ஏ ஆனது கருவிலிருந்து புறப்பட்டு றைபோசோமுடன் தொடுக்கப்பட்டுள்ளது. ஆர்.என்.ஏயும்றைபோசோமும் அமினோ அமிலத்தினால் உருவாக்கப்பட்டுள்ளன. இவை நேரடியாக கலச்செயற்பாட் டின் மூலம் புரதத்தினால் ஆக்கப்பட்டுள்ளது.


மரபணு விஞ்ஞானிகளில் ஒருவரான கலாநிதி ஜோன் சுல்ஸ்ரன்

மரபணுவியலின் முன்னேற்றத்தினால் எதிர்காலத்தில் இனப்பெருக்கத்திற்கு ஆண் பெண் தேவை இல்லாமல் செய்யப்பட்டுள் ளது. மனிதனின் 23 ஜோடி குரோசோம் களால் உருவாக்கப்பட்ட டி.என்.ஏ ஆய் வின்படி ஆண் பெண் இணைவிற்குப் பின் னர் கருவுறும் வேளையில் 22 குரோசோம் கள் இருக்கும், அவை பொதுவானவை. 23வது குரோசோம் ஆனது எக்ஸ் வை சேர்ந் தால் ஆண், இரு எக்சும் சேர்ந்தால் பெண்



என்பது நடைமுறை. படியாக்கல் மூலம் விஞ்ஞானிகள் உயிரினங்கள் பிரசவிப்பதை குளோனிங் முறை என்று கூறுவார்கள். இவ் வாறு இதுவரைகாலமும் தாவரங்கள், மற் றும் ஆட்டுக்குட்டி என்பன வெற்றிகரமாக எதுவித மரபுவழி ஆக்கக் கூறுகள் இல்லா மல் தனியே உயிர்க் கலங்களை வைத்தே பிரசவிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது மனிதனையும் இவ்வாறு உருவாக்குவதற்கு சாத்தியம் ஏற்பட்டுள் ளது. இதன் மூலம் 100 வருடங்கள் எடுக்கக்கூடிய விண்வெளிப் பயணத்தையும் மேற்கொள்ளலாம். விண்வெளிக் கலத் தினுள்ளேயே பயணம் செய்யும் நபரின் உயிர்கலத்திலிருந்த அவரையொத்த நபரை உருவாக்குவது சாத்தியம் என்று விஞ் ஞானிகள் தெரிவித்துள்ளனர்

இன்று உலகில் மரபணுவியல் மற்றும் நிறமூர்த்தங்களுக்கான ஆராய்ச்சி சர்வ முமாய் வியாபித்து நிற்கின்றது. உயிர்நுட் பவியல் எதிர்கால நம்பிக்கை மிக்க தொழிற் துறையாக மெள்ள மெள்ள தொழிற்றுறை யாளர்களின் மனதில் இடம் பிடித்து வருகின் றது. யப்பானிய தொழிற்றுறை முன்னணி நிறுவனங்களான சம்சுங், கிற்றாச்சி என் பன பெரும் முதலீட்டை உயிர்நுட்பவிய லில் ஈடுபடுத்தியுள்ளன. சிங்கப்பூர் அரசோ உயிர்நுட்பவியல் அறிஞர்களையும், இத் துறையில் முதலீடு செய்யவுள்ள முதலீட் டாளர்களையும் கவர்வதற்காக ஆய்வு கூடங்களை நிர்மாணிப்பதற்கு 577 மில்லி யன் டொலர்களை ஒதுக்கியுள்ளது.

செலாறா நிறுவனம், தனது அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தமது பெறுபேறு களை பரீட்சித்துப் பார்ப்பதற்கான தளத் தினை எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றது.

எதிர்கால உலகின் இயங்கு பொரு ளாய் மரபணுவியலின் புதிய பரிமாணம் இருக்கும் என்பதில் ஐயமில்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழு,
கனலேந்து கண்மணி....
நின்னையும் நினது
சுயத்தையும்
தகர்த்திடவென
தொலைத்திடவும் – நினது
அடையாளத்தை அழித்திடவுமென
அரக்கர் துடிப்பதனை– அன்பே
நீ அறியாயோ?
ஐயோ– என் இனியவளே
துன்பச் சுமையூறிய
கனவு நிறைந்த– நினது
கண்களால் எனைப் பார்க்காதே
நிமிர்,
காலத்தைப் பிரதிபலி...
இது,
நீயும் நானும் பகிர்ந்தளித்த
நிம்மதித் தூக்கத்திற்கான
நேரமல்ல
எழு,
கால்களில் குதிரை பூட்டு
கண்களில் கனலை ஏந்து...
எழுகையின் அறுவடை
விடியலாகட்டும்..



# நிமிர், காலத்தைப் பிரதிபலி

– தனிகை மாறன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடந்து முடிந்த ஐ.நா மனித உரிமைகள் உப ஆணைக்குழுவில்...

# ஐ.நாவின் சட்டவல்லுனர் சிங்களதேசத்தின் மேலதிகப் பிரதிநிதி

ஐ.நா மனிதர் உரிமை உப ஆணைக் குழுவினால் 26 அங்கத்தவர்கள் (சட்டவல்லுனர்கள்) பிரதிநிதித்துவப் படுத்துகின்றார்கள். இவர்களை ஐ.நா மனிதர் உரிமை ஆணைக் குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகள் விருப்பு வாக்குகளினால் தெரிவு செய்கின்றன.

சிறீலங்காவைச் சேர்ந்த திரு .ஆர்.கே.டபிள்யு. குணசேகரா என்பவர், 1998 ஆண்டு சிறீலங்கா வெளிவிவகார அமைச்சினால் முன்மொழியப்பட்டு ஐ.நா உப ஆணைக்குழுவிற்கு தெரிவானவர்.

இவர் தெரிவு செய்யப்பட்ட முதல் வருடமே சிறீலங்கா அரசின் செலவில் மற்றைய அங்கத்தவர்களுக்கு ஓர் ஆடம்பர விருந்து பசாரத்தை நடத்தினார். இவ் விருந்துபசாரத்தில் சிறீலங்கா அரசின் தமிழர்கள் மீதான இனப் படுகொலை நோக்கிலான மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்தி ஓர் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருந்தார் என்பதும் நாம் நினைவிற் கொள்ள வேண்டிய ஒன்று.

இங்கே ஈண்டு கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் ஐ.நா மனிதஉரிமைகள் உப ஆணைக்குழு உறுப்பினர்கள் "சுதந்திரமான அங்கத்தவர்களாக" அதாவது இன மத மொழி தேச நலன்களைப் பேணாது நடுநிலையானவர்களாக இருக்க வேண்டியது அவசியம். ஆனால் குணசேகரவோ உறுப்பினராக நியமிக்கப்பட்ட நாள் தொட்டு சிறீலங்கா அரசின் மற்றொரு பிரதிநிதியாகவே பணியாற்றுகின்றார்.

இவர் உபஆணைக் குழுவில் சமர்ப்பிக்கும், உரையாற்றும் விடயங்கள் யாவும் சிறீலங்கா சம்மந்தமானதாகவே இருக்கும். அதுவும் சிறீலங்கா அரசு தமிழர் தேசமெங்கும் புரியும் அட்டூழியங்களை நியாயப்படுத்தும் நோக்கிலேயே அமைந்திருக்கும். இவ்வாண்டு தமது எஜமான விசுவாசத்தை சற்று தூக்கலாகவே அள்ளி வீசினார்.

தமிழர் விடுதலை வரலாற்றில் பெருந் திருப்பத்தை ஏற்படுத்தியதும் தமிழர்களின் கல்வியைப் பாழடிக்கும் நோக்கத்தோடு, சிறீலங்கா அரசினால் அமுல்படுத்தப்பட்ட பல்கலைக்கழகத் தரப்படுத்தலின் உண்மைக் கோரத்தை வெளிப்படுத்த மறுத்த திரு. குணசேகர அவர்கள் முற்றிலும் மாறாக "கல்வித் தரப்படுத்தல் உண்மையில் சிங்களக் கிராமப் புற மாணவர்களையே பாதித்துள்ளது" என்று உண்மைக்குப் புறம்பாக குறிப்பிட்டதோடு மட்டுமல்லாமல் "இக்கல்வித்தரப்படுத்தலை தமிழ் மக்கள் தமக்குப் பாதிப்பானதாக பிழையாக விளங்கிக் கொண்டுள்ளனர்" என்று கூறி ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தையே முட்டாளாக்க முயற்சித்துள்ளார்.

தமிழர் பிரதேசங்களில் நிலவும் உணவு, மருந்து மற்றைய அவசியப் பொருட்களின் தடை, பற்றாக்குறை பற்றி பல அரசசார் பற்ற நிறுவனங்கள் காரசாரமாக சிறீலங்கா அரசைக் கண்டித்து இவருடன் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தியபோது, அவர் பதிலிறுத்ததாவது தெற்கிலும் மிகவும் மோசமான உணவு மருந்து பற்றாக்குறை நிலவுவதாகக் கூறி தமது பின்புலமாகத் திகழும் சிங்கள அரசின் செயற்பாட்டை சமன் செய்ய முற்பட்டுள்ளார்.

இலங்கைத் தீவில் அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டு அல்லற்பட்ட தமிழ்மக்களுக்கு உலகெங்கும் பறந்து திரிந்து குரல் கொடுத்த மனித உரிமைவாதியான திரு.குமார் பொன்னம்பலத்தின் கொலை குறித்து இவரிடம் மனிதஉரிமை வல்லுனர்கள் வினவியது சற்றேனும் கூசாமல்" திரு குமார் பொன்னம்பலம் தேசிய தொலைக் காட்சியில் கூறியது உங்களுக்குத் தெரியுமா?" என வினவியுள்ளார். அதாவது திரு. குணசேகராவின் கருத்துப்படி, திரு.குமார் பொன்னம்பலம் அரசின் ஏதேச்சாரத்தைக் கண்டித்தார் அதனால் அவர் கொல்லப்படவேண்டியவர். ஒரு மனிதஉரிமைவாதி சக மனிதஉரிமைவாதியின் மரணம் குறித்து அள்ளித்தெளித்த கருத்துக்கள் இவை. இங்கு திரு.குணசேகராவின் கருத்துக்கள் சிங்கள உறுமயவோ அல்லது வீரவிதான வினது கருத்துக்களுக்கோ சற்றேனும் குறைந்தவையல்ல.

ஐ.நாவில் அங்கம் வகிக்கும் பல அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும், மனிதஉரிமை வாதிகளும் "திரு. குணசேகராவும், அவரது உதவியாளர் திருமதி.டிபீக்கா யுடுகாமாவும் ஐ.நா மனித உரிமைகள் குழுவில் அங்கத்துவம் வகிக்க தகுதியுடையவர்கள் அல்ல. மாறாக அவர்கள் சிறீலங்காவின் ஊதுகுழல்களே அவர்கள்" என்று கூறுகின்றனர். அதாவது சிங்கள அரசு தனது அக்கிரமங்களை மூடிமறைக்க மேலும் இரு உத்தியோகப் பற்றற்ற அல்லது சட்டத்திற்கு முரணாக இரு பிரநிதிகளை ஐ.நா மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் கொண்டுள்ளது.

**-சுட்டி**

# ஐ.நா உபஆணைக் குழுவில் சிறீலங்காவை நோக்கிய கடும் கண்டனக்கணைகள்

ஐ.நா மனித உரிமை உப ஆணைக் குழுவின் 52வது கூட்டத் தொடர் ஜெனிவாவில் கடந்த யூலை 31 தொடக்கம் ஓகஸ்ட் 18 ஆம் திகதிவரை நடந்து முடிந்தது.

இம்முறை இக்கூட்டத் தொடரில் தமிழீழ மக்கள் மீதான மனித உரிமை மீறல்களை பல அரசசார்பற்ற நிறுவனங்கள் உப ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்து சிறீலங்கா அரச பயங்கரவாதத்தை காரசாரமாகக் கண்டித்திருந்தன.

இவ்ஆணைக்குழுவில் பேசிய மனித உரிமை வல்லுனர்கள் பலரும் சிறீலங்கா அரசின் கடும் போக்கை கடுமையாகச் சாடியிருந்தனர். கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற கருத்துப் பரிமாற்ற அமர்வில் உரையாற்றிய திரு. போலே பினோரோ கூறியதாவது, "சிறீலங்கா அரசு தமிழர்கள் மீது தொடுத்துள்ள போரில் பல தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்வதைக்கு உள்ளாக்கப்பட்டு, பின் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஐ.நாவின் பெண்கள் நலன்களுக்கு பொறுப்பான கலாநிதி ராதிகா குமாரசாமியின் அறிக்கையை மேற்கோள் காட்டி. பாதிக்கப்பட்ட தமிழ்ப்பெண்கள் விடயத்தை உப ஆணைக் குழு கவனத்திற் கொள்ளவேண்டும்" என்ற வேண்டுகோளோடு முடித்தார்.

15ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில் திரு லுயூ யூவோனே ஆற்றிய உரையில் "திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் கடந்த ஆண்டு என்னை இந்த மண்டபத்தில் சந்தித்துப் பேசினார். அவர் என்னிடம் தனக்கு பல பயமுறுத்தல்கள் வந்ததாகவும் தன்னைக் கைது செய்ய சிறீலங்கா அரசு எத்தனிப்பதாகவும் கூறினர். இன்று திரு. குமார்பொன்னம்பலம் கொல்லப்பட்டுள்ளார். திரு.குமார் பொன்னம்பலம் பட்டப்பகலில் கொழும்பில் ஜனவரி 5 ஆம் திகதி அவருடைய காரில் வைத்தே கொலை செய்யப்பட்டுள்ளார். திரு. குமார் பொன்னம்பலத்தின் கொலை இன்று வரை சரியான முறையில் விசாரணை செய்யப்படவில்லை. இவ்விடயத்தை உப ஆணைக்குழு கவனத்தில் எடுக்க வேண்டும்" என்று கூறினார். இவ்விதம் பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகளும், சட்ட வல்லுனர்களும் சிறீலங்கா மீது தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர். இம்முறையும் தமிழர் அவலங்களை உலகறியச் செய்யும் முகமாகவும் சிறீலங்கா அரசின் கொடூரச்செயல்களுக்கு சர்வதேச சமூகத்தின் முன் நீதிகேட்கும் வகையில் இக்கூட்டத்தொடரின் அனைத்து அமர்வுகளிலும் தமிழர் மனித உரிமைகள் மையம் கலந்துகொண்டதோடு உபஆணைக்கு கூட்டத்தொடருக்கென கடந்த மாத இறுதியில் அறுபது பக்கத்தில், தரவுகளுடன்கூடிய அறிக்கையொன்றினையும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போராட்டத்தின் நிழலில்

# அணையாத தீபங்கள்

அலை வந்து தாலாட்டும் மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட லெப் கேணல் ராஜன் 80களின் முற்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார். இணைந்து கொண்ட காலத்தில் இருந்து தமிழீழத்தில் இடம்பெற்ற பல்வேறு தாக்குதல்களிலும் முன்னின்று களமாடினார். மிகச் சிறந்த திட்டமிடல் வல்லுனராகவும், தேர்ந்த சண்டையாளராகவும் விளங்கிய ராஜன் அண்ணா கிட்டண்ணாவால் யாழ் குடாநாட்டை மீட்ட காலப்பகுதியில் காரைநகர் கடற்படைக் காவலரண் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். கிட்டண்ணாவின் வழிநடாத்தலில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று முக்கியத்துவமிக்க யாழ் பொலிஸ் நிலைய விடுதி முகாம் தாக்குதலில் கலந்து கொண்டு விழுப்புண் அடைந்தார்.

இந்திய இராணுவக் காலத்தில் வலிகாமம் பகுதியில் இந்திய இராணுவத்திற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதல்களில் பெரும்பாலானவை இவரது வழிநடாத்தலிலேயே நடத்தப்பட்டன. இக் காலப்பகுதிகளில் ராஜன் அண்ணா தனது போராளி நண்பர்கள் பலரை இழந்தபோதிலும் கண்ணீர் விட்டுக் கதறவில்லை மாறாக இறுகிய பாறையாக மண்ணிற்காக எந்நேரமும் உழைக்கும் தளபதியாக உறுதியாக நின்றார். அந்நிய இராணுவத்தின் ரவைகளால் அடிக்கடி தைக்கப்பட்டு, பிய்பட்டு, ரத்தம் கொட்டி, தழும்புகளால் நிறைந்த தேகம் அவருடையது.

இந்திய இராணுவம் போய் இரண்டாம் கட்ட ஈழப் போர் தொடங்கிய வேளையில் தமிழீழத் தேசியத் தலைவரின் மனங்கவர்ந்த தளபதியான ராஜன் அண்ணா யாழ் மாவட்டத் தளபதியாக நியமிக்கப்பட்டார். பலாலி, காங்கேசன்துறை, காரைநகர் என்று யாழ் குடாநாடெங்கும் எதிரிப் படைகளை முடக்கிவைக்க ஓய்வுளைச்சல் இன்றி உழைத்தார். கோட்டை முகாம் தகர்ப்பிற்கு தளபதி பானுவோடு இணைந்து களமுனையை வழிநடாத்தி விழுப்புண் அடைந்தார்.

தமிழீழத் தேசியத் தலைவரின் கனவுகளில் ஒன்றான தமிழீழத்திற்கான மரபுவழி இராணுவக் கட்டமைப்பை நிறுவுதலின் முதற்கட்டமாக சாளஸ் அன்ரனி சிறப்புப் படையணி உருவாக்கப்பட்ட வேளையில், அதனை தளபதி பால்ராஜ் அவர்களோடு இணைந்து நெறிப்படுத்தினார். பின்னர் அவரே அப்படையணியின் சிறப்புத் தளபதியாகவும் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட முதலாவது மரபுவழிச் சமரான ஆ.க.வெ படை நடவடிக்கையில் போராளிகளை பல்வேறு முனைகளிலும் வழிநடாத்தினார். தளபதி ராஜன் எல்லாவற்றிலும் நிறைந்து நின்றார். எல்லாப் பாத்திரத்தையும் தானே சுமந்தார். அனுபவமிக்க போரியல் கலைஞன். அவரது அனுபவங்கள் ஒவ்வொன்றும் மெய்சிலிர்க்க வைக்கும் கதைகள்.

எங்கள் தேசியத் தலைவரவர்களின் பெருங்கனவுகளின் உறைவிடமாக ராஜன் இருந்தார். இதனால் தான் அவர் மறைந்தபோது அவர் யுத்தகளத்தில் முன்முனையில் இருந்து விலத்தியே வைக்கப்பட்டிருந்தார். எமது சண்டைப் படையணிகளின் வழங்கலுக்கான பொறுப்பு அவரிடம் வழங்கப்பட்டிருந்தது. இத்தோடு தேசியத் தலைவரின் மனக்கருவில் உருவான அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரியின் பொறுப்பும் இவரிடம் கொடுக்கப்பட்டிருந்தது.

சிறந்த களமுனை அனுபவங்களைக் கொண்டிருந்த தளபதி ராஜன் எல்லா இடங்களிலிருந்தும் பொறுக்கியெடுத்த வீரர்களைப் பயிற்றுவித்தார். தன் அனுபவங்களைப் பிழிந்தெடுத்துக் கொடுத்தார். போர்க்கலை நுட்பங்களை கற்பித்தார். வியூகங்கள், விநியோகங்கள் வரைபடம் என்ற எல்லாவற்றையும் கற்பித்தார். இன்று களமுனைப் போரினை வழிநடாத்துகின்ற தளபதிகளில் பலர் தளபதி ராஜன் அண்ணாவின் பயிற்சிக்கல்லூரியில் பயிற்றுவிக்கப்பட்டவர்களே.

27.08.1992 அன்று பண்டத்தரிப்பில் நிலை கொண்டிருந்த எதிரிகள் மீது தாக்குவற்கென எமது போராளிகள் அணியொன்று புறப்படத்தயாராகியது ராஜன் அண்ணாவின் அனுமதியுடன். எதிர்பாராத விதமாய் எதிரியோடு பொருதவெனச் சென்ற எமது அணி எதிரியால் சுற்றி வளைக்கப்பட்டுவிடுகின்றது. தளபதி ராஜன் அண்ணா எதிரியின் முற்றுகைக்குள் உள்நுழைந்து எதிரி வியூகத்தை தகர்த்து ஒவ்வொரு போராளியாக மீட்கின்றார். ஒவ்வொருவராய் மீட்டெடுத்து அனுப்புகின்றார். இறுதியில் ராஜன் அண்ணாவோடு 8 தோழர்களும் திரும்பி வரவேயில்லை.

ரோமியோநவம்பர் தளபதி ராஜன் அண்ணாவின் சங்கேதப் பெயர். இப்பெயர் எதிரிப் படைகளுக்கு சிம்மசொப்பனம். எம் போராளிகளினதும் மக்கள் மனதிலும் நிறைந்துவிட்ட இனிய புயல். எண்ணற்ற தாக்குதல்கள், எண்ணற்ற தோழர்கள், அள்ளப்பட்ட ஆயுதங்கள் எண்ணிவிட முடியாதவை, எழுத்தில் வடிக்க முடியாதவை.



லெப்.கேணல் ராஜன்
(சோமசுந்தரம், ராஜன்)
மாதகல் - யாழ்ப்பாணம்.
பிறப்பு:14.02.66 - வீரச்சாவு: 27.08.1992

அது மட்டுமல்ல, எங்கள் மக்களும், தமிழீழ மண்ணும், மரம் செடிகொடிகளும் அவர் பேரைச் சொல்லும். அந்த அணையாத தீபம் ஒளிவீசிய பூமி எங்களது என்பதைத் தமிழீழம் தலை நிமிர்ந்து சொல்லும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாளொன்று தேய்ந்து நகரும்

விடியலில் மேனி
வியர்க்கும்
வேலியோரங்களில்
சருகுகள் சரசரக்க
மூச்சுக் குழல் சுவாசத்தை
பகிஷ்கரிக்கும்
இமை "பரண்" உடைத்து
விழிகள் எட்டு மேய்கையில்
வரிசையாய்
பச்சைப் பாம்புகள்
படுத்திருக்கும்.
கிழக்கின் பகலவன்
மெல்லென எழ
காலத்தின் இதழொன்று
வெறுமையாய் விரியும்
மெய் முகம் பூட்டி
பொய் முகம் பூண்டு
படலை கடந்து
பாதையில் ஏற
அன்னியக் காற்று
எங்களை அங்கீகரித்து
"ஹலோ" சொல்லும்
சுவாசம் சுதந்திரக் காற்றின்
சுகம் தேடும்.
இருபதடிக்குள் இரண்டு
"சென்றி" தாண்டி
ஓரமாய் நிற்க- பேய்கள்
உடல் தடவ
முகம் பொறுமையின்
சின்னமாய் புன்னகைக்க
உள்ளே
நீறு பூத்த நெருப்பு
நிறைந்திருக்கும்.
விஷ விதை தூவி
இங்கு பயிர் அழித்து
களை வளர்க்கும்
பாதகம் பதவிசாய்
அரங்கேறும்
மானிடத்துள் சூனியம்
முகாமிடும்
மனிதம் வெம்பி அழும்
மறவர் படையின்
காலடி ஓசைக்காய்
காதுகள் காத்திருக்க
நாளொன்று
தேய்ந்து நகரும்.

– திருநகர் பிரியா ஜெயக்குமார்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீள்பார்வை 2000

## ஜூலை

### 02.07.00

திருகோணமலை மூதூரில் 64 மைல்கல் தொலைவில் அமைந்திருந்த இராணுவப் பொலிஸ் கூட்டுமுகாம் ஒன்று விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டுள்ளது. இரவு 7 மணிக்கு இடம்பெற்ற இத்தாக்குதலில் 30நிமிட நேரத்தின் பின்னர் முகாமை பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து முகாமை குண்டு வைத்து தகர்த்தழித்தனர். பெருந்தொகையான சிங்களப் படையினர் கொல்லப் பட்ட இத்தாக்குதலில், பெருமளவிலான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

### 05.07.00

சிங்களப் படையின் மர்மக் குண்டுப் பார்சல் வெடித்ததில் மானிப்பாயில் சகோதரர்களான இரு பள்ளிச்சிறுவர்களும், பருத்தித்துறையில் ஒரு சிறுவனுமாக மூன்று தமிழச்சிறுவர்கள் கோரமான முறையில் கொல்லப் பட்டுள்ளனர்.

- யாழ் சம்பத்தரிசியார் கல்லூரி வளாகத்தினுள் பந்து விளையாடிக் கொண்டு நின்ற 11 வயது மைக்கல் நிசாந்தன் என்ற தமிழ்ச்சிறுவன் மீது சிங்களப்படை சுட்டதில், அச்சிறுவன் படுகாயமடைந்த நிலையில் போதனா வைத்திய சாலைக்குச் எடுத்துச் செல்லப்பட்டு மரணமானான்.

### 10.07.00

அரியாலை, கொழும்புத்துறைப் பகுதியில் பெருமெடுப்பில் முன்னேற முயன்ற சிங்களப் படைகளை எதிர்த்து விடுதலைப் புலிகள் மேற் கொண்ட எதிர்த்தாக்குதலையடுத்து சிங்களப்படைகள் பலத்த இழப்புக்களோடு பின்வாங்கினர். இத்தாக்குதலில் 40 படையினர் கொல்லப்பட்டனர். இருநூறுக்கும் அதிகமான படையினர் படுகாய மடைந்தனர். ஆறு மணித்தியாலங்களுக்கு மேல் இடம்பெற்ற இச்சமரில் எட்டு இராணுவச் சடலங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டதோடு பெருந்தொகையான ஆயுதங்கள் கைபற்றப்பட்டது.

### 11.07.00

வவுனியா மன்னார் வீதியில் சிங்கள இராணுவம் சென்ற பவள் கவச வாகனம் ஒன்று விடுதலைப் புலிகளின் கிளைமோர்த் தாக்குதலில் 5 சிங்களப்படையினர் கொல்லப்பட்டனர், ஐவர் படுகாயமடைந்தனர்.

### 16.07.00

வடமராட்சி அல்வாயைச் சேர்ந்த 16 வயதுடைய பள்ளி மாணவி ஒருவரை மாலுசந்தியிலுள்ள விஜயபாகு படைமுகாமைச்சேர்ந்த சிங்களக் காடையர்கள் இருவர் பலவந்தமாக இழுத்துச் சென்று கூட்டாக பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கியுள்ளனர்.

- மட்டக்களப்பு மைலங்கரச்சி மாரியம்மன் கோயில் திருவிழாவிற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பழனித்தம்பி சாம்பசிவம் (16 வயது), தேவராஜ் ஞானேஸ் (16 வயது) ஆகிய இரு மாணவர்கள் சிங்களப்படையால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

### 16.07.00

ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களான பிரித்தானியாவைச் சேர்ந்த திரு. றிச்சாட் கொவெற், திரு. றொபேட் எவான்ஸ் ஆகிய இருவரும் வன்னியில் தமிழ் மக்கள் படும் இன்னல்களை நேரில் கண்டறிந்து, சிறீலங்கா அரசு தமிழர் மீது திணித்துள்ள கொடுமை களுக்கு எதிராகக் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.



### 08.07.00

07.07.00 அன்று திருகோணமலையைச் சேர்ந்த 17 ஈழத் தமிழர்கள் தலைமன்னாரிலிருந்து தமிழ்நாட்டுக்கு அடைக்கலம் தேடி சென்றனர். இவர்களில் 16 பேர் தமிழக கரையோரமான அரிச்சமுனை பிரதேசத்தில் வலுக்கட்டாயமாக இடை நடுவில் தமிழக மீனவர்களால் இறக்கி விடப்பட்ட பின்னர், குமுதினி என்ற 16வயது இளம் பெண்ணை தமிழக மீனவர்கள் தம்முடன் படகில் பலவந்தமாகக் கடத்திச் சென்றனர். மறுநாள் (08.07.00) அரிச்சமுனைக் கடலோரம் சடலமாக மீட்கப்பட்டார். குமுதினி திருமணமாகி சில நாட்களே ஆகும். கணவனுடனேயே தமிழகத்திற்கு அடைக்கலம் தேடி வந்தார்.



### 13.07.00

யாழ் இந்துக் கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் சிங்களப் படையால் கொல்லப்பட்டார். 17.07.00 ஆம் திகதி இறுதிக்கிரியைகள் யாழ் கோம்பயன் மணல் மயானத்தில் இடம்பெற்றது. பெருந்தொகையான மாணவர்களும் ஆசிரியர்களும் திரண்டு வந்து சிங்களத்தின் அநீதிச் செயலை உலகறியச் செய்தனர்.

### 22.07.00

முல்லை- சுண்டிக்குளப் பகுதியில் சிங்கள விமானப்படை நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் நான்கு அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இரண்டு பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

### 23.07.00

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான F-7 யுத்த விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியுள்ளது.

### 26.07.00

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் சிங்கள அரசின் நிவாரணவெட்டு, மருந்துத் தடை, விவசாய உள்ளீடு களுக்கான தடை என்பனவற்றிற்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி யொன்றை தமிழீழ மக்கள் நடத்தியுள்ளனர்.

### 28.07.00

வெலிகடை சிறைச் சாலையில் தமிழ்ப் பொதுமகன் ஒருவரை சிங்களப்பொலிசார் மிலேச்சத்தனமான முறையில் தாக்கிக் கொன்றுள்ளனர் .

### 29.07.00

மன்னாரிலிருந்து தமிழகம் நோக்கிச் சென்ற 21 தமிழீழ மக்கள் படகு கவிழ்ந்ததில் பரிதாபமாகப் பலியாகினர்.

- மட்டக்களப்பில் சிறீலங்கா இராணுவ வாகனத் தொடரணி மீது விடுதலைப் புலிகள் நடாத்திய கண்ணி வெடித் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எட்டுப் பேர் காயமடைந்தனர்.

### 28.07.00

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் மேலும் ஒரு எலும்புக்கூடு மீட்டெடுக்கப்பட்டது. இது வரைக்கும் சிங்களப் படையால் படு கொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமக்களில் 55 பேர் எலும்புக்கூடுகளாக இப் பகுதிகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# "கண்கள் கூறும் வார்த்தைகள்"

www.tamilarangam.net

காணும் கண்களே,
கூறும் வார்த்தை
என்ன?
அஞ்சல் ஊடாக
எரிமலைக்கு...






**எரிமலை**
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*FRANCE.*

குறிப்பு: உங்கள் ஆக்கங்களை பத்து வரிகளுக்கு மேற்படாமல் எழுதவும்.

எங்கள் எதிர்காலத் தமிழீழத்தில்
சுதந்திர மகனாய்
வாழப்போகும் எனதருமை, இளம் சந்ததியினரே.
யாருக்காக, இந்தக் கொதிக்கும் வெய்யிலில்,
யார் வரவைப் பார்த்துக் கூடப்பிறந்தவனுடன்,
இந்தக் கடற்கரையில் காத்திருக்கின்றீர்கள்!
கடற்தொழில் புரியும் உங்கள் அப்பாவை,
எதிர்பார்த்து உள்ளீர்களா? இல்லையேல்
எங்கள் தலைவன் வழிநடாத்தும் கடற்படையாம்
கடற்புலிகளின் வரவிற்காய்
காத்திருக்கின்றீர்களா!

*முருகா–பலர்மோ, இத்தாலி*

நீண்ட நெடுங்கடலே நீலவானமே
கொண்ட கொள்கையில் பற்றும் உறுதியுமுள்ள
ஆண்ட தமிழினம் ஆள நினைப்பது தவறா?
மாண்ட எங்கள் வாழ்வும் மறைந்த மகிழ்ச்சியும்
மீண்ட சொர்க்கமாய் மீளக் கைகூடுமோ?
ஓயாத அலைகளின் சூரியப்புதல்வர்கள்
உள்ளவரை
காயாதே என் கண்மணிகாள்
தேயாத வெண்ணிலாபோல் ஒருபோதும்
சாயாத தமிழீழம் நாளை பிறக்கும்
தாயான உங்கள் தலைவரின் உறுதி இது.

*யாழினி– யூலிச், ஜேர்மனி*

கண்கள் கூறும் வார்த்தைகள்தான் என்னவோ
ஆழ்கடலும் அடிவானமும் இணையும் இடத்தில்
அங்கையற்கண்ணி அக்காள் துயில்
கொள்கின்றாளா
அதோ அங்கே சூரிய ஒளியில் பளிச் பளிச்சென
ஓயாத அலைகளில் மின்னுவது காந்தருபன்
கொலின்ஸ், வினோத் போன்ற எம்
அண்ணன்மார்களின்
வெற்றிப் புன்னகைகளா! கடல் கிழித்து
எம் மூதாதையர் அகிலம் ஆண்டனர், அமெரிக்கா
வரை சென்றனர். நீரோ எமக்காக கடலில் மூழ்கி
ஈழ முத்தெடுக்கச் சென்றீரோ!

*வல்வைப்பிறேம்– டோட்முண்ட், ஜேர்மனி*



அனாதரவாய் இருக்கும் இவர்களிற்கு என்ன சோகம்?
ஆம்! இவர்கள் தாய்தந்தையைத்
தொலைத்தவர்கள்.
இவர்களின் எதிர்காலத்தை
கடல் அடிவானில் தேடுகின்றார்கள்.
புதிய சூரியனாக இவர்களின் வாழ்வும் மிக
விரைவில் ஒளியுள்ளதாக ஆக்க நம்
வீரர்கள் அணிசெய்வார்கள் இனி என்ன கவலை?
நம் தமிழீழத்தின் மிகப்பெரும்
சக்தியாக இவர்கள் வளர்வார்கள்.

*இசைஞானவதனி–எல்ஸ்டோவ், ஜேர்மனி*

நெடுங்கடல் பார்த்தாயோ
நெஞ்சம் குவிந்து போனாயோ
கருங்கடல் அதுதான்
காவியமான களம்தான்
இருந்து பார் ஒரு போது
ஈழம் எங்கள் வசமாகும்
எழுந்து பார் மணல் விட்டு
எங்கள் தேசம் இதுவாகும்.

*சேயோன்–லண்டன்*

## கண்கள்கூறும் வார்த்தைகள் - ஜூன்

ஈன்றவளை இழந்து
இனிய தந்தையை இழந்து
இல்லறம் தொலைந்து
ஊர் உறவு உற்றார் சுற்றம்
முற்றும் தொலைந்து
முடிவில்லாத் துன்பத்திலும் ஓர்
முடிவான எதிர்பார்ப்பு
ஓயாத அலை மூன்றாய்
முற்றும் பகை முடித்து எம்
இருள் வாழ்வில் ஒளியேற்ற
எழுந்து வருகின்றதாம் புலி அலையாய்
இத்திசை என்றால் எமக்கும் விடிவென்று
ஏக்கத்துடன் எதிர்பார்ப்பு.

*ச.தவராசா–நொயிஸ், ஜேர்மனி*

என்றோ ஒரு நாள்
அதிகாலை மீன்பிடிக்க
ஆழ் கடல் சென்ற தந்தை
திரும்பி வரவேயில்லை என
கரையிலே காத்திருக்கும் பிஞ்சுகள்
ஓலைக்குடிசையில் சோகமே
உருவாக வாழும் தாய்- இவர்கள்
பசி பட்டினியுடன் காத்திருக்கும் பாலகர்கள்
நாளைய எதிர்காலம்
என்னவென்று இவர்களின்
கண்களில் நிறைய இருந்தாலும்
நாளை மலரும் தமிழீழத்தின்
மன்னர்கள் இவர்கள்தான்.

*வி.துஸ்யந்த்–அர்றோ, சுவிற்சர்லாந்து*

என் உடன்பிறப்பே உன் வயதினில்
நான் இருந்த போதுதான் தொழிலுக்குப் போன
உன் பாட்டனும் நம் அப்பனும் சிற்றப்பனும்
வருவார்கள் என அன்னையுடன் நானிருந்து
கண்பூத்துப் பார்த்திருந்தேன் இக்கரையில்
போனவர்கள் திரும்பவில்லை உயிருடன்
பிணமாகக் கண்டனர் சுற்றத்தார் நீ அறியாய் -
அது அன்று
இன்று நீ பார்ப்பது ஆதிக்க வெறியரின்
கடற்படைக்கலமல்ல
அது நம் தமிழ் கடற்படைப் படகுகள்
நாளை மலரும் ஈழத்திற்கு கடல் பாதுகாப்பு
தரும் படைதான் அது.
நாமும் எம் முன்னோர் போன்று உலாவரலாம்
கடற்புலிகள் துணையிருப்பார்
கலங்க வேண்டாம் தம்பி.

*உதயபாரதலிங்கம் –பேர்ண், சுவிஸ்*



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்பான வாசகர்களே! "[illegible]" "உறவுப்பாலமாக"
வெளிவரும்
எரிமலை இதழ்,




உலகமெலாம் பரவி வாழும்
நம்மவர் எல்லோரையும்
சென்று எட்ட வேண்டும்
என்பது எமது ஆவல்.
உங்களை வந்தடையும்
எரிமலை உங்கள் உறவுகளை,
நண்பர்களை சென்றடைகின்றத
இல்லையானால்....
அது உங்கள் பணி
நாளையே அவர்களும்
எரிமலை வாசகர்கள்
ஆகட்டும்!

## மாதம் ஒருமுறை எரிமலை நாடிவர நாடுங்கள்

**சுவிற்சலாந்து**
T.E.C.C
Postfach 2274
8031 Zurich
Tel:(41) 127 33 407

**இங்கிலாந்து**
U.T.O
202 Long Lane
London SE1 4QB
Tel:(44) 207 403 45 54

**ஜேர்மனி**
T.C.C
Postfach 101613
46016 Oberhausen
Tel:(49) 208 205 991 03

**பிரான்ஸ்**
T.C.C
341 Rue Des Pyrenees
75020 Paris
Tel:(33) 1 43 58 11 42

**இத்தாலி**
T.C.C
Via Paolo Balsamo -11
90100 Palermo
Tel:(39) 091 61 62 804

**நெதர்லாந்து**
T.C.C
P.O.Box 18600
2502 EP Den Haag

**டென்மார்க்**
L.T.T.E
P.O.Box 47
7400 Herning
Tel:(45) 97 21 76 49

**நோர்வே**
T.C.C
P.O.Box 1699,Vika
0110 Oslo
Tel:(47) 22 35 09 80

**சுவீடன்**
T.C.C
Glomminge Grand-25
3rd Floor,
16362 Spanga

**கனடா**
W.T.M
64 Eaton Ave, Toronto
Ontario M4J 2Z5
Tel:(1) 416 46 15 991

**அவுஸ்திரேலியா**
T.C.C
P.O.Box 375
Preston
Victoria 3072
Tel:(61) 03 95 47 83 00

**அமெரிக்கா**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica
New York 11432
Tel:(1) 718 657 94 63

எரிமலை இதழ் சார்ந்த தொடர்புகளுக்கும், உங்கள் நாடுகளில் தொடர்பு முகவரிகள் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ERIMALAI
C/O T.C.C -France
341 Rue Des Pyrenees
75020 Paris
FRANCE.

Fax: (33) 1 43 58 11 91
Email: erimalai@freesurf.fr

வாசகர்களே! எழுத்தாளர்களே!
உங்கள் மேலான கருத்துக்களை, ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை எரிமலையை உவக்கப்படுத்தும். அதன் தரத்தை மேலும் உயர்த்தும். இது உங்களின் எரிமலை.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

